www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

அக்டோபர் 2008
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 10.00



## அமெரிக்கா திவால்:

# டவுசர் கிழிந்தது!

படிப்பகம்

www.padippakam.com

# பிரெய்ன் வாஷ்



**வை**ரஸ் காய்ச்சலுக்காக மருத்து வரைப் பார்க்க போயிருந்தேன். கூட்டம் அதிகமாக இருந்ததால் வெளியே நின்று கையிலுள்ள பத்திரிக் கையைப் (புதிய ஜனநாயகம்) புரட்டிக் கொண்டிருந்தேன். பத்திரிக்கையை நோட்டமிட்டபடி அருகில் வந்தார் அந்த மருந்துக் கம்பெனியின் விற் பனைப் பிரதிநிதி. பார்த்தவர் பதட்டத் துடன் பேச ஆரம்பித்தார்.

''என்ன பாஸ்! இது ரொம்ப தீவி ரமான கம்யூனிஸ்டு பத்திரிக்கை யாச்சே! நக்சலைட்டெல்லாம் சரின்னு எழுதுவாங்களே! எலக்ஷனக் கூட பாய்காட் பண்ணனும்பாங்க!.. இத விரும்பி படிப்பீங்க போல?''

''ஆமாம். உண்மையைத்தானே சொல்றாங்க! நீங்க படிப்பீங்களா?''

''படிச்சிருக்கேன். ஆனா தொடர்ந்து படிக்க மாட்டேன். ரெகுலரா படிச்சோம்னு வச்சிக்குங்க .. அப்படியே நம்மள பிரைன்வாஷ் பண் ணிடுவாங்க!''

''அது என்னங்க.. துணி வாஷ் மாதிரி, பிரைன்வாஷ். அழுக்கா இருந்தா சலவைக்குப் போட வேண்டி யதுதானே!''

''ஐ மீன்.. பிரைன்வாஷ்.. மீன்.. எதையாவது ஒன்னச் சொல்லி அவங்க சொல்றதுதான் சரின்னு ஆக்கிடு வாங்க.. நம்மள அவங்க பக்கம் இழுத் துடுவாங்க.. புரியுதா!''

''எங்கயும் போயிடாதீங்க, தொடர்ந்து நிகழ்ச்சியைப் பாருங்கன்னு டி.வி.யுலயும்.. ஏன் உங்க மருந்துக் கம்பெனி முதலாளி வரைக்கும் எதை யாவது சொல்லி, பொருளை விக்கற துக்காக அவங்க பக்கம் நம்மள இழுக் கும்போது.. இந்தச் சுரண்டல் சமுதாய அமைப்பு மாறணும்னு தொழிலாளிங்க கருத்துச் சொன்னா அது தப்பா?''

''பாத்தீங்களா! உடனே தொழிலாளி முதலாளின்னு பேச ஆரம் பிச்சுடுவீங்க.. மனுசன இயல்பா ஃபீல் பண்ணவுடணும் பாஸ்! சும்மா எப்ப பாத்தாலும் 'அவன் ஒழிக! இவன் ஒழிக! புரட்சி'ன்னு பேசி பப்ளிக்கை டெர்ரர்ராக்கி .. லைப்ல ஒரு ஜாலியே இல்லாம .. வேஸ்டாயிடும் பாஸ்!''

''உழைக்குற எல்லாரும் அவுங்க தேவைக்கு ஏத்த மாதிரி 'இயல்பா' பணத்தை எடுத்துக்க முதலாளி விடுவானா? தொன்னூறு சதவீதம் பேரை ஜாலியா இருக்க வுடாம, 12, 16 மணிநேரம் வேலை வாங்கி 10 சதவீதம் முதலாளிகள் மொத்த சமூகச்சொத் தையும் சுரண்டிக் கொண்டிருக் கிறார்களே! இது உங்களுக்கு இயல் புக்கு மீறுனதாப் படலையா?''

''பாத்தீங்களா! மெல்ல மெல்லப் பேசி .. என்னையே பிரைன்வாஷ் பண் ணிடுவீங்க .. இதான் கம்யூனிஸ்டு வேலையே!''

''ஏன் நீங்க செய்யலையா? ஏற்கன வேதான் டாக்டர் மருந்து எழுதிக்கிட்டு இருக்காரே! அவரை இயல்பா இருக்க வுடறீங்களா? உங்க கம்பெனி மருந்து களைக் காட்டி, அதப் பத்தியே பேசிப் பேசி டாக்டரை ஏன் பிரைன்வாஷ் பண் றீங்க? நீங்க முதலாளிக்காக பிரைன்வாஷ் பண்ணலாம்! தொழிலா ளிக்காக மட்டும் யாரும் பேசக் கூடாது!? இல்ல!''

''பாஸ்.. என்ன புரிஞ்சுக்காம பேசு றீங்க? இது அட்வான்ஸ் மெடிசின்.. ஜனங்களுக்குத் தேவை.. சும்மா ஏனோ தானோ இல்லை.. பழைய மருந்துகளை விடப் புதுசு. வியாதியை அட்வான்ஸா க்யூர் பண்ணுது! இது தேவை இல்லையா? என்ன சயின்சும் வேணாம் பீங்க போல..''

''அறிவியல் வேண்டாம்னு சொல்லலை.. அதைப் பண்டமாக்கி விக் கிறீங்க நீங்க.. அதை சமூக மாற்றத் திற்கும் பயன்படுத்தலாம்ங்குறோம் நாங்க. இப்ப இருக்குற தனியுடமை, சுரண்டல், சாதி மத ஆதிக்க நோய்க ளுக்கு, அதை விரட்ட 'அட்வான்ஸா' அரசியல் மட்டும் கூடாதா? அதச் சொன்னா பிரைன் வாஷா!''

''இதாங்க.. உங்கள மாதிரி ஆளுங்க.. அது அதுக்கு ஒரு பதில் சொல்வீங்க.. பாசிட்டிவ்வா திங்க் பண் ணுங்க.. ஏன் நெகட்டிவாவே யோசிக்கி றீங்க.. சும்மா குறையை மட்டுமே பாக் குறீங்க.. எவ்வளவு மாடர்னா லைஃப் வந்துருக்கு.. சயின்ஸ், மருந்து, டெக் னாலஜி.. நாடு எங்கேயோ போயிட்டு இருக்கு! நீங்க என்னடான்னா சும்மா இல்லாததை மட்டுமே சொல்லி .. நீங் களும் டென்சனாகி, ஜனங்களையும் டென்சனாக்கப் பாக்குறீங்க.. இன்ன வொன்னு பாஸ்! இந்த கம்யூனிஸ்டு தாட் உள்ளவங்க.. நாங்க சொல்ற துதான் சரின்னு அடுத்தவங்க மேல ஏன் கருத்தைத் திணிக்கிறீங்க ..? இதுவே ஒரு வயலன்ஸ் இல்லையா?''

''சில பேருக்கு நீங்க சொன்ன எல்லா வசதியும் ஏன் இல்லாமல்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!

● புதிய கலாச்சாரம்

● மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

● போர் : 26
● குரல் : 3-5
● ஆகஸ்டு-அக்டோபர் 2008

உள்நாடு: ரூ. 10.00
ஆண்டுச் சந்தா: ரூ. 150.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா ரூ. 500.00

*சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600083.
தொலைபேசி: 044-23718706.
99411 75876.
மின் அஞ்சல் முகவரி:
pukatn@gmail.com
அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

*அட்டை வடிவமைப்பு:*
ஸ்பார்ட்டகஸ்

# ஈழம்: இந்திய மேலாதிக்கத்தை முறியடிப்போம்!

ஒரு இறுதித் தாக்குதலுக்கு உரிய மூர்க்கத்துடன் ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதலைத் தீவிரப்படுத்தியிருக்கிறது சிங்கள இனவெறி அரசு. புலிகளிடமிருந்து கிளிநொச்சியை கைப்பற்றி விடுவோம் என்று கொக்கரித்திருக்கிறார் இலங்கையின் தரைப்படைத் தளபதி சரத் பொன்சேகா. இந்திய அரசு துணை நிற்பதுதான் சிங்கள இராணுவத்தின் இந்தத் திமிருக்கும் வெறிக்கும் மிக முக்கியமான காரணம். இலங்கை இராணுவத்திற்கு நவீன ராடார்களும் போர்த்தளவாடங்களும் நிதியும் கொடுத்து புலிகளுக்கு எதிராக சிங்கள இராணுவத்தை ஏவி விட்டிருக்கிறது இந்திய அரசு. புலிகள் தொடுத்த எதிர்த்தாக்குதலில் இந்திய இராணுவ அதிகாரிகள் காயம்பட்டு குட்டு அம்பலமான பின்னரும் இவை எதற்கும் பதிலே சொல்லாமல் மவுனம் சாதிக்கிறது மன்மோகன் அரசு.

கருணாநிதியும் முடிந்தவரை வாய்திறக்காமல் இருந்து விட்டு, பின்பு வழக்கம் போல பிரதமருடன் தொலைபேசியில் பேசிவிட்டார். இலங்கை அரசுக்கு ஆயுதமும் ஆள்படையும் கொடுத்து உதவி வரும் இந்திய அரசு, உடனே இலங்கைத் துணைத் தூதரை அழைத்துத் தனது கவலையை வெளியிட்டிருக்கிறது. இதைவிடக் கேவலமான முறையில் தமிழக மக்களை இழிவு படுத்தமுடியாது.

துவக்கம் முதலே தெற்காசியப் பிராந்திய மேலாதிக்கம் என்ற தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் மட்டும்தான் இந்திய அரசு ஈழத்தமிழர் பிரச்சினையை அணுகி வந்திருக்கிறது. இலங்கையில் இந்தியத் தரகு முதலாளிகளின் நலன்கள், மற்றும் தெற்காசியப் பிராந்தியத்தில் இந்திய ஆளும் வர்க்கங்களின் அரசியல், பொருளாதார, இராணுவ மேலாதிக்கம், தெற்காசியப் பிராந்தியத்தில் எந்த ஒரு தேசிய இன விடுதலை இயக்கமோ, புரட்சியோ வெற்றிபெற்று விடாமல் தடுப்பது - என்ற இந்த நோக்கங்கள்தான் இந்திய அரசின் நடவடிக்கைகள் அனைத்தையும் தீர்மானித்திருக்கின்றன.

1983 இல் ஈழப் போராளி இயக்கங்களுக்கு ஆயுதமும் பயிற்சியும் கொடுத்து, அவர்களைத் தனது கைப்பாவையாக ஆக்கிக் கொள்வதன் மூலம் இலங்கை அரசின் மீது செல்வாக்கு செலுத்த முயன்றார் இந்திரா. இந்தியாவின் மேலாதிக்கத்திற்குக் கட்டுப்பட்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்ததால் 1987 இல் இந்திய இராணுவத்தை ஈழத்தின் மீது ஏவினார் ராஜீவ். கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்ததும், தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படைக்குக் காவு கொடுப்பதும் மேற்கூறிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத்தான். தற்போது உலகமயமாக்கல் கொள்கைகளின் ஆதாயத்தால் பெரிதும் கொழுத்து விட்ட டாடா, அம்பானி, மித்தல் போன்ற தரகு முதலாளிகளுக்கு தெற்காசியச் சந்தை முழுவதும் தேவைப்படுவதால், தெற்காசியா முழுவதும் ரூபாயையே நாணயமாக்குவது, தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயம் (சாப்டா) என்பன போன்ற கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இலங்கை அரசை சம்மதிக்கச் செய்யவும், ஆளும் வர்க்கங்கள் விரும்பும் 'அமைதியை' இலங்கையில் நிலைநாட்டவும்தான் இந்த இரகசிய இராணுவ உதவி செய்யப்பட்டிருக்கிறது. இந்த உண்மையை மறைப்பதும், இந்திய அரசை நடுநிலையாளனாகவும், தமிழ் மக்களின் ஆதரவாளனாகவும் சித்தரிப்பது ஈழத்தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே இருக்கும்.

ஈழத் தமிழ் மக்களுடைய போராட்டத்தின் பின்னடைவுக்கு புலிகளின் பாசிசப் போக்கு மிக முக்கியமான காரணமாக இருந்திருக்கிறது. எனினும் தற்போது நடைபெற்று வரும் தாக்குதலில் சிங்கள இராணுவம் வெற்றி பெற்றால், தமிழர்கள் இலங்கையின் இரண்டாந்தரக் குடிகள் என்ற நிலையை அது உறுதி செய்துவிடும். ஈழப்போராட்டத்தை நசுக்குவதன் மூலம் இந்தியாவின் தேசிய இன விடுதலைப் போராட்டங்களையும் தார்மீக ரீதியில் பலவீனமாக்க முடியும் என்பதே இந்திய ஆளும் வர்க்கங்களின் நோக்கம்.

எனவே ஒரு அநீதியான இனவெறித் தாக்குதலை எதிர்ப்பது, ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்குக் குரல் கொடுப்பது என்ற நோக்கில் மட்டுமின்றி, இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்பது என்ற நோக்கிலும் போராட்டங்கள் ஒருமுகப்படுத்தப் படவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கா திவால்: டவுசர் கிழிந்தது!

அமெரிக்கா திவாலாகி விட்டது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முந்தைய பிரான்சை அமெரிக்காவின் நிலைமை நினைவூட்டுகின்றது என்கிறார் ஒரு பத்திரிகையாளர். கடந்த செப்டம்பர் 7-ஆம் தேதி ஃபான்னி மே, ஃபிரட்டி மாக் என்ற இரு வீட்டு அடமான வங்கிகள் திவாலாவதைத் தடுக்க அவற்றை அரசுடைமையாக்கியது புஷ் அரசு. அரசுடைமையாக்கப் படும்போது அவற்றின் சொத்து மதிப்பு 5500 கோடி டாலர்கள். அவற்றின் கடனோ 5,00,000 கோடி டாலர்கள். அடுத்து உலகின் மிகப்பெரிய காப்பீட்டு நிறுவனம் என்று கூறப்படும் அமெரிக்கன் இன்டர்நேசனல் குரூப் நிறுவனம் திவாலின் விளிம்பில்; இந்தியாவில் காப்பீட்டத் துறையைத் தனியார்மயமாக்க தீவிரமாக முயன்று வரும் இந்த நிறுவனத்தைக் காப்பாற்ற 8500 கோடி டாலர்களை வழங்கி அதன் 80% பங்குகளை வாங்கியிருக்கின்றது அமெரிக்க அரசின் ஃபெடரல் ரிசர்வ்.

லேமன் பிரதர்ஸ், மெரில் லின்ச், கோல்டுமேன் சாக்ஸ், மார்கன் ஸ்டான்லி, வாக்கோவியா, வாஷிங்டன் மியூச்சுவல்... என உலக நிதிச் சந்தையின் சர்வவல்லமை பொருந்திய தேவதைகளாகக் கருதப்பட்ட நிறுவனங்கள் எல்லாம் நாளுக்கொன்றாகக் கவிழ்ந்து கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவின் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மட்டுமின்றி, ஆலைகள், ஐ.டி துறைகளிலும் திடீரென்று ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஆட்குறைப்பு செய்யப்படுகின்றார்கள்.

கடனை அடைக்க முடியாததால் வெளியேற்றப்பட்ட இலட்சக்கணக்கான மக்களின் வீடுகள் அமெரிக்காவில் வாங்குவாரின்றிப் பூட்டிக்கிடக்கின்றன. ஐ.டி. தொழிலின் மையமான கலிபோர்னியா மாநிலமே திவால் மாநிலமாகி விட்டது. பிரைஸ் வாட்டர் கூப்பர்ஸ் என்ற பிரபல நிறுவனத்தின் நிதி ஆலோசகரான கார்த்திக் ராஜாராம் என்ற என்.ஆர்.ஐ இந்தியர், தனது மனைவி, மூன்று குழந்தைகள், மாமியார் அனைவரையும் சுட்டுக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். ரியல் எஸ்டேட் சூதாட்டத்தில் அவர் குவித்த கோடிகள் ஒரே நாளில் காணாமல் போயின.

தவணை கட்டாததால் பறிமுதல் செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 50 இலட்சம் என்று அறிவித்திருக்கின்றார் அமெரிக்க நிதியமைச்சர் பால்சன். அதாவது, அரசின் கணக்குப்படியே சுமார் 3 கோடி மக்கள், அமெரிக்க மக்கள் தொகையில் 10% பேர் புதிதாக வீடற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். வாங்குவாரின்றிப் பூட்டிக் கிடக்கும் வீடுகள் சூறையாடப் படுகின்றன.

> "குப்பைக் காகிதத்தை வாங்கிக் கொண்டு முதலாளிகளுக்குப் பணம் கொடுக்கும் அரசே, இந்தா என் வீட்டுக் குப்பை. எனக்கும் பணம் கொடு!" என்று ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள். வால் ஸ்ட்ரீட் வங்கிகளின் நெடிதுயர்ந்த கட்டிடங்களில் அமெரிக்க மக்களின் முழக்கம் மோதி எதிரொலிக்கின்றது – 'முதலாளித்துவம் ஒழிக!'

ஆட்டோமொபைல் தொழிலில் உலகின் தலைநகரம் என்றழைக்கப்பட்ட டெட்ராய்ட், அமெரிக்காவின் திவால் நகரமாகி விட்டது. அங்கே வீட்டின் விலை உசிலம்பட்டியைக் காட்டிலும் மலிந்து விட்டது. இரண்டு படுக்கையறை கொண்ட வீட்டின் விலை ரூ. 75,000.

அமெரிக்காவில் வெடித்த பொருளாதார நிலநடுக்கம், உலகெங்கும் பரவுகின்றது. ஒரு ஊழியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறோம் என்று அலறுகிறார் பிரெஞ்சுப் பிரதமர்.


எந்த நாட்டில் எந்த வங்கி எப்போது திவாலாகும் என்று யாருக்கும் தெரியவில்லை. வங்கிகளின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். "ஐரோப்பிய வங்கிகள் திவாலானால் 50,000 யூரோக்கள் வரையிலான டெபாசிட் தொகையைக் கொடுக்க ஐரோப்பிய அரசுகள் பொறுப்பேற்பதாக" ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருக்கின்றது. இந்தியா உள்ளிட்டு உலகெங்கும் பங்குச்சந்தைகள் கவிழ்ந்து பாதாளத்தை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கின்றன.

உலகப் பொருளாதாரத்தின் அச்சாணி என்றும், உலக முதலாளித்துவத்தின் காவலன் என்றும் பீற்றிக் கொள்ளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திய முதலாளி வர்க்கத்தின் முகத்தில் உலகமே காறி உமிழ்கின்றது.

"பொருளாதாரத்தில் அரசு எந்த விதத்திலும் தலையிடக் கூடாது; சந்தைப் பொருளாதாரம் ஒன்றுதான் மனித சமூகம் கண்டறிந்த மிகச்சிறந்த பொருளாதார ஏற்பாடு" என்று கூறி, பின்தங்கிய நாடுகள் அனைத்தின் மீதும் தனியார்மயத்தைக் கதறக் கதறத்


படிப்பகம்

www.padippakam.com




திணித்து வரும் அமெரிக்க முதலாளி வர்க்கம், கூச்சமே இல்லாமல் 'மக்களின் வரிப்பணத்தை வைத்து எங்களைக் கைதூக்கி விடுங்கள்' என்று அமெரிக்க அரசிடம் கெஞ்சுகின்றது.

திவால்கள் இத்துடன் முடியப் போவதில்லை என்பது தெளிவாகி விட்டது. முதலாளிவர்க்கத்தைக் கைதூக்கி விடுவதற்காக 70,000 கோடி டாலர் (35 இலட்சம் கோடி ரூபாய்) பணத்தை அரசு வழங்க வேண்டும் என்ற புஷ் நிர்வாகத்தின் தீர்மானத்தை அமெரிக்காவின் 'மக்கள் பிரதிநிதிகள்' ஒருமனதாக நிறைவேற்றி விட்டார்கள்.

அமெரிக்க மக்களோ ஆத்திரத்தில் வெடிக்கிறார்கள். உலக முதலாளித்துவத்தின் புனிதக் கருவறையான வால் ஸ்ட்ரீட் எங்கும் மக்கள் கூட்டம். "தே.. பசங்களா, குதிச்சுச் சாவுங்கடா.." என்று வங்கிகளை அண்ணாந்து பார்த்துத் தொண்டை கிழியக் கத்துகின்றார்கள் மக்கள். "குப்பைக் காகித்தை வாங்கிக் கொண்டு முதலாளிகளுக்குப் பணம் கொடுக்கும் அரசே, இந்தா என் வீட்டுக் குப்பை. எனக்கும் பணம் கொடு!" என்று ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள். வால் ஸ்ட்ரீட் வங்கிகளின் நெடிதுயர்ந்த கட்டிடங்களில் அமெரிக்க மக்களின் முழக்கம் மோதி எதிரொலிக்கின்றது - 'முதலாளித்துவம் ஒழிக!'

●●●

இத்துனை அமெரிக்க வங்கிகளை ஒரே நேரத்தில் திவாலாக்கி, உலகப் பொருளாதாரத்தையும் நிலைகுலைய வைத்திருக்கும் இந்த நிதி நெருக்கடியைத் தோற்றுவித்தது யார்? அமெரிக்காவின் ஏழைகள்! அவர்கள்தான் உலகத்தைக் கவிழ்த்து விட்டார்களாம். பல இலட்சம் கோடி டாலர் மதிப்புள்ள இந்த பிரம்மாண்டமான கேள்விக்கு, இரண்டே சொற்களில் பதிலளித்து விட்டன முதலாளித்துவப் பத்திரிகைகள். "கடன் பெறவே தகுதியில்லாதவர்கள், திருப்பிச் செலுத்த முடியாதவர்கள் என்று வந்தவர் போனவருக்கெல்லாம் வங்கிகள் கடன் கொடுத்தன. வீடுகட்டக் கடன் கொடுத்ததில் தவறில்லை. ஆனால், அது சரியான ஆட்களுக்குக் கொடுக்காததுதான் இந்த நிலைக்குக் காரணம்..." (நாணயம் விகடன், அக்-15)

எப்பேர்ப்பட்ட கண்டுபிடிப்பு! இதே உண்மையைத்தான் எல்லா பொருளாதாரக் கொலம்பஸ்களும் வேறு வேறு வார்த்தைகளில் கூறுயிருக்கின்றனர். முதலாளி வர்க்கத்தை இவ்வளவு எளிதாக ஏழைகளால் ஏமாற்ற முடியுமா? நண்பர்களுக்கு 50, 100 கடன் கொடுப்பதென்றால் கூட நாமே யோசிக்கின்றோமே, வந்தவன் போனவனுக்கெல்லாம் இலட்சக் கணக்கில் வாரிக்கொடுத்திருக்கும் அமெரிக்க முதலாளிகளை வள்ளல்கள் என்பதா, முட்டாள்கள் என்பதா? இரண்டுமே இல்லை. அவர்கள் கிரிமினல்கள்.

அமெரிக்காவின் உழைக்கும் மக்களையும், நடுத்தர வர்க்கத்தினரையும் மட்டுமல்ல, பல்வேறு நாட்டு மக்கள், சிறு முதலீட்டாளர்கள், வங்கிகள் .. அனைத்துக்கும் மேலாக சக நிதிமூலதனச் சூதாடிகள் எல்லோரையும் ஏமாற்றிச் சூறையாடியிருக்கும் இந்த மோசடியை என்ன பெயரிட்டு அழைப்பது? ஆயிரம், இரண்டாயிரம் போயிருந்தால் அது திருட்டு. இலட்சக் கணக்கில் போயிருந்தால் கொள்ளை என்று கூறலாம். பறிபோயிருப்பது பல இலட்சம் கோடி. அதனால்தான் மிகவும் கவுரவமாக இதனை 'நெருக்கடி' என்று கூறுகின்றது முதலாளித்துவம்.

வந்தவன் போனவனுக்கெல்லாம் வாரிக் கொடுத்ததனால் ஏற்பட்டதாகக் கூறப்படும் 'அமெரிக்காவின் சப்பிரைம் நெருக்கடி' தோன்றிய கதையைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

தயக்கமில்லாமல் கடன் வாங்குவதற்கும், நுகர்பொருட்களை வாங்குவதற்கு அந்தப் பணத்தைச் செலவிடுவதற்கும் மக்களை நெடுங்காலமாகவே பயிற்றுவித்து பொம்மைகளைப் போல


படிப்பகம்

www.padippakam.com

அவர்களை ஆட்டிப்படைத்து வருகின்றது அமெரிக்க முதலாளி வர்க்கம். சராசரியாக ஒரு அமெரிக்கனிடம் 100 கடன் அட்டைகள் இருக்கும் என்பது மிகக் குறைந்த மதிப்பீடு. அங்கே வட்டி விகிதத்துக்கு உச்சவரம்பு இல்லை என்பதால் கடன் அட்டைக்கு 800% வட்டி கூட உண்டு. சராசரியாக ஒரு அமெரிக்கன் தனது மாதச்சம்பளத்தில் 40% தொகையைக் கடன் அடைக்க ஒதுக்குகின்றான். ஒரு கல்லூரி மாணவனின் சராசரி கல்விக்கடன் 10 இலட்சம் ரூபாய். 2003 ஆம் ஆண்டிலேயே அமெரிக்காவின் வங்கிக் கடன்களின் சரிபாதி அடமானக் கடன்களாக இருந்தன.

இதற்கு மேலும் கடன் வாங்கிச் செலவு செய்யும் சக்தி அவர்களுக்கு இல்லாமல் போனதால், நுகர்பொருள் முதல் ரியல் எஸ்டேட் வரை எல்லாத் தொழில்களிலும் சந்தை தேங்கியது. கடன் வாங்க ஆளில்லாததால் வட்டி வருவாய் இல்லாமல், வங்கித் தொழிலும் தேங்கியது. கடனுக்கான வட்டி விகிதங்கள் பெருமளவு குறைந்தன. இந்தத் தருணத்தில்தான் தங்கள் லாபப் பசிக்கு புதிதாக ஒரு இரையைக் கண்டுபிடித்தார்கள் வங்கி முதலாளிகள்.

"வேலை இல்லாத, வருமானமும் இல்லாத ஏழைகளிடம் அடகு வைக்க எதுவும் இல்லையென்றாலும், அவர்கள் நேர்மையாகக் கடனை அடைப்பார்கள். அடைத்துத்தான் ஆக வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு வேறு யாரும் கடன் கொடுக்க மாட்டார்கள். எனவே வட்டியை உயர்த்தினாலும் அவர்களுக்கு வேறு வழி இல்லை. இவர்களைக் குறி வைப்போம்'' என்று முடிவு செய்தார்கள்.

ஒருவேளை பணம் வரவில்லையென்றால்? அந்த அபாயத்திலிருந்து (risk) தப்பிப்பதற்கு வால் ஸ்ட்ரீட்டின் நிதி மூலதனச் சூதாட்டக் கும்பல் வழி சொல்லிக் கொடுத்தது. 10 இலட்சம் ரூபாய் வீட்டுக் கடன், அந்தக் கடன் ஈட்டக் கூடிய வட்டித் தொகை ஆண்டுக்கு ஒரு இலட்சம் என்று வைத்துக் கொள்வோம். கடன் கொடுக்கும் வங்கி, கடன் வாங்குபவருடைய அடமானப் பத்திரத்தை உடனே நிதிச் சந்தையில் 10.5 இலட்சத்துக்கு விற்று விடும். இப்படியாக கொடுத்த கடன்தொகை உடனே கைக்கு வந்து விடுவதால், பத்திரத்தை விற்க விற்க கடன் கொடுத்துக் கொண்டே இருக்கலாம். கொடுத்தார்கள்.

நிதிக் கம்பெனிகளும், இன்சூரன்சு நிறுவனங்களும், ரியல் எஸ்டேட் நிறுவனங்களும் (FIRE) கூட்டணி அமைத்து ரியல் எஸ்டேட் சந்தையைச் சுறுசுறுப்பாக்கி விலைகளை இருமடங்கு, மும்மடங்காக ஏற்றினார்கள். 'ஒரு டாலர் கூடக் கொடுக்க வேண்டாம். வீட்டை எடுத்துக் கொள்ளுங்கள்' என்றார்கள். தயங்கியவர்களிடம், '10 ஆண்டுகளில் நீங்கள் கட்டப்போகும் தொகை இவ்வளவுதான். ஆனால் 10 ஆண்டுகளுக்குப் பின் உங்களது வீட்டின் விலை 10 மடங்கு கூட உயர்ந்திருக்கும்' என்று ஆசை காட்டினார்கள். 'வட்டியை மட்டும் கட்டுங்கள். அசலை அப்புறம் பார்த்துக் கொள்வோம்' என்று வலையில் வீழ்த்தினார்கள். 'அதுவும் கஷ்டம்' என்று மறுத்தால், 'பாதி வட்டி மட்டும் கட்டுங்கள். மற்றதைப் பின்னால் பார்த்துக் கொள்வோம்' என்றார்கள். வீழ்த்தப்பட்டவர்களில் ஆகப் பெரும்பான்மையினர் கறுப்பின மக்கள் மற்றும் லத்தீன் அமெரிக்க வம்சாவளியினர். மற்றவர்கள் வெள்ளையர்கள்.

இந்த மக்கள் யாரும் வீடு வாங்கக் கடன் கேட்டு வங்கிக்கு செல்லவில்லை என்பது மிகவும் முக்கியமானது. நம் ஊரில் 'கடன் வேண்டுமா?' என்று தொலைபேசியில் கேட்டு நச்சரிப்பதைப் போல 'வீடு வேண்டுமா?' என்று நச்சரித்தார்கள். 2006 ஆம் ஆண்டு வீட்டுக்கடன் வாங்கிய 64% பேரைத் தரகர்கள்தான் வலைவீசிப் பிடித்து வந்தனர். 20% பேர் சில்லறை வணிகக் கடைகளின் மூலம் மடக்கப் பட்டனர். இவர்கள் வாங்கும் வீடுகளின் சந்தை விலையை மதிப்பிடும் நிறுவனங்கள் (appraisers) வேண்டுமென்றே வீட்டின் மதிப்பை ஒன்றுக்கு இரண்டாகக் கூட்டி மதிப்பிட்டுக் கடன் தொகையை அதிகமாக்கினர். வீடு வாங்கச் செலவு செய்யும் பணத்துக்கு வரிவிலக்கு அறிவித்து ரியல் எஸ்டேட் சந்தையை ஊக்கப்படுத்தியது அரசு.

> அமெரிக்க நிதிநிறுவனங்கள் அரசுடைமையாக்கப்பட்ட செய்தியை வெளியிட்ட டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு, 'சோசலிச ரசியாவாக மாறுகின்றது அமெரிக்கா!' என்று அச்செய்திக்கு விசமத்தனமாகத் தலைப்பிட்டிருந்தது. அமெரிக்காவில் நடந்திருப்பது என்ன? முதலாளிகளின் கடன்கள் அரசுடைமையாக்கப்பட்டிருக்கின்றன. பொதுச்சொத்தான மக்களுடைய வரிப்பணமோ தனியார்மயமாக்கப்பட்டிருக்கின்றது.

ரியல் எஸ்டேட் விலைகள் மேலும் ஏறத் தொடங்கின. 2004 இல் பத்து இலட்சம் ரூபாய்க்கு வாங்கிய வீட்டின் சந்தை மதிப்பு, 2005 இல் 20 இலட்சம் ரூபாய் என்று உயர்ந்தவுடன், இன்றைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு மேலும் 7,8 இலட்சம் கடன் அவர்கள் சட்டைப் பைக்குள் திணிக்கப் பட்டது. 'விலைகள் ஏறியபடியேதான் இருக்கும்' என்று மக்கள் நம்பவைக்கப் பட்டார்கள்.

ஆனால் வாங்கிய கடனைக் கட்ட வேண்டியவர்கள் மக்களல்லவா? வட்டியோ மீட்டர் வட்டி! அமெரிக்காவிலோ வேலையின்மை அதிகரித்துக் கொண்டிருந்தது. உணவு, பெட்ரோல் விலை உயர்வு வேறு. மாதம் 1000 டாலர் கொடுத்து வாடகை வீட்டில் இருந்தவர்கள் இப்போது சொந்த வீட்டுக்கு 3000 டாலர் தவணை கட்ட வேண்டியிருந்தது. மூச்சைப் பிடித்துக் கொண்டு 10, 20 மாதங்கள் கட்டிப் பார்த்தார்கள். முடியவில்லை. தூக்கமில்லாத இரவுகள், குடும்பச் சண்டைகள், மணவிலக்குகள்.. என குடும்பங்கள் சித்திரவதைப் பட்டன. 'ஜப்திக்கு எப்போது ஆள் வருமோ' என்று நடுங்கினார்கள். போலீசு வரும்வரை காத்திருக்காமல் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறி விட்டார்கள். சென்ற ஆண்டில் மட்டும் 22 இலட்சம் வீடுகள் இப்படிக் காலியாகின.

விளைவு - ரியல் எஸ்டேட் சூதாடிகள் ஊதி உருவாக்கிய பலூன் வெடித்து விட்டது. 5 இலட்சம் டாலருக்கு வாங்கிய வீடு ஒரு இலட்சத்துக்கு விழுந்து விட்டது. எனினும் 5 இலட்சத்துக்கு உரிய தவணையைத்தான் கட்ட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டதால், தவணை கட்டிக் கொண்டிருந்தவர்களும் 'வீடு வேண்டாம்' என்று முடிவு செய்து வெளியேறத் தொடங்கினார்கள். சந்தை தலைகுப்புறக் கவிழ்ந்தது.

●●●


படிப்பகம்

www.padippakam.com



திவாலாகி தெருவில் நிற்கும் அமெரிக்க நடுத்தர வர்க்கம்!

இந்தக் கொடுக்கல் வாங்கலில், மக்கள் யாரை ஏமாற்றினார்கள்? அவர்கள் மாதத்தவணை கட்டியிருக்கின்றார்கள். முடியாத போது வீட்டைத் திருடிக் கொண்டு ஓடவில்லை. திருப்பி ஒப்படைத்து விட்டார்கள். வீடு இருக்கின்றது. ஆனால் மதிப்பு இல்லாமல் போய்விட்டது. அதற்கு மக்கள் என்ன செய்ய முடியும்? ரியல் எஸ்டேட்டின் சந்தை விலையை அவர்களா நிர்ணயித்தார்கள்? சந்தை எழுந்ததற்கும் வீழ்ந்ததற்கும் அவர்களா பொறுப்பு?

ஒரு வீட்டின் உண்மையான மதிப்பை எப்படி நிர்ணயிப்பது? அந்த வீடு எந்தப் பொருட்களால் உருவாக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தப் பொருட்களை உருவாக்குவதற்கும், அப்பொருட்களை இணைத்து அந்த வீட்டை உருவாக்குவதற்கும் செலவிடப்பட்ட உழைப்புச் சக்தியின் மதிப்புதான் அந்த வீட்டின் மதிப்பு என்கிறார் மார்க்ஸ். ஒரு மாபெரும் முதலாளித்துவ மோசடியில் வாங்கிய அடி, மார்க்சியத்தின் வாயிற்கதவுக்கு அமெரிக்க மக்களை இழுத்து வந்திருக்கின்றது.

எனினும் முதலாளித்துவச் சந்தையின் விதி இதை ஒப்புக்கொள்வதில்லையே! 10 இலட்சம் ரூபாய்க்கு வீடு வாங்கி, ஒரு இலட்சம் தவணை கட்டி விட்டு, மீதியைக் கட்ட முடியாமல் வீட்டை வங்கியிடம் ஒப்படைத்தால் (foreclosure), வங்கி அந்த வீட்டை ஏலம் விடும். தற்போது வீடு 2 இலட்சத்துக்கு ஏலம் போகின்றது என்று வைத்துக் கொண்டால், மீதி 7 இலட்சம் பாக்கியை கடன் வாங்கியவன் கட்டியாகவேண்டும். அதாவது இல்லாத வீட்டுக்கு தவணை கட்டவேண்டும். இதுதான் முதலாளித்துவ சந்தை வழங்கும் நீதி. அது மட்டுமல்ல, இவ்வாறு தவணை கட்டத் தவறுபவர்கள் அடுத்த 7 ஆண்டுகளுக்கு அமெரிக்காவில் எந்த இடத்திலும் கடன் வாங்கவோ கடன் அட்டையைப் பயன்படுத்தவோ முடியாது. சுருங்கக் கூறின் வாழவே முடியாது. இதுதான் அமெரிக்கச் சட்டம். ''இந்தச் சட்டத்தைத் தளர்த்தி நிவாரணம் வழங்கு'' என்று கோருகின்றார்கள் மக்கள்.

திவாலான மக்களுக்கு நிவாரணம் தர மறுக்கும் அமெரிக்க அரசு மதிப்பிழந்து போன குப்பைப் பத்திரங்களை வங்கிகளிடமிருந்து விலை கொடுத்து வாங்க 35 இலட்சம் கோடி ரூபாய் வழங்குகின்றது.

ஏன், மக்களுடைய அந்த வரிப்பணத்தை மக்களுக்கே நிவாரணமாகக் கொடுத்தால்? அப்படிக் கொடுத்தால், உலக முதலாளித்துவமே வெடித்துச் சிதறிவிடும். ஏனென்றால் அந்த வீட்டு அடமானக் கடன் பத்திரங்களில் பெரும் பகுதி இப்போது உலகத்தின் தலை மீது இறங்கிவிட்டது.

பொதுவாக, கடன் என்பது 'கொடுப்பவருக்கும் வாங்குபவருக்கும் இடையிலான ஒப்பந்தம்' மட்டுமே. ஆனால் நிதி மூலதனத்தின் உலகமயமாக்கல் இந்தக் கடன் பத்திரங்களையும் உலகமயமாக்கியிருக்கின்றது.

இத்தகைய கடன் பத்திரங்களின் நம்பகத்தன்மைக்கு சான்றிதழ் கொடுக்கும் பிரபல நிறுவனங்கள், லஞ்சம் வாங்கிக் கொண்டு, இந்த வாராக் கடன்களுக்கு 'மிக நம்பகமான கடன்கள்' என்று பொய் சர்டிபிகேட் கொடுத்தன. இந்த பொய் சர்டிபிகேட்டைக் காட்டி 11.8 டிரில்லியன் டாலர் (ஒரு டிரில்லியன் என்பது இலட்சம் கோடி) மதிப்புள்ள ஒரு கோடி கடன் பத்திரங்களை அமெரிக்கச் சூதாடிகள் உலக நிதிச்சந்தையில் விற்றுவிட்டார்கள்.

பிறகு அந்தப் பத்திரங்களின் மீதும் சூதாட்டம் தொடங்கியது! 'இந்தக் கடன் வசூலாகாவிட்டால் இழப்பீடு தருவதாக'ச் சொன்ன இன்சூரன்சு கம்பெனிகளின் காப்பீட்டுப் பத்திரங்கள், 'ஒவ்வொரு கடனும் வருமா, வராதா என்று அவற்றின் மீது பந்தயம் கட்டிச் சூதாடிய' டெரிவேட்டிவ்கள்.. என தலையைச் சுற்றும் அளவுக்கு விதம்



படிப்பகம்

www.padippakam.com

விதமான சூதாட்ட உத்திகளை உருவாக்கி, ஒரு கோடி கடன்பத்திரங்களின் மீது 1000 கோடி பரிவர்த்தனைகளை (transactions) நடத்திவிட்டார்கள் வால்ஸ்ட்ரீட் சூதாடிகள்!

பறவைக் காய்ச்சலை விடவும் பரவலாக, பருவக்காற்றை விடவும் வேகமாக உலகெங்கும் பரவி யார் யார் தலையிலோ இறங்கி விட்டது இந்தக் கடன். இவற்றை முதலீடுகளாகக் கருதி வாங்கிய பிறநாட்டு வங்கிகள், தொழில் நிறுவனங்கள், பென்சன் ஃபண்டுகள் அனைத்தும் மரணத்தின் விளிம்பில் நிற்கின்றன. முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது அமெரிக்காவின் திவால்!

•••

நாட்டாமையின் டவுசர் கிழிந்து விட்டது! உலக முதலாளித்துவத்தின் காவலன், சந்தைப் பொருளாதாரத்தின் மேன்மையை உலகுக்கே கற்றுக்கொடுத்த பேராசிரியன், ஐ.எம்.எஃப்., உலக வங்கி முதலான நிறுவனங்களின் மூலம் ஏழை நாடுகளின் மீது ஒழுங்கை நிலைநாட்டிய வாத்தியார், ஒரு மூணு சீட்டுக்காரனை விடவும் இழிந்த போர்ஜரிப் பேர்வழி என்ற உண்மை 'டர்ர்ர்' என்று கிழிந்து விட்டது. ஆயினும் இது உலக முதலாளித்துவம் சேர்ந்து நடத்திய ஒரு கூட்டுக் களவாணித்தனம் என்பதால் கிழிசலை கோட்டுக்குள் மறைக்க முயல்கின்றது உலக முதலாளி வர்க்கம்.

35 இலட்சம் கோடி 'மொய்'ப் பணத்தை முதலாளிகளுக்கு வாரிக் கொடுக்கும் இந்த 'சூதாடிகள் நல்வாழ்வுத் திட்டத்'துக்குப் பெயர், பிரச்சினைக்குரிய சொத்துக்கள் மீட்புத் திட்டடமாம்! (Troubled Assets Recovery Programme). ஓ 'அமெரிக்க ஏழை மக்களுக்கு மருத்துவக் காப்பீடு வழங்கக் காசில்லை' என்று கூறிய புஷ், சூதாட்டத்துக்கு காப்பீடு வழங்கியிருக்கின்றார். மக்களின் ஆரோக்கியத்தை விட முதலாளித்துவத்தின் ஆரோக்கியம் மேன்மையானதல்லவா?

அமெரிக்க நிதிநிறுவனங்கள் அரசுடைமையாக்கப்பட்ட செய்தியை வெளியிட்ட டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு, 'சோசலிச ரசியாவாக மாறுகின்றது அமெரிக்கா!' என்று அச்செய்திக்கு விசமத்தனமாகத் தலைப்பிட்டிருந்தது. அமெரிக்காவில் நடந்திருப்பது என்ன? முதலாளிகளின் கடன்கள் அரசுடைமையாக்கப்பட்டிருக்கின்றன. பொதுச்சொத்தான மக்களுடைய வரிப்பணமோ தனியார்மயமாக்கப் பட்டிருக்கின்றது. இல்லாத வீட்டுக்கு அமெரிக்க மக்கள் கடன் கட்டவேண்டும். அது நேரடிக் கொள்ளை. அப்படிக் கொள்ளையடித்தவனுக்கு அரசு கொடுக்கும் 70,000 கோடி டாலரையும் மக்கள் இனி வரியாகக் கட்ட வேண்டும். இது மறைமுகக் கொள்ளை! இதைவிடப் பட்டவர்த்தனமான ஒரு பகற்கொள்ளையை யாரேனும் நடத்த முடியுமா?

முதலாளித்துவ அரசு என்பது முதலாளி வர்க்கத்துக்குத் தேவையான காரியங்களை முடித்துக் கொடுக்கும் காரியக் கமிட்டியே அன்றி வேறென்ன என்று கேட்டார் மார்க்ஸ். 'கல்வி, மருத்துவம், போன்ற எதையும் அரசாங்கம் ஏழைகளுக்கு இலவசமாக வழங்கக் கூடாது' என்ற கொள்கையை அமெரிக்காவில் அமல்படுத்தி வரும் அமெரிக்க அரசு, எழுபதாயிரம் கோடி டாலரை அமெரிக்க முதலாளிகளின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கின்றதே, இது மார்க்ஸின் கூற்றுக்கு நிரூபணமே அன்றி வேறென்ன?

> 'கல்வி, மருத்துவம், போன்ற எதையும் அரசாங்கம் ஏழைகளுக்கு இலவசமாக வழங்கக்கூடாது' என்ற கொள்கையை அமெரிக்காவில் அமல்படுத்தி வரும் அமெரிக்க அரசு, எழுபதாயிரம் கோடி டாலரை அமெரிக்க முதலாளிகளின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கின்றதே, இது மார்க்ஸின் கூற்றுக்கு நிரூபணமே அன்றி வேறென்ன?

''தொழில், வணிகம், நிதித்துறைகளில் அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் இருந்தால், நாங்கள் அப்படியே அறுத்துக் கத்தை கட்டிவிடுவோம்'' என்று பேசிவந்த முதலாளி வர்க்கம், இதோ வெட்கம் மானமின்றி மக்கள் சொத்தைக் கேட்டுப் பகிரங்கமாகப் பிச்சையெடுக்கின்றது. முதலாளித்துவப் பத்திரிகைகள் எனும் நாலுகால் பிராணிகள், ''அரசாங்கம் தலையிட்டு மக்களது வரிப்பணத்தைக் கொடுத்து இந்த நெருக்கடியைத் தீர்க்க வேண்டும்'' என்று சூடு சொரணையில்லாமல் எழுதுகின்றன.

யாருடைய தயவில் யார் வாழ்கின்றார்கள்? முதலாளி வர்க்கத்தின் தயவில் உழைக்கும் வர்க்கம் வாழ்ந்து வருவதாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் பிரமை உங்களது கண் முன்னே நொறுங்குவது தெரியவில்லையா? தெருக்கூட்டுபவர்கள், குப்பை அள்ளுபவர்கள், மேசை துடைப்பவர்கள் என்று கடையரிலும் கடையராய்த் தள்ளப்பட்ட அமெரிக்கத் தொழிலாளிகள், தமது வியர்வைக் காசில் வீசியெறிந்த வரிப்பணத்தைப் பொறுக்குவதற்கு முண்டியடிப்பவர்கள் யார் என்று அடையாளம் தெரிகின்றதா? அட! இவர்கள் வால் ஸ்ட்ரீட்டின் உலகப் பணக்காரர்கள் அல்லவா?

•••

தாங்கள் அதிமேதாவிகள் என்றும், நிதிச் சந்தையின் அபாயகரமான வளைவுகளில் நிறுவனத்தைச் செலுத்தும் வல்லமை பெற்ற திறமைசாலிகள் என்றும் அதனால்தான் தாங்கள் ஆண்டுக்கு 400 கோடி, 500 கோடி சம்பளம் வாங்குவதாகவும் பீற்றிக் கொண்டிருந்தார்கள் பன்னாட்டு நிறுவனங்களின் நிர்வாகிகள். இந்த வெள்ளைக்காலர் கண்ணியவான்கள், 'போர்ஜரி வேலை - கள்ளக் கணக்கு - பொய் சர்டிபிகேட் தயாரிக்கும் தொழிலில்' ஈடுபட்டிருந்த நாலாந்தரக் கிரிமினல்கள் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரியவில்லையா?

பணம், பணத்தைக் குட்டி போடுவது போலவும், அப்படித்தான் இவர்கள் உலகக் கோடீசுவரர்கள் ஆகி, உட்கார்ந்து கொண்டே சாப்பிடுவதாகவும் இவர்கள் உலகத்துக்குச் சொல்லி வந்தார்கள். அமெரிக்க மக்களையும் அவ்வாறே நம்ப வைத்தார்கள். ''ரியல் எஸ்டேட்டில் பணம் போடு, ஒன்று போட்டால் நூறு ஆகும். பங்குச் சந்தையில் பணம் போடு, நூறு போட்டால் ஆயிரம்'' என்று போதையூட்டினார்கள். ''எல்லோரும் உட்கார்ந்து தின்றால் உழைப்பது யார், எல்லாரும் வட்டியில் வாழ வேண்டுமென்றால், வட்டி கட்டுவது யார்?'' என்ற எளிய கேள்வி கூட அந்தப் போதை மயக்கத்தில் அமெரிக்க மக்களுக்கு உறைக்கவில்லை. இன்று? இல்லாத வீட்டுக்குத் தவணை கட்டும் ஏமாளிகளாக, தனது


படிப்பகம்

www.padippakam.com




மக்களை கைதூக்கிவிடு...வங்கி முதலாளிகளை அல்ல...
வங்கி கொள்ளையர்களை சிறையில் அடை!

ஆயுட்கால உழைப்பு முழுவதையும் அடகு வைத்துச் சூதாடிய தருமனாகத் தெருவில் நிற்கின்றார்கள் அமெரிக்க மக்கள்.

உற்பத்தி மென்மேலும் சமூகமயமாகி வருகின்றது. உலகமயமாகி வருகின்றது. ஒரு காரின் பல்வேறு பாகங்கள் பத்து நாடுகளில் தயாரிக்கப்பட்டு, ஒரு இடத்தில் பூட்டப்படுகின்றன. ஒரு ஆயத்த ஆடையை ஒரு தையல்காரர் தைப்பதில்லை. அதுகூட 50 கைகள் மாறுகின்றது. இந்த உற்பத்தியினால் கிடைக்கும் ஆதாயமோ, ஒரு சிலர் கையில் மட்டும் குவிகின்றது. உழைப்பாளிகளின் கையில் காசில்லை. அவர்களுடைய நிகழ்கால உழைப்பை ஒட்டச் சுரண்டிவிட்டதால், கட்டப்பட்ட வீடுகளை, உற்பத்தியான பொருட்களைத் விற்பதற்காக மக்களின் எதிர்கால உழைப்பையும் இன்றைக்கே சுரண்டிவிடத் திட்டம் தீட்டி கடன் தவணை என்ற வலையில் அவர்களை வீழ்த்துகின்றது முதலாளித்துவம். ரோமானிய அடிமைகள் ஒரு ஆண்டைக்கு மட்டுமே வாழ்நாள் அடிமையாக இருந்தார்கள். அமெரிக்க மக்களோ முதலாளி வர்க்கத்துக்கே வாழ்நாள் கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

புதிய வீடுகளைக் கட்டினால் வாங்க ஆள் கிடையாதென்பதால் பழைய வீடுகளின் 'மதிப்பை' ஒன்றுக்குப் பத்தாக உயர்த்துவதன் மூலம், இரும்புப் பெட்டியில் தூங்கும் பணத்தை (மூலதனத்தை) வட்டிக்கு விட்டு சம்பாதிக்க முனைந்தார்கள் அமெரிக்க முதலாளிகள். இதுதான் உலக முதலாளித்துவம் கண்டிருக்கும் 'பொருளாதார வளர்ச்சி'. இது வளர்ச்சி என்றால் லாட்டரிக் குலுக்கலும், மூணு சீட்டும், நாடா குத்துவதும் கூடப் பொருளாதார வளர்ச்சிதான். இதுதான் பங்குச்சந்தை! இந்த சர்வதேச சூதாட்டக் கிளப்புக்குப் பெயர்தான் நிதிச்சந்தை!

''இந்த நிதிச்சந்தைக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைகளையெல்லாம் அகற்றி இந்திய வங்கிகளையும், காப்பீட்டுக் கழகத்தையும், நிதி நிறுவனங்களையும் சுதந்திரமாகச் சூதாட அனுமதிக்க வேண்டும். தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி உட்பட இந்திய மக்கள் அனைவரின் தாலியையும் அறுத்து, அடகு வைத்து சூதாடும் சுதந்திரம் முதலாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும்'' என்ற கொள்கையைத்தான் நமது ஹார்வர்டு நிதி அமைச்சர் சிதம்பரம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார் என்பதை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்!

எந்தச் சூதாட்டத்திலும் எல்லோரும் வெற்றிபெற முடியாது. சூதாட்டத்தின் ஒழுக்கவிதிகளை மீறுவதிலிருந்து சூதாடிகளைத் தடுக்கவும் முடியாது. போலிப் பத்திரங்களைத் தயாரித்து சக சூதாடிகளுக்கே அல்வா கொடுத்து விட்டார்கள் அமெரிக்கச் சூதாடிகள். 'உலக சூதாடிகள் மனமகிழ் மன்றத்தையே' மூடும் நிலை வந்துவிடுமோ என்று அஞ்சித்தான் உலகநாடுகளின் அதிபர்கள் தவிக்கின்றார்கள். ''வங்கிகள் திவாலானால் அரசாங்கம் பணம் தரும்'' என்று அவசரம் அவசரமாக ஆஜராகின்றார்கள்.

•••

புதிதாக எதையும் உற்பத்தி செய்யாமல், உற்பத்தி செய்தவனின் பொருள் மீது சூதாடி, சூதாடி உலக முதலாளித்துவம் கண்டிருக்கும் இந்த 'அபரிமிதமான பொருளாதார வளர்ச்சி'யின் உண்மையான பொருள் என்ன? இது உழைப்பே இல்லாமல் உட்கார்ந்து தின்பவனின் உடலில் வளரும் கொழுப்பு! அந்த வகையில் அமெரிக்க முதலாளித்துவத்துக்கு இப்போது வந்திருப்பது மாரடைப்பு!

அமெரிக்காவுக்கு மாரடைப்பு என்றவுடன் அகில உலகத்துக்கும் வேர்க்கின்றது. உலக முதலாளித்துவத்தின் இதயமல்லவா? இந்த இதயம் இயங்குவதற்குத் தேவையான இரத்தமாகத் தமது நிதி மூலதனத்தை அமெரிக்கச் சந்தையில் முதலீடு செய்திருக்கும் எல்லா நாடுகளும் நடுங்குகின்றன.

www.padippakam.com

செப்டம்பர் 7 ஆம் தேதியன்று அமெரிக்க அரசால் அரசுடைமை ஆக்கப்பட்ட ஃபான்னி, ஃபிரெட்டி ஆகிய இரு நிறுவனங்களில் மட்டும் சீனா, ஜப்பான், ரசியா, பெல்ஜியம், பிரிட்டன், மற்றும் வளைகுடா நாட்டு முதலாளிகள் போட்டிருக்கும் தொகை 1,50,000 கோடி டாலர். அமெரிக்க நிறுவனங்களில் பிற நாடுகள் பெருமளவில் முதலீடு செய்திருப்பது மட்டுமல்ல, அமெரிக்காவுக்கான ஏற்றுமதியை நம்பி சீனா, ஐரோப்பா, ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளின் பொருளாதாரங்கள் இயங்கி வருவதால், 'பெரியண்ணன் சாய்ந்தால் உலகப் பொருளாதாரமே சீட்டுக்கட்டு போலச் சரிந்து விடும்' என்று கலங்குகின்றது முதலாளித்துவ உலகம்.

'புலியாக மாற வேண்டுமானால், புலிவாலைப் பிடிக்க வேண்டும்' என்ற தத்துவத்தின் அடிப்படையில், அமெரிக்காவின் வாலைப் பிடித்து வல்லரசாகி விடக் கனவு கண்டு கொண்டிருக்கும் இந்தியத் தரகு முதலாளி வர்க்கத்துக்கும் கை கால்கள் நடுங்குகின்றன. மும்பை பங்குச் சந்தை பாதாளத்தை நோக்கிப் பாய்கின்றது. திவாலான அமெரிக்க இன்சூரன்சு கம்பெனியுடன் கூட்டணி அமைத்திருக்கின்றது டாடாவின் இன்சூரன்சு நிறுவனம். ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியோ, கவிழ்ந்து விடாமல் இருக்க சர்க்கஸ் வேலை செய்கின்றது. திருப்பூரின் பனியன் ஜட்டி ஏற்றுமதியாளர்கள் முதல், இன்போசிஸ், விப்ரோ, எச்.சி.எல் போன்ற அமெரிக்க அவுட்சோர்சிங் வேலைகளின் இறக்குமதியாளர்கள் வரை அனைவரும் அமெரிக்கா நலம்பெற ஆண்டவனுக்கு நெய்விளக்கு போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

'அமெரிக்க நெருக்கடிகள் இந்தியாவில் பிரதிபலிக்காது என்று எண்ணுவது முட்டாள்தனம்' என்கிறார் பொருளாதார அறிஞர் அலுவாலியா. 'உலகப் பொருளாதாரமே ஒரு இழையில் பின்னப்பட்டிருப்பதால், அமெரிக்காவின் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவும் தனது பங்களிப்பைச் செலுத்த வேண்டும்' என்று சர்வதேசிய உணர்வுடன் பேசுகின்றார் மன்மோகன் சிங். 'மகாரீராட்டிரத்தில் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளும் இந்தியர்களே' என்ற தேசிய உணர்வை அவரிடம் வரவழைக்க ஒரு இலட்சம் விவசாயிகள் தமது உயிரைக் கொடுக்க வேண்டியிருந்தது என்பதையும் இங்கே நினைவு படுத்திக் கொள்ளுங்கள்!

> புதிதாக எதையும் உற்பத்தி செய்யாமல், உற்பத்தி செய்தவனின் பொருள் மீது சூதாடி, சூதாடி உலக முதலாளித்துவம் கண்டிருக்கும் இந்த 'அபரிமிதமான பொருளாதார வளர்ச்சி'யின் உண்மையான பொருள் என்ன? இது உழைப்பே இல்லாமல் உட்கார்ந்து தின்பவனின் உடலில் வளரும் கொழுப்பு! அந்த வகையில் அமெரிக்க முதலாளித்துவத்துக்கு இப்போது வந்திருப்பது மாரடைப்பு!

அமெரிக்க வீழ்ச்சியின் காரணமாக இந்தியப் பங்குச்சந்தையும் சரியத் தொடங்கியவுடனே, 'அரசாங்கம் முட்டுக் கொடுத்து நிறுத்தும்' என்று அறிவித்தார் ப. சிதம்பரம். அமெரிக்கக் கடன் பத்திரங்களை வாங்கி இந்திய முதலாளிகள் நட்டமடைந்திருந்தாலோ, இந்திய வங்கிகள் கவிழ்ந்தாலோ நம்முடைய வரிப்பணத்திலிருந்து நிதியமைச்சர் அதனை ஈடுகட்டுவாராம்! அமெரிக்க முதலாளிகளின் உண்டியலில் இந்திய மக்களின் வரிப்பணமும் காணிக்கையாகச் செலுத்தப்படுமாம்!

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கொள்கையால் அர்ஜென்டினா, மெக்சிகோ, இந்தோனேசியா, தென் கொரியா போன்ற பல நாடுகள் திவாலாக்கப் பட்டிருக்கின்றன. இப்போது அமெரிக்காவின் டவுசரே கிழிந்து விட்டது. 'எசமானின் மானத்தைக் காப்பாற்ற உங்களுடைய வேட்டியை உருவித் தருவதாக' உங்களால் ஜனநாயகப் பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிதி அமைச்சர் உறுதி அளித்திருக்கின்றார்.

இதோ, கம்யூனிசத்தைத் தோற்கடித்த முதலாளித்துவம் வெற்றி உலா வந்து கொண்டிருக்கின்றது! மகாஜனங்களே, கோவணம் பத்திரம்!

● மருதையன்

'ஒரு மனிதனை நாய் கடித்து விட்டது' என்பது நியூஸ் இல்லை. மனிதன் நாயைக் கடித்து விட்டான் என்றால் அதுதான் நியூஸ் என்பது பத்திரிகை உலகிற்கு வழிகாட்டும் ஒரு பிரபலமான முதுமொழி. அந்த வகையில் தமிழ்நாட்டில் சென்ற மாதம் வெளியாகியிருக்கும் முக்கியமான நியூஸ்: 'பர்தாவில் ஷகீலா!'

●●●

2003-ஆம் ஆண்டு பாளையங்கோட்டை கலைவாணி திரையரங்கில் ஓடிய 'இளமைக் கொண்டாட்டம்' என்ற திரைப்படத்தில் சென்சார் செய்யாத காட்சிகளில் ஷகீலா நடித்துள்ளார் என்பதற்காக அவர் மீதும், அவருடன் நடித்துள்ள நடிகர் வினோத் மீதும், திரையரங்க நிர்வாகிகள், ஊழியர்கள் மீதும் தணிக்கை செய்யப்படாத படத்தைத் திரையிடுதல் மற்றும் ஆபாசமாக நடித்துக் கூட்டம் கூட்டுதல் ஆகிய குற்றப்பிரிவுகளின் கீழ் வழக்கு நடைபெற்று வருகின்றது.

இந்த வழக்கின் வாய்தாவுக்காக நெல்லை வந்த ஷகீலா பர்தாவில் மறைந்து கொண்டு வந்த போதிலும் நீதிமன்ற வளாகத்தையே மக்கள் கூட்டத்தால் நிரப்பி விட்டார். நீலத் திரையில் பார்த்த கனவுக்கன்னி கருப்புத் திரைக்குள் ஒளிந்து வந்த போதிலும், தமது கனவுக்கன்னியை நேரில் தரிசிக்கும் பரவசமான வாய்ப்பை அங்கிருந்த மக்கள் இழக்க விரும்பவில்லை. ஷகீலாவின் வாய்தா என்றைக்கு என்ற தேதியை முன் கூட்டியே மோப்பம் பிடித்து, அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியைக் கவர் பண்ண காமிராவோடு நிருபர்களும் வந்து விட்டார்கள்.

வழக்கை அக்டோபர் மாதம் 24 ஆம் தேதிக்கு ஒத்திவைத்து விட்டார் நீதிபதி. தேதியை ஷகீலா குறித்துக் கொண்டாரோ இல்லையோ, நிருபர்களும் ரசிக மகாஜனங்களும் நிச்சயம் குறித்துக் கொண்டிருப்பார்கள்.

நியூஸ் இனிமேல்தான் ஆரம்பிக்கிறது. 'பர்தாவில் ஷகீலா' என்ற சேதியைக் கேள்விப்பட்டு கொதிப்புற்றுப் போன தமிழக முசுலீம் முன்னேற்றக் கழகத்தின் (த.மு.மு.க) நெல்லை மாவட்டத் தலைவர் பாளை ரஃபீக் பத்திரிகைகளிடம் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

''அன்றைக்கு வெள்ளிக்கிழமை, நான் தொழுகைக்கு கிளம்பிய


படிப்பகம்

www.padippakam.com

# ஷகீலா: கவர்ச்சி சுதந்திரமா? பர்தா கண்ணியமா?

நேரம்தான் நடிகை ஷகீலா பர்தா அணிந்து கோர்ட்டுக்கு வந்திருப்பதாக போன் வந்தது. நான் அன்றைக்கு தொழுகைக்கு மட்டும் போகவில்லை என்றால் அவரை செருப்பால் அடித்து கோர்ட்டில் இருந்து ஓடஓட விரட்டியிருப்பேன். பர்தா என்பது முஸ்லீம் பெண்களின் கண்ணியம், கலாச்சாரத்துக்குரிய ஆடை. அந்த ஆடையை இப்படிப்பட்ட ஒரு பெண்மணி தன்னைப் பிறர் கண்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக அணிந்து வருவதென்பது முஸ்லீம்களின் கோபத்தைக் கிளறியிருக்கின்றது. திரையில் பலர் கண்முன்பு பச்சை கொச்சையாக நடிக்கும் ஒரு நடிகை, நீதிமன்றத்திற்கு மட்டும் யோக்கியமாய் பர்தா அணிந்து வருவது என்ன நியாயம்? அடுத்தமுறை இதே பாளை கோர்ட்டிற்கு ஆஜராக வரும்போது அவருக்குப் பாடம் கற்பிப்போம். எங்கள் மகளிரணிப் பெண்கள் திரண்டு வந்து ஷகீலாவிற்கு மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுவார்கள். அது என்ன என்பதைப் பொறுத்திருந்து பாருங்கள்''

இதற்கு ஷகீலாவின் பதில் வருமாறு:

''நான் உருது பேசும் ஒரு முஸ்லீம் பெண். நான் பர்தா அணிந்து வருவதில் ஒன்றும் தப்பில்லையே. வறுமை காரணமாகத்தான் சினிமாவில் நடிக்கப் போனேன். கிளாமராக நடிக்க வேண்டும் என்பதற்காக நான் போகவில்லை. படமெடுக்கும்போது டீசண்டாகத்தான் எடுப்பார்கள். படத்தை தியேட்டரில் ஓட்டும்போது இடையில் பிட்டை ஓட்டி விடுவார்கள். அதனால்தான் 2002-க்குப் பிறகு மலையாளப் படங்களில் நடிப்பதையே விட்டு விட்டேன். நான் பர்தா அணிவது தப்பு என்று சொல்பவர்கள், நான் பணத்துக்காகக் கஷ்டப்பட்டபோது எங்கே போயிருந்தார்கள்?''

இருதரப்பு வாதங்களும் முடிந்து விட்டன. அடுத்த வாய்தாவுக்காக ஷகீலா கோர்ட்டுக்கு வருவதற்கு முன்னாலேயே இதற்கு தீர்ப்பு என்ன என்று கண்டுபிடித்தாக வேண்டுமே! வழக்கிற்கு உள்ளே போவோம்.

''தேவடியாளுக்கு பர்தா எதுக்கு?'' என்பது ரபீக் எழுப்பும் முதல் பிரச்சினை. 'கண்ணியமான முசுலீம் பெண்கள் அணியும் ஆடையான பர்தாவை கண்ணியமற்ற ஷகீலா அணிந்து வருவதால், பர்தா போட்ட பெண்களின் கண்ணியம் காற்றில் பறந்து விடும்' என்பது இரண்டாவது பிரச்சினை. 'இது முசுலீம் பெண்களின் உடை என்பதால் ஷகீலாவின் நடவடிக்கை முசுலீம்களின் மத உணர்வை புண்படுத்தியிருக்கின்றது' என்பது மூன்றாவது பிரச்சினை.

ரபீக்கின் கோபத்தைப் புரிந்து கொள்ள முடிகின்றது. சமீபகாலமாக பலான வழக்குகளில் கைதாகும் மேட்டுக்குடிப் பெண்கள், காமெராவிலிருந்து தப்பிக்கத் தோதான கோர்ட் சீன் டிரஸ்ஸாக பர்தாவைப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இந்து மதவெறியர்களின் தாக்குதல், அரசின் அடக்குமுறை, முசுலீம் என்றாலே பயங்கரவாதி என்று ஊடகங்கள் உருவாக்கியிருக்கும் சித்தரிப்பு ஆகியவற்றால் குமுறிக் கொண்டிருக்கும் இசுலாமிய சமூகத்தினருக்கு, இந்த பர்தா விவகாரம் புண்ணில் உப்பு தேய்த்தது போல இருந்திருக்கும் என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆனால் முசுலீம் பெண்களுடைய கண்ணியத்தின் அடையாளம் பர்தா



என்ற விளக்கத்தை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? ஆண்களின் கண்ணியமற்ற காமவெறிப் பார்வையைச் சமாளிப்பதற்காகப் பெண்களின் மீது இஸ்லாம் போட்டிருக்கும் கவசம் தானே பர்தா? அப்படிப் பார்த்தால் அதனை ஆண்களுடைய பொறுக்கித்தனத்தின் அடையாளம் என்று அழைப்பதுதானே பொருத்தமாக இருக்கும்!

ஷகீலாவை விடுங்கள். எவ்வளவு 'கண்ணியமான' முசுலீம் பெண்ணாக இருந்தாலும் பர்தா போடவில்லை என்றால் 'அவளும் கண்ணியமற்றவள் தான்' என்பதுதானே மதவாதிகள் வழங்கும் தீர்ப்பு! பெண்களின் கண்ணியம், ஒழுக்கம், கற்பு போன்ற எல்லாவற்றையும் கண்காணிக்கும் அதிகாரத்தை ஆண்கள் எடுத்துக் கொள்வதை அசிங்கம் என்பதா அயோக்கியத்தனம் என்பதா? ஷகீலா பிரச்சினை இருக்கட்டும். பர்தா போடாத இசுலாமியப் பெண்களைக் கொலை செய்த தலிபான்கள் கூட, இசுலாமியப் பெண்களின் கண்ணியத்தைக் காக்கும் கொலையாகத்தானே அதனைச் சித்தரித்துக் கொண்டார்கள்? சென்ற ஆண்டு கோவையிலும் மேலப்பாளையத்திலும் 'நடத்தை சரியில்லாதவர்கள்' என்று குற்றம்சாட்டி மூன்று முசுலீம் பெண்களைக் கழுத்தை அறுத்துக் கொலை செய்தார்கள் சில முசுலீம் அடிப்படைவாதிகள். பாகிஸ்தானிலோ, இத்தகைய சம்பவங்கள் கணக்கில்லாமல் நடக்கின்றன. கேட்டால் 'எம் பொண்டாட்டிய நான் அடிப்பேன். நீ யார்டா கேக்க?' என்ற பாணியில் 'என் மதத்தைச் சேர்ந்த பெண்ணை நான் கொல்லுவேன். நீ யார் கேக்க?' என்று பதில் சொல்லக் கூடும்.

கேட்பவன் பாதிக்கப்பட்டவனாகவே இருந்தால்? பிலிப்பைன்ஸ் நாட்டைச் சார்ந்த சாரா என்ற ஏழைச்சிறுமி, குவைத்துக்கு


படிப்பகம்

www.padippakam.com

வீட்டு வேலை செய்யப் போனாள். வீட்டுக்கார ஷேக் அந்தச் சிறுமியைக் கசக்கி நாசமாக்கினான். பொறுக்க முடியாத சாரா ஷேக்கை குத்திக் கொன்றாள். ஏன் கொலை நடந்தது என்று தெளிவாக நிரூபிக்கப்பட்டது. இருந்தாலும் தீர்ப்பு என்ன? சாராவுக்கு தூக்கு தண்டனை! இந்த அநீதியை எதிர்த்து பிலிப்பைன்சில் போராட்டமெல்லாம் நடந்த பிறகு அது ஆயுள் தண்டனையாக ஆக்கப்பட்டது. கண்ணியத்துக்கு ஆயுள் தண்டனை!

''ஷகீலா பர்தா போட்டுக் கொண்டு வந்தால் விரட்டி விரட்டி அடிப்போம்' என்கிறார் ரபீக். இதே நெல்லையில் ஷகீலா படம் பார்க்கப் போன முசுலீம் ஆண்களை இவர்கள் எப்போதாவது விரட்டி அடித்ததுண்டா? ஆபாசம் 'பிட்' படத்தில் மட்டுமா இருக்கின்றது. தணிக்கைச் சான்றிதழ் பெற்ற அதை விடக் கேவலமான படங்களை முசுலீம் ஆண்கள் பார்ப்பதில்லையா? முசுலீம்கள் யார் வீட்டிலும் டி.வி இல்லையா? யாருமே 'மானாட மயிலாட' பார்ப்பதில்லையா? அவர்களுக்கெல்லாம் என்ன தண்டனை கொடுப்பது? கேட்டால் 'சொல்லத்தான் முடியும். இதுக்கெல்லாம் தண்டிக்கவா முடியும்?' என்பார்கள். அந்த நியாயம் பெண்களுக்கு மட்டும் பொருந்தாது போலும்!

ஒரு பெண் அரை அம்மண நடனம் ஆடி, அதனைப் பார்க்கும் ஆண்களுக்கு அது தண்டனைக்குரிய குற்றம் அல்ல. ஏனென்றால் ஆண்கள் இறைவனாலேயே 'ஜொள்ளுப் பார்ட்டிகளாக' படைக்கப் பட்டவர்கள். ஆனபடியினாலே, அவர்கள் ஜொள்ளு விடும் சூழ்நிலையை உருவாக்காமல் இருக்க வேண்டியது, (அதாவது பர்தா அணிய வேண்டியது) பெண்களின் கடமை. மீறினால் தண்டனை!

'ஷகீலா பர்தா அணிந்து வரக் கூடாது' என்ற கோரிக்கைக்கு முசுலீம் பெண்களையெல்லாம் திரட்ட வேண்டியதில்லை. விசயத்தைச் சொன்னால் போதும்! சர்வ மதங்களைச் சேர்ந்த ஆண் ரசிகர்ளும் உற்சாகமாகத் திரண்டு வந்து ஷகீலாவின் பர்தாவைக் கிழித்து எறிந்து விடுவார்கள். அவ்வளவு ஏன், இந்த விசயத்தில் மட்டும் இந்து முன்னணி ஆட்கள் கூட 'மத நல்லிணக்க உணர்வுடன்' ஆதரவும் கொடுப்பார்கள்.

இனி ஷகீலா தரப்பு வாதத்துக்கு வருவோம். பிட் படங்களில் நடித்ததற்கு ஷகீலா சொல்லும் நொண்டிச் சமாதானங்களான 'வறுமை', 'எனக்குத் தெரியவே தெரியாது' என்ற பொய்களுக்கெல்லாம் நாம் பதில் சொல்லத் தேவையே இல்லை. அந்தம்மாளின் வாதத்தை ஒரே பாயிண்டில் சுருக்கி விடலாம். 'தேவையின்னா நான் பர்தா போடுவேன். தேவையில்லைன்னா அவுத்தும் போடுவேன். இரண்டுமே என்னுடைய ஜனநாயக உரிமைகள்.'

அப்படியா? ஜனநாயக உரிமை என்பதைப் பலரும் இப்படித்தான் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். அவர் வீட்டின் குளியலறைக்குள் அவர் அவுத்துப் போடுவது அவருடைய ஜனநாயக உரிமை. லட்சக்கணக்கான

> **அந்தப் பக்கம் ரபீக்கின் மத உரிமை. இந்தப் பக்கம் ஷகீலாவின் தனிநபர் உரிமை. இரண்டு உரிமைகளுமே தத்தம் வழியில் ஆணாதிக்கத்தை வெறிகொண்டு ஆட வைக்கின்றன.**

மக்கள் முன் அவுத்துப் போடுவது எதற்காக? சம்பாதிப்பதற்காக என்று ஒரு வார்த்தையில் சொல்லி விடலாம்.

அது ஆண்களின் காமவெறியைக் காசாக்கும் சம்பாத்தியம். கேரளாவில் மம்முட்டி, மோகன்லால் படங்களையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் அளவுக்கு ஷகீலா படம் வசூலைக் குவித்திருக்கின்றது. இத்தகைய படங்கள் ஆண்களின் 'மொழியில்' எடுக்கப்படுவதால், டப்பிங்கே தேவைப்படாமல் எல்லா மாநிலங்களிலும் ஓடியிருக்கின்றது. ஷகீலாவின் படங்களால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? 'இளைஞர்களைக் கெடுத்து விட்டது' என்று பொதுவாகச் சொல்லிவிடலாம். உண்மையில் அது பெண்களைத்தான் கெடுத்திருக்கின்றது.

பெண்களின் அங்கங்களை ரைட் ராயலாக மேயும் இளைஞர்களின் பார்வை, அவர்களைக் கூசி ஒதுங்கச் செய்யும் கொச்சையான கமெண்டுகள், பேருந்தின் உரசல்கள், மாணவிகளைத் தின்னும் ஆசிரியர்கள், விசுவாசிகளை வதைக்கும் பாதிரிகள், சிறுமிகளைக் குதறும் அண்டை வீட்டு அங்கிள்கள், பெண்களை வலையில் வீழ்த்த வேண்டிய பட்சிகளாகவும், ரூட் போட்டு மடக்கி ருசிக்க வேண்டிய கறித்துண்டுகளாகவும் கருதும் மாணவர்கள்.. இப்படிப் பலவிதமான மிருகங்களை உருவாக்கி வளர்த்து விட்டிருப்பதில் ஷகீலா படங்களின் பங்கு மகத்தானது. இரைக்கு அலையும் நாயைப் போலவும், கூச்ச நாச்சமற்ற மிருகங்களைப் போலவும் நெல்லை கோர்ட்டில் ஷகீலாவுக்கு கூடிய கூட்டமே, அவரது குற்றத்தின் பரிமாணத்தை விளக்கப் போதுமானது.

ஷகீலாவின் மீது ஏதோ ஒரு போண்டா கேஸ் போடப்பட்டிருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் அவருடைய படங்கள் எல்லாம் சென்சார் போர்டு முத்திரையோடுதானே வெள்ளி விழா கொண்டாடியிருக்கின்றன? அவை அனுமதிக்கப் பட்டது ஏன்? அரசியல் சட்டத்தின் மொழியில் சொல்வதென்றால் அது அந்தப் படத்தை இயக்கிய படைப்பாளியின் கருத்துரிமை; ஷகீலாவுடைய கருத்துரிமை. Right to free expression!

அந்த உரிமையைப் பயன்படுத்தி அவர் என்ன 'கருத்தை' சொன்னார் என்பது அன்று கோர்ட்டில் கூடிய ரசிகர்களுக்குத் தெரியும். அந்தக் 'கருத்தை' காணத்தான் அவர்கள் அங்கே ஓடோடி வந்தார்கள். எனினும் 'தன்னுடைய கருத்தை வெளிப்படுத்துவதோ பர்தாவால் மறைப்பதோ தனது தனிநபர் உரிமை என்றும் அதில் யாரும் தலையிட முடியாது' என்றும் கூறுகின்றார் ஷகீலா.

அந்தப் பக்கம் ரபீக்கின் மத உரிமை. இந்தப் பக்கம் ஷகீலாவின் தனிநபர் உரிமை. இரண்டு உரிமைகளுமே தத்தம் வழியில் ஆணாதிக்கத்தை வெறி கொண்டு ஆட வைக்கின்றன. இவற்றுக்கிடையில் நடக்கும் மோதலில் 'ஷகீலாவின் பர்தா' கிழிந்து சின்னாபின்னமானாலும் ஆகாவிட்டாலும், ஒரு உரிமை ஏற்கெனவே சிக்கிச் சின்னாபின்னமாகி விட்டது. அதன் பெயர் பெண்ணுரிமை!

**- வினவு**
**(http://vinavu.wordpress.com)**
**இணையத்திலிருந்து**


படிப்பகம்

www.padippakam.com



குஜராத், ஒரிசா, கர்நாடகா...

# தெற்கிலும் தலைதூக்கும் பார்ப்பன பாசிசம்!

மாதம் ஒன்றாகியும், மத்திய அரசு படைகளை அனுப்பியும், ஊரடங்குச் சட்டம் பிறப்பித்தும், ஒரிசாவில் கிறித்தவ மக்கள் தாக்கப்படுவது நிற்க வில்லை. ஒவ்வொரு நாளும் கலவ ரத்தின் கொடூரமான கதைகள் வந்து கொண்டேயிருக்கின்றன. பாதிரி யார்கள் நிர்வாணமாக்கப்பட்டு இரக்க மின்றித் தாக்கப்படுகின்றார்கள். கன்னி யாஸ்திரீகள் கும்பலால் கற்பழிக்கப்படு கிறார்கள். அகதி முகாமிலும், காடுக ளிலும் தஞ்சமடைந்திருக்கும் கிறித்தவ மக்கள் நிர்மூலமாக்கப்பட்ட தங்களது இருப்பிடங்களுக்குத் திரும்பினால் மீண்டும் அடித்து விரட்டப்படுகி றார்கள்.

''இந்துவாக மாறும்வரை யாரும் ஊருக்குள் நுழைய முடியாது'' என பஜ் ரங்தள் குண்டர்களால் மிரட்டப்படு கின்றார்கள். பார்ப்பன இந்து மதவெறி யர்களின் கொலைப்படை கிராமம் கிரா மமாகச் சுற்றிவந்து கிறித்தவர்களின் வீடுகளையும், தேவாலயங்களையும் தேடித்தேடி நொறுக்குகிறது. காந்தமால் மாவட்டத்தில் தாக்கப்படாத ஒரு கிறித்தவ வீடு கூட இல்லை என்ற நிலைமை உருவாக்கப்பட்டு விட்டது. சங்கபரிவாரக் கும்பலின் அட்டூழி யங்களை போலீசு வேடிக்கை பார்க் கின்றது.

ஒரிசாவில் ருசிகண்ட ஓநாய்க் கூட்டம் கர்நாடகத்திலும் தாக்கத் தொடங்கிவிட்டது. 'கர்நாடகத்தை குஜராத் ஆக்குவோம்' என்ற முழக் கத்தை எடியூரப்பா அரசு அமல்படுத்து கின்றது. கிறித்தவ இளைஞர்களைக் கைது செய்து பிணையில் வெளிவர முடியாத பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து சிறையிலடைக்கின்றது. கிறித்தவ மக்களின் மீது தாக்குதல் நடத்தும் பஜ்ரங் தள்-ன் கர்நாடக மாநில அமைப்பாளர் மகேந்திரக் குமாரை மட்டும் ஒப்புக்குக் கைது செய்து உடனே விடுதலையும் செய்தி ருக்கின்றது எடியூரப்பா அரசு. கேரளத் திலும், தமிழகத்திலும் கூட சர்ச்சுகள் தாக்கப்பட்டிருக்கின்றன.

''பிரதமர், குடியரசுத் தலைவர், சோனியா காந்தி என எல்லோரையும் சந்தித்து முறையிட்டு விட்டோம்; எந்தப் பயனுமில்லை'' என்று குமுறு கின்றார் ஒரிசாவின் பிஷப். கர்நாடகத் திலும் அதே நிலைதான். ஒரிசாவின் கல வரப் பகுதிகளுக்குள் சங்க பரிவாரத் தலைவர்கள் தடையின்றி வந்து செல் கின்றனர். ஆனால் உண்மையறியும் குழுக்களை மட்டும் அரசே தடுத்து நிறுத்துகின்றது. இவ்வளவு நடந்தும் வாய்திறக்காத கல்லுளிமங்கன் மன் மோகன் சிங் பிரான்சு அதிபர் சர்கோசி தன்னிடம் கண்டனம் தெரிவித்த பிறகு, ''ஒரிசாவில் கிறித்தவ மக்கள் தாக்கப்ப டுவது தேசிய அவமானம்'' என்று மெல்ல வாயைத் திறக்கிறார். அவமா னத்தைத் துடைத்தொழிக்கும் வழிதான் இன்றுவரை புலப்படவில்லை.

சென்ற தேர்தலில் தாங்கள் பெற்ற வெற்றியை, 'மதச்சார்பின்மையின் வெற்றி' என்று கூறிக்கொண்ட காங் கிரசு, 'மதக்கலவரம் செய்வோரை ஒடுக்க தனிச் சட்டம் கொண்டு வரப்ப டும்' என்று குறைந்தபட்ச செயல் திட் டத்தில் அளித்துள்ள வாக்குறுதியைப் பற்றி, வருடம் நான்காகியும் மூச்சுவிட மறுக்கின்றது. பார்ப்பன இந்து பயங்கர வாதிகளின் பாசிஸ்டுகளின் கலவரங் களைக் கண்டும் காணாமல் இருந்து கொண்டு, குண்டுவெடிப்புகள் நடக் கும்போது மட்டும் 'பயங்கரவாதத்தைத் தடுக்கும்' செயல் திட்டத்தைத் தீவிரப்ப டுத்துகின்றது.

தற்போது நடைபெற்று வரும் தாக் குதல் தற்செயலானதல்ல; இது திட்ட மிட்டு ஒருங்கிணைக்கப்பட்ட தாக் குதல் என்பதைப் பாமரனும் கூடப் புரிந்துகொள்ள முடியும். இசுலாமியப் பயங்கரவாதத்தைக் காட்டி ஊடகங்கள் உருவாக்கும் பொதுக்கருத்து, தானாகவே தனக்கு ஓட்டுக்களை அறுவடை செய்துதரும் என்பதால், கிறித்தவ எதிர்ப்பைத் தீவிரப் படுத்தியி ருக்கின்றது பா.ஜ.க.

வர இருக்கும் ஐந்து மாநில சட்ட மன்றத் தேர்தல்களில், காங்கிரசு அமல் படுத்தி வரும் மறுகாலனியாக்கக் கொள்கைகளால் அதிருப்தியில் இருக்கும் மக்களின் ஓட்டுக்களைப் பெறுவதற்கு ஏற்ற முறையில் சவடால் பேசுவதற்குக் கூட பா.ஜ.க விடம் மாற்றுத் திட்டம் எதுவும் இல்லை. மக் களின் அதிருப்தியை இந்து மதவெ றியின் மூலம் உருமாற்றி அறுவடை செய்யும் நோக்கத்தில்தான் இந்தக் கல வரங்களை நடத்துகின்றது ஆர்.எஸ்.எஸ் கும்பல். மேலும் உ.பி.யில் செல் வாக்கை இழந்துவிட்ட பா.ஜ.க, அதை ஈடுகட்டுவதற்குத் தேவையான நாடா ளுமன்ற நாற்காலிகளுக்கு தென்மாநி லங்களைக் குறிவைத்திருக்கின்றது.

இந்தக் கோணத்தில்தான் சமீபத்தில் பெங்களூருவில் நடந்த பா.ஜ.க-வின் தேசியக்குழுவில் செயல் திட்டங்கள் பேசப்பட்டன. ராமர் சேதுவை தேசிய சின்னமாக்குவது, அமர்நாத் செல்லும் சாலையையும், நிலத்தையும் தேசிய மய மாக்குவது, காஷ்மீரில் 370 வது சட்டப் பிரிவை நீக்குவது, அப்சல் குருவைத் தூக்கில் போடுவது, மதமாற்றத்தைத் தடை செய்வது என்பவையே அங்கே மையப்பொருளாக இருந்தன. மொத் தத்தில் இந்து மதவெறியைக் கிளப்பும் அடுத்த சுற்றுத் தாக்குதலுக்கு பா.ஜ.க தயாராகி விட்டது. இந்துவெறியின் உண்மையான தீவிரவாத முகமாக மோடியும், மிதவாத முகமூடியாக அத் வானியும் முன்னிறுத்தப்படும் நாடகம் தயாராகி விட்டது.

**கான்பூரிலும், நான்டேடிலும் தயாரிக்கும் போதே குண்டு வெடித்து நான்கு பஜ்ரங்தள் காலிகள் செத்தனர். ஏராளமான வெடிமருந்துகளும், பல இடங்களில் குண்டுகளை வெடிக்கச் செய்யும் வரைபடங்களும் சி.பி.ஐ யிடம் சிக்கின. எனினும் இந்த வழக்குகள் நீர்த்துப்போகச் செய்யப்பட்டன. அது மட்டுமல்ல, அவர்கள் சொல்லளவில் கூட பயங்கரவாதிகள் என்று அழைக்கப்படவில்லை.**


படிப்பகம்

www.padippakam.com

சங்கபரிவாரத்தின் இந்தத் தாக்குதல் நிலைக்குப் பொருத்தமாக, நாட்டின் அதிகார வர்க்கம், நீதித்துறை, ஊடகங்கள் அனைத்தும் துணை நிற்கின்றன. குண்டு வெடிப்பை ஒட்டி நகரங்களில் கொத்துக் கொத்தாக இசுலாமிய இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். சென்னை நகரில் இரவில் நடமாடும் இளைஞர்களிடம் 'நீ முசுலீமா' என்ற கேள்வியையே முதல் கேள்வியாக எழுப்புகின்றது போலீசு. வட மாநிலங்களைப் பற்றிக் கூறத் தேவையில்லை. போலீசால் கைது செய்யப்படும் முஸ்லிம் இளைஞர்கள் அனைவரையுமே 'தீவிரவாதிகள்' என்று முத்திரை குத்துகிறது போலீசு. உளவுத்துறை கிளப்பும் வதந்திகள் உண்மைச் செய்தியாகின்றன.



டெல்லியில் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்ட இசுலாமிய இளைஞர்களுக்கு பாலஸ்தீனத்தின் இசுலாமிய இயக்கத்தினர் அணியும் முகமூடியை அணிவித்து ஊடகங்களின் முன் ஆஜர் படுத்துகின்றது போலீசு. வழக்கு, விசாரணை, தண்டனை எதுவும் சட்டத்தின்படியோ, நீதி உணர்வுடனோ நடப்பதில்லை. பார்ப்பன பாசிஸ்டுகள் உருவாக்கியிருக்கும் 'இந்துத்துவ பொது உளவியல்'தான் அனைத்தையும் இயக்குகின்றது. காங்கிரசு முதல் திராவிடக் கட்சிகள் வரை யாரும் இந்து மதவெறிக்கு எதிராக ஒரு துரும்பைக் கூடத் தூக்கிப் போடும் திராணியற்றவர்கள் ஆகிவிட்டதால், இந்துவெறி மனோபாவம் மக்களிடையே தட்டிக் கேட்பாரின்றி ஆட்சி செலுத்துகின்றது.



பெரும்பான்மை இந்து வாக்கு வங்கியைக் குறிவைத்தே காங்கிரசும் இயங்குகின்றது. குண்டு வெடிப்பை வைத்து 'தீவிரவாதிகளை' கைது செய்யும் வேகம், இந்து மதவெறியர்கள் நடத்தும் கலவரத்தை ஒடுக்குவதில் கடுகளவும் இல்லை. கான்பூரிலும், நான்டேடிலும் தயாரிக்கும் போதே குண்டு வெடித்து நான்கு பஜ்ரங்தள் காலிகள் செத்தனர். ஏராளமான வெடிமருந்துகளும், பல இடங்களில் குண்டுகளை வெடிக்கச் செய்யும் வரைபடங்களும் சி.பி.ஐ யிடம் சிக்கின. எனினும் இந்த வழக்குகள் நீர்த்துப்போகச் செய்யப்பட்டன. அது மட்டுமல்ல, அவர்கள் சொல்லளவில் கூட பயங்கரவாதிகள் என்று அழைக்கப்படவில்லை.

சங்கபரிவாரங்கள் ஆட்சியைப் பிடிக்கும் சூழ்நிலை கடந்த 20 ஆண்டுகளில் திடீரென்று வந்து விடவில்லை. பெரிதும் சிறிதுமாகச் சிறுபான்மை மக்களைத் தாக்கும் கலவரங்கள் நாடெங்கும் ஆயிரக்கணக்கில் நடந்திருக்கின்றன. அனைத்திலும் அரசு, அதிகார வர்க்கம், நீதித்துறையின் உதவியோடு கேட்பாரின்றித் தாக்கப்பட்டிருக்கின்றார்கள் சிறுபான்மை மக்கள். இன்றைய இசுலாமிய இளைஞர்கள் எனப்படுவோர், 80 களின் பிற்பகுதி முதல் புதிய பரிமாணத்துடன் தலைவிரித்தாடத் தொடங்கிய இந்து மதவெறியின் சாட்சியங்களாகத்தான் வளர்ந்து இளைஞர்களாகி இருக்கின்றனர். அவர்கள் இந்திய ஜனநாயகத்திலும் மதச்சார்பின்மையிலும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று கூறுவதற்கு ஆதாரமாக ஒரு துரும்பைக் கூட யாராலும் எடுத்துக் காட்டமுடியாது.

இவர்கள் காலத்தில், 1987 இல் பகல்பூரில் 1000 முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்டனர். படுகொலையை துணை இராணுவப் படையே முன்நின்று நடத்தியது. கொல்லப்பட்ட விவசாயிகள் காலிஃபிளவர் வயல்களில் புதைக்கப்பட்டனர். 92 பம்பாய் படுகொலையின் குற்றவாளிகளாக ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் பட்டியலிட்ட போலீசார் பதவிஉயர்வு பெற்றிருக்கின்றனர். முதல் குற்றவாளி தாக்கரே இன்னமும் மும்பையை ஆண்டு கொண்டிருக்கின்றான்.

2002 குஜராத் இனப்படுகொலையின் நேரடி ஒளிபரப்பை உலகமே கண்டது. அதன் பின்னும் மோடி முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டான். தெகல்கா ஏடு பதிவு செய்த குற்றவாளிகளின் வாக்குமூலம் நீதிமன்றங்களில் உறங்கிக் கொண்டிருக்கின்றது. காங்கிரசு முதல் மதச்சார்பின்மை பேசும் ஓட்டுக்கட்சிகள் யாரும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக எதுவும் செய்ததில்லை. மாறாக குற்றவாளிகளைப் பாதுகாத்திருக்கின்றார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

அதே நேரத்தில் கோத்ரா ரயில் பெட்டி எரிப்பையொட்டிய பொய்வழக்கில் கைது செய்யப்பட்ட முசுலீம்கள் இன்னும் சிறையில் இருக்கிறார்கள். குஜராத்தின் மக்கள் தொகையில் முசுலீம்களின் சதவீதம் ஒன்பதுதான். ஆனால் கைதிகளில் 25 சதவீதம் பேர் முசுலீம்கள். மும்பைக் குண்டுவெடிப்பில் குற்றம் சாட்டப்பட்ட முசுலீம்களில் எண்பது சதவீதம் பேருக்கு தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் மும்பை கலவர வழக்குகளில் 0.8 சதவீதம் பேருக்குக் கூட தண்டனை கிடைக்கவில்லை. "குஜராத் கலவரத்தில் ஈடுபட்டவன் இந்த நாட்டின் மதிப்பிற்குரிய குடிமகன்; ஆனால் குண்டு வைப்பவர்கள் தேசத்திற்கு எதிராகப் போர் தொடுப்பவர்கள்" என்று அவுட்லுக் வார ஏட்டில் திமிராக எழுதுகின்றார் பா.ஜ.க சார்பு பத்திரிகையாளர் ஸ்வபன் தாஸ் குப்தா.

இந்து மதவெறியர்கள் தாங்கள் நடத்தும் கலவரங்கள் அனைத்தையும், இந்துக்களின் பதிலடி நடவடிக்கைகளாகத்தான் சித்தரிக்கின்றனர். இது அவர்களுடைய வழக்கமான கோயபல்ஸ் உத்தி. மும்பை ராதாபாய் சால் பகுதியில் இந்துக்கள் எரிப்பு, கோத்ராவில் ரயில்பெட்டி எரிப்பு, ஒரிசாவில் விசுவ இந்து பரிசத் தலைவர் லட்சுமாணந்தா சரஸ்வதி கொலை என்று ஒவ்வொரு கலவரத்துக்கும் ஒரு முகாந்திரத்தைக் காட்டுகின்றார்கள். ஒரிசா கலவரம் என்பது பொறுமையிழந்த இந்துக்கள் கொடுத்த பதிலடி என்கிறார் பா.ஜ.க தலைவர் இல. கணேசன். ஆனால் குஜராத் படுகொலைக்கு இந்தியன் முஜாகிதீன்கள் 'பதிலடி' கொடுக்கும்போது மட்டும் அது பயங்கரவாதமாகி விடுகின்றது.

" வி.இ.பரிசத் தலைவரைக் கொன்றது நாங்கள்தான்" என்று ஒரிசாவில் மாவோயிஸ்ட்டுகள் அறிவித்தாலும் 'கிறித்தவர்கள்தான் அந்தக் கொலையைச் செய்தார்கள்' என்று கூறி 'பதிலடி' கொடுக்கின்றது இந்து மதவெறிக் கும்பல். இப்படியொரு முகாந்திரம் கிடைக்கவோ, அல்லது முகாந்திரத்தை உருவாக்கினால் அடுத்தகணமே தாக்குதல் தொடுக்கவோ தயாரான ஒரு படுகொலை எந்திரம் அவர்களால் உருவாக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் படுகொலை எந்திரத்தின் அடிப்படை இந்துப் பெரும்பான்மையின் பொதுக்கருத்தாக இருக்கிறது.

**இன்றைய இசுலாமிய இளைஞர்கள் எனப்படுவோர், 80-களின் பிற்பகுதி முதல் புதிய பரிமாணத்துடன் தலைவிரித்தாடத் தொடங்கிய இந்து மதவெறியின் சாட்சியங்களாகத்தான் வளர்ந்து இளைஞர்களாகி இருக்கின்றனர். அவர்கள் இந்திய ஜனநாயகத்திலும் மதச்சார்பின்மையிலும் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று கூறுவதற்கு ஆதாரமாக ஒரு துரும்பைக் கூட யாராலும் எடுத்துக் காட்ட முடியாது.**

பார்ப்பனியத்தால் இந்து என்ற மாயையில் அடிமைப்படுத்தப் பட்டுள்ள பெரும்பான்மை மக்களை திரட்டுவதுதான் இதனை முறியடிப்பதற்கான ஒரே வழி. மற்றபடி அப்பாவி மக்களைக் கொல்லும் குண்டுவெடிப்புக்கள் எதிரிக்குத்தான் பயன்படும். சமீபத்திய குண்டு வெடிப்புகளுக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் இந்தியன் முஜாஹிதீன்களின் கூற்றில் உண்மையிருந்தாலும் - அதாவது இந்து மதவெறியர்களை இந்தியா தண்டிக்கவில்லை போன்ற - இந்த வழிமுறை பார்ப்பன பாசிசத்தைத்தான் வலுப்படுத்தும். அவர்களுடைய குண்டுகள் கொல்லப்படுபவன் இந்துவா, முசுலீமா என்று மதம் பார்க்கவில்லையே தவிர வர்க்கம் பார்த்துத்தான் கொன்றிருக்கின்றன. இதுவரையிலும் மதவெறிக்குப் பலியாகாத ஏழை எளிய மக்களை இத்தகைய குண்டுவெடிப்புகள் மிகச்சுலபமாக இந்து மதவெறியர்களின் பால் சேர்த்து விடும்.

இந்து மதவெறியர்களோ உழைக்கும் மக்களை மதத்தால் பிளவுபடுத்தும் தமது இலக்கில் குறிவைத்துச் செயல்படுகின்றார்கள். ஒரிசாவில் பழங்குடி மக்களுக்கும் அதில் ஒரு பிரிவான தலித் பழங்குடி மக்களுக்கும் உள்ள சமூக, பொருளாதார மற்றும் இட ஒதுக்கீடு போன்ற முரண்பாடுகளை மத ரீதியான பிளவாக இந்து மதவெறியர்கள் மாற்றியிருக்கின்றார்கள். இப்படி இரண்டு வகையிலும் பா.ஜ.க ஆதாயமடைந்திருக்கின்றது.

இந்து மதவெறியை எதிர்க்கும் மதச்சார்பற்ற சக்திகளையும் இத்தகைய குண்டுவெடிப்புகள் பலவீனமாக்குகின்றன. ஆத்திரம் மட்டுமே இந்த வழியை நியாயப்படுத்தி விடாது. குண்டுவெடிப்புகளையும் அதன் பயங்கரவாதத்தையும் பல இசுலாமிய அமைப்புகள் கண்டித்திருக்கின்றன. ஆனால் கிறித்தவர் மீதான தாக்குதலை எந்த இந்துமதத் தலைவரும் கண்டிக்கவில்லை. மாறாக நியாயப்படுத்துகின்றார்கள். ஏனென்றால் கருத்துரீதியாக அவர்கள் தாக்குதல் நிலையில் இருக்கிறார்கள். இதனை முறியடிக்க இந்து மதவெறியர்களின் கலவரங்களுக்கு மவுன சாட்சியாக அங்கீகாரம் கொடுக்கும் இந்துப் பெரும்பான்மையை கருத்துரீதியாகப் போராடி வெல்வது ஒன்றுதான் வழி. அவ்வாறு வெல்ல வேண்டுமென்றால் சிறுபான்மை மக்கள் மதச்சார்பற்ற அமைப்புகளின் கீழ் திரளுவதற்கு முன்வர வேண்டும்.

தமிழகத்தில் பார்ப்பன மதவெறியர்கள் காலூன்ற முடியாததற்குக் காரணம் பெரியாரின் பணி. கடந்த இரு பத்தாண்டுகளில் எமது அமைப்பினர் நடத்திய கருவறை நுழைவுப் போராட்டம், தமிழ் மக்கள் இசைவிழா, தில்லை சிதம்பரம் கோவிலில் தமிழுக்காக நடந்த போராட்டம் முதலானவையும், இந்து மதவெறியர்களுக்கு எதிரான நேரடியான மோதுதல்களும் இந்து மதவெறியர்களைப் பெரும்பான்மை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தியிருக்கின்றன.

இருப்பினும், மண்டைக்காடு கலவரம், மீனாட்சிபுரம் மதமாற்றம், புளியங்குடி தென்காசி கலவரம், கோவை கலவரம், தற்போது கிறித்தவ தேவாலயங்கள் தாக்கப்படுதல் என அவர்கள் தமிழகத்தில் காலூன்ற தொடர்ந்து முயன்றவாறுதான் இருக்கின்றார்கள். இந்தச் சூழலில் பார்ப்பன பாசிசத்திற்கெதிரான போராட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது. இது சாதி, தீண்டாமை, மொழி, பண்பாட்டு அடக்குமுறை, மறுகாலனியாதிக்கத்திற்கு சேவை செய்யும் சித்தாந்தம் என்று பார்ப்பன பாசிசத்தைப் பெரும்பான்மை மக்களிடத்தில் விளங்க வைக்காத வரை அவர்களை ஒழிக்க முடியாது.

அந்தப் போராட்டம் ஒன்றுதான் இந்து மதவெறியர்களைத் தனிமைப்படுத்தும். அந்தப் போராட்டம்தான் பார்ப்பன இந்து மதவெறிக் கும்பல் பெரும்பான்மை உழைக்கும் மக்களுக்கு எதிரி என்பதை மக்களுக்கு அவர்களுடைய சொந்த அனுபவத்தின் மூலம் விளங்கச் செய்யும். கடினமென்றாலும் இது ஒன்றே வழி.

● சாத்தன்


படிப்பகம்

www.padippakam.com



### பிஞ்சுகளைக் குதறும் வெறியர்கள்...

# குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை!

• **திண்டிவனம்** காவேரிப்பாக்கத்தைச் சேர்ந்த கால் ஊனமுற்ற பழனி, சத்யா தம்பதியினரின் மூன்று வயதுகூட நிரம்பாத மகள் லாவண்யா. மாலை நேரத்தில் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த லாவண்யாவை தாயார் அழைக்க பதிலில்லை. மின் தடையால் எங்கும் இருட்டு. பதட்டத்தில் தேடியபோது அருகாமைப் புதரில் பிறப்புறுப்பில் இரத்தம் வடியக் கிடந்த மகளைக் கண்டு பெற்றோர் அதிர்ச்சி அடைகின்றனர். போலீசு விசாரணையில் எதிர் வீட்டில் உள்ள பாண்டியன் எனும் 25 வயது இளைஞன் - மனைவியைப் பிரிந்து வாழ்பவன் - அந்தப் பிஞ்சுக் குழந்தையை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கியது தெரிய வந்தது.

• தூக்கத்தில் திடீர் திடீரென்று விழித்துக்கொள்ளும் ஆறு வயதான நதியா வழக்கத்துக்கு மாறாக இரவில் சிறுநீர் கழிக்கத் தொடங்கினாள். அவளைக் குளிப்பாட்டும் போதுதான் பிறப்புறுப்பில் நகக்கீறல்கள் இருப்பதைக் கவனித்தாள் அவளது தாய். குழந்தையிடம் பேச்சுக்கொடுக்கும் போதுதான் எதிர் வீட்டிலிருக்கும் இளைஞன் சாக்லெட் கொடுத்து தன்னை ஏதோ செய்ததாகக் குழந்தை சொல்லித் தெரிய வந்தது.

• போலியோவால் பாதிக்கப்பட்ட ஐந்து வயதுச் சிறுமியின் முகம் திடீரென்று வீங்கி உடல்நலம் பாதிக்கப்பட்டது. சிகிச்சை அளித்த டாக்டர் அச்சிறுமியிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தபோது பக்கத்து வீட்டு இளைஞன் அச்சிறுமியைத் தவறாகப் பயன்படுத்தி வந்த கொடூரம் வெளிச்சத்திற்கு வந்தது.

• தெருவில் விளையாடிக் கொண்டிருந்த எட்டு வயது ரம்யாவை பலவந்தமாகத் தூக்கிச் சென்ற எதிர்வீட்டின் 45 வயதான சீனிவாசன் பலாத்காரம் செய்யும்போது கையும் களவுமாகப் பிடிபட்டான்.

• கேக் தயாரிக்கும் பேக்கரி ஒன்றில் பயிற்சிக்காக வந்த கேட்டரிங் படிக்கும் கல்லூரி மாணவர்கள் ஆறு பேர், அங்கு விளையாட வரும் ஐந்து வயதுச் சிறுமியை தங்களது இச்சைக்குப் பல நாட்களாகப் பயன்படுத்திய விவரம் தெரியவந்தபோது அதிர்ச்சியில் உறைந்தது அச்சிறுமியின் குடும்பம்.

• சென்னை மெட்ரிகுலேசன் பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கும் ஒன்பது வயது மாணவியை உடற்கல்வி ஆசிரியர் கழிப்பறையில் வைத்து ஓராண்டாகப் பாலியல் வன்முறை செய்தது விசாரணையில் தெரியவந்தது. அதே ஆசிரியரால் குதறப்பட்ட வேறு இரண்டு மாணவிகளும் புகார் கொடுத்தனர்.

• நாகையில் அரசு உதவிபெறும் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கும் 14 வயது மாணவியை 45 வயது ஆசிரியர் ஆய்வகத்தில் வைத்து பாலியல் வன்முறை செய்ததில் அம்மாணவி கருத்தரித்தாள்.

• மதுரை அரசு மேல்நிலைப் பள்ளியில் நான்கு மாணவிகளை ஆசிரியர் ஒருவர் பாலியல் வன்முறை செய்தது பொதுமக்களின் போராட்டத்திற்கு பின் தெரியவந்தது. இதற்குத் தண்டனையாக அவ்வாசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

• ஈரோடு ஆரம்பப் பள்ளியில் தலைமை ஆசிரியர் ஏழு வயது மாணவியைத் தவறாகப் பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது. கோவை பள்ளியில் இதே போன்று வன்கொடுமைக்கு ஆளான மாணவி ஒருத்தி தற்கொலை செய்து கொண்டாள்.

•••

முதல் சம்பவம் சென்ற மாதத்தில் நடந்தது. பின்னையவை சமீப காலங்களில் நடந்து பத்திரிக்கைகளில் வெளிவந்தவை. சிறார்களைப் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கும் இத்தகைய சம்பவங்கள் எங்கோ மேலை நாடுகளில் மட்டும் நடக்கும் வக்கிரம் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களின் மதிப்பீட்டை இவை மறுதலிக்கின்றன. பல்வேறு ஆய்வுகளும் புள்ளி விவரங்களும் இதையே வழிமொழிகின்றன.

பதினெட்டு வயதுக்கும் குறைவான சிறார்களின் உலகத் தொகையில் 19% பேர் இந்தியாவில் இருக்கின்றனர். இந்திய மக்கள் தொகையில் இவர்கள் மூன்றிலொரு பங்கு இருக்கின்றனர். 2007 ஆம் ஆண்டு இந்திய அரசின் குழந்தைகள் நலத்துறையானது குழந்தைகள் மீதான பல்வேறு வன்முறை குறித்து விரிவான கருத்துக்கணிப்பை மேற்கொண்டது. பதின்மூன்று மாநிலங்களில் 12,447 குழந்தைகளிடம் மேற்கொண்ட ஆய்வில் 53% குழந்தைகள் ஏதோ ஒரு பாலியல் வன்முறைக்கு ஆளானதாகவும், 21.9% குழந்தைகள் மோசமான பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இதில் இரு பாலரும் ஏறக்குறைய சரிசமமாக உள்ளனர்.

இந்தியாவில் ஆண்டொன்றுக்கு சுமார் 7 இலட்சம் சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றார்கள். விலைமாதர்களில் 15% பேர் பதினைந்து வயதுக்குட்பட்டவராவர். 2006-இல் துளிர் எனும் அமைப்பு

**ஒருமுறை எல்லை மீறிவிட்டால், பிறகு வக்கிரம் இயல்பாக மாறிவிடுகின்றது. கடுகளவு குற்ற உணர்வுகூட இல்லாமல் அடக்கப்பட்ட காமத்தை இவர்கள் வெறியுடன் தீர்த்துக் கொள்கிறார்கள். இவர்களுக்குப் பிரச்சினையில்லாத தொல்லையில்லாத இலக்கு குழந்தைகள். வயதுவந்த பெண்ணை வல்லுறவுக்கு ஆளாக்குவதும், ஒரு சிறுமியை வல்லுறவு செய்வதும் ஒன்றல்ல. பிந்தையதைச் செய்வதற்கு மிகுந்த வன்மம் வேண்டும்.**



படிப்பகம்

www.padippakam.com



2211 சென்னைக் குழந்தைகளிடம் ஆய்வு செய்ததில் 42% பேர் பாலியல் கொடுமைகளுக்கு ஆளானதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. டெல்லியில் சாக்ஷி எனும் தொண்டு நிறுவனம் செய்த ஆய்வில் 350 குழந்தைகளில் 63% பேர் குடும்ப உறுப்பினர்களால் பாலியல் வன்முறைக்குப் பலியானது தெரிய வந்தது.

இறைந்து கிடக்கும் இந்தப் புள்ளிவிவரங்கள் இந்திய சமூகத்தில் குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை என்பது தவிர்க்க முடியாத அங்கமாகியிருப்பதை ஆணித்தரமாகத் தெரிவிக்கின்றன. குடும்ப அமைப்பு சிதைந்துவரும் மேலைநாடுகள் போலல்லாமல் இந்தியப் பண்பாட்டிற்கு அச்சாணியாகக் குடும்பங்கள் வலுவாக இருப்பதாக நம்பும் பழமை விரும்பிகள் கூட இந்த உண்மையை அங்கீகரித்துதான் ஆக வேண்டும்.

செல்பேசிகளும், இருசக்கர வாகனங்களும், தொலைக்காட்சிகளும் மட்டுமே நாம் காணும் மாற்றங்கள் அல்ல. பண்பாடும் கூட மாறித்தான் வருகின்றது. பொருளாதாரத்தில் நாட்டின் முன்னேற்றமும், விவசாயிகளின் தற்கொலையும் ஒருங்கே நிகழ்வது போல பண்பாட்டில், குறிப்பாக பாலுறவில் காதலும் கலவியும் எதிரெதிர்த் துருவங்களாக மாறி வருகின்றன.

பத்திரிக்கைகளின் அரைநிர்வாணப் படங்களும், மழையில் நனைந்து அங்கங்களைக் காண்பிக்கும் 'மானாட மயிலாட' நடனமும் இன்று அதிர்ச்சியை ஏற்படுத்துவதில்லை. நேற்று குடும்பத்துடன் பார்க்கத் தகுதியற்றவையாகக் கருதப்பட்ட திரைப்படங்களெல்லாம் இன்று குடும்பத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டன. நேற்று ஆபாசமென ஒதுக்கப்பட்டவை இன்று கலாச்சாரத்தின் அங்கமாக மாறிவிட்டன. பத்திரிக்கைகளில் மட்டுமே வந்த கள்ளஉறவுச் செய்திகள், இன்று இல்லத்தரசிகளின் மனதைக் கவரும் 'தொடர்'களாகி விட்டன. தனது இன்பத்திற்காக எதையும் செய்யலாம் என்ற வக்கிரம் சமூக வாழ்வின் அனைத்து விழுமியங்களையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கின்றது.

பார்த்து இரசிக்க வேண்டிய குழந்தைகளைப் பிய்த்துக் குதறும் காமவெறி இன்றைக்குத்தான் தோன்றியது என்று கூற முடியாது. இதன் அடிவேர் பார்ப்பனியத்தின் மூடுண்ட சமூகத்தில் இருக்கின்றது. சாதியத்தைத் தனது ஆன்மாவாக வரித்திருக்கும் சமூகம், ஆண் பெண் உறவையும் சீனப் பெருஞ்சுவரால் பிரித்திருக்கின்றது. சக மனிதனுடனேயே சாதிபார்த்து பழகும்போது காமத்திற்கு வைக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு பற்றிச் சொல்லத் தேவையில்லை. தேவதாசிகளையும், கோபுரங்களில் விதவிதமான கலவிச் சிற்பங்களையும் பார்வைக்கு வைத்திருக்கும் பண்டைய பாரதம், காமசூத்ராவை உலகிற்கு அளித்த பார்ப்பனியம், மேட்டுக்குடியினர் பாலியல் ருசிகளை அனுபவிப்பதற்கு மட்டும் வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

இந்திய மக்களுக்கு பார்ப்பனியத்தின் சாபத்தால் காதலே மறுக்கப்பட்டிருப்பதால், பாலியல் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. பாலுணர்வு எனும் இயற்கையான உணர்வு திருட்டுத்தனமான விசயமாகப் பார்க்கப்படுகின்றது. நடுத்தர வயதை எட்டிவிட்டால், காமத்தைக் குற்றமாகக் கருதி மறைத்துக் கொள்ளும் போலித்தனமும், காதலில் சுதந்திரமாக இணைவதற்கு சாத்தியங்கள் மறுக்கப்படுவதும் குறுக்கு வழிகளை நோக்கி மனத்தைத் தூண்டுகின்றன.

மணவாழ்க்கையில் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் கணவன் மனைவிக்கிடையிலான நேசம் பல காரணங்களால் குறையத் தொடங்கும்போது, சலிக்கத் தொடங்கும்போது, அவற்றுக்கான காரணங்களை ஆராய்ந்து யாரும் சீர்செய்து கொள்வதில்லை. பிரிவு என்பது அவ்வளவு சுலபமான ஒன்றாக இல்லை.

இதுதான் வாழ்க்கை என்று விதிக்கப்பட்டிருந்தாலும் மணவாழ்வில் கிடைக்காத இன்பத்தை, குறிப்பாக ஆண்கள் (சில சமயங்களில் பெண்களும்) மணவாழ்விற்கு வெளியே தேடுகின்றார்கள். இவையெதுவும் தற்செயலாக நிகழ்வதில்லை. ஆழ்மனத்தில் கனன்று கொண்டிருக்கும் ஆசை நிறைவேறுவதற்கான தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. சந்தர்ப்பங்கள் அதற்கு உதவுகின்றன. கள்ள உறவின் தோற்றுவாய் இப்படித்தான் இருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலைக்கு ஆட்படுவோர் திருட்டுத்தனத்தில் மட்டுமே சுதந்திரத்தைக் காண்கிறார்கள். இவர்களுடைய வாழ்வின் மற்ற வேலைகளை முதலில் மெதுவாகவும், பின்னர் வெகு வேகமாகவும் அரிக்கும் கரையானாகக் காமம் மாறிவிடுகின்றது. சிந்தனையின் மையத்தையே கைப்பற்றிவிடும் இந்த வெறி மற்றெல்லாச் சிந்தனைகளையும் தடுமாற வைக்கின்றது. சமூக வாழ்க்கையில் ஊக்கத்துடன் ஈடுபட வேண்டிய மனிதனை நைந்துபோக வைக்கின்றது. காதலைத் துறந்து காமத்தை மட்டும் ஒரு விலங்குணர்ச்சி போல துய்ப்பதற்கு வாய்ப்பளிக்கும் விபச்சாரமும் கூட இத்தகைய நபர்களின் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவதில்லை.

அதனால்தான் கலவியில் புதிது என்ன? என்ற கேள்வி அடுத்து வருகின்றது. அந்தக்கால மன்னர்களும், ஜமீன்தார்களும், இந்தக்கால பணக்காரர்களும், முதலாளிகளும் எல்லையற்ற காமத்தில் திளைத்தாலும் திருப்தி கொள்வதில்லை. பாலுறவுச் சுதந்திரம் கொடிகட்டிப் பறக்கும் மேலை நாடுகளிலிருந்து கோவாவின் கடற்கரைக்கும், இலங்கைக் கடற்கரைக்கும் இளஞ்சிறுவர்களைத் தேடி வெள்ளையர்கள் வருகிறார்கள்.

விபச்சாரமே குலத்தொழில் என்று விதிக்கப்பட்ட சில ஆந்திரக் கிராமங்களில் புதிதாகப் பருவமெய்தும் சிறுமிக


படிப்பகம்

www.padippakam.com

ளுக்குப் பொட்டுக்கட்டும் சடங்கும் அவர்களை ஏலமெடுக்கும் முறையும் இன்றும் தொடர்ந்து நடந்து வருகின்றன. மேட்டுக்குடி வர்க்கத்தின் காமக்களியாட்டம் ஆண்களுக்கு மட்டுமே உரியது என்ற காலமும் மாறி வருகின்றது.

உலகமயமாக்கத்தால் பெருகியிருக்கும் பணக்கொழுப்பும், இணையத்தால் திறந்துவிடப்பட்டிருக்கும் இன்பவாயில்களும் இன்று பணக்காரப் பெண்களையும் வாடிக்கையாளர்களாக்கி விட்டன. இவர்களுக்குச் சேவை புரியும் ஆண் விபச்சாரிகளும் மாநகரங்களில் பெருத்து வருகின்றார்கள். மொத்தத்தில் உயர் வர்க்கத்தினர் இதற்கேற்ற மனநிலையையும், பணநிலையையும் ஒருங்கே பெற்றிருக்கின்றனர்.

இந்த வசதி இல்லாதவர்களுக்கு விரலுக்கேற்ற விபச்சாரம் இருக்கின்றது. என்றாலும் அதனைத் தேடிப் போவது அத்தனை சுலபமாய் நடப்பதில்லை. இரகசியம் காக்க முடியாத கள்ள உறவுகளோ கொலையில் முடிகின்றன. இத்தகைய சூழ்நிலையில்தான் ஒழுக்கக்கேடுகளை நியாயப்படுத்தும் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன.

இந்தியா டுடே போன்ற பத்திரிக்கைகள் மூன்று மாதத்துக்கு ஒருமுறை இந்திய ஆண்களும் பெண்களும் கட்டுப்பெட்டித்தனத்தைக் கைவிட்டு பாலியல் சுதந்திரம் பெற்று வருவதைக் கொண்டாடுகின்றன. கள்ள உறவுகளும், திருமணத்துக்கு முந்தைய உறவுகளும் பெருத்து வருவதாக அவர்கள் வெளியிடும் புள்ளி விவரங்கள், 'இவையெல்லாம் சகஜம்தான் போலும்' என்ற கருத்தை வாசகர்கள் மனதில் எளிதில் உருவாக்குகின்றன.

செல் போனில் புழங்கும் நீலப்படங்கள், பாலியல் குற்றங்களையே கவர்ச்சிகரமான அட்டைப்படக் கட்டுரைகளாக்கும் பத்திரிக்கைகள், அவற்றையே தமது கதைக்கருவாகக் கொண்டிருக்கும் தொலைக்காட்சித் தொடர்கள் ஆகிய அனைத்தும், எரியும் தீயில் எண்ணெயை ஊற்றுகின்றன. குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினர், தான் இழந்து விட்ட இன்பம் குறித்து உள்ளுக்குள் புழுங்கத் தொடங்குகின்றனர். புதிய அதிருப்தியாளர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

தனிநபரின் காமம் புடைப்பதற்கேற்ற கலாச்சாரச் சூழலும் மறுபுறம் அதைத் தடை செய்யும் சமூகக் கட்டுப்பாடுகளும் கோலோச்சும் வாழ்க்கையில், என்னதான் இருந்தாலும் எல்லோரும் எல்லை மீறி விடுவதில்லை. அல்லது மனத்தளவில் எல்லை மீறினாலும் செயலில் மீறாத வண்ணம் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றார்கள். சமூக விழுமியங்களின் அடிப்படையில் தனது சொந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் பலரும் போராடினாலும் இந்தப் போராட்டத்தில் தோல்வியுறுபவர்களும் இருக்கின்றார்கள்.

கீழே கிடக்கும் பணத்தை உரியவரிடம் சேர்ப்பதா, யாரும் பார்க்கவில்லை என்பதால் சட்டைப்பையில் வைத்துக் கொள்வதா என்று முடிவு செய்ய வேண்டிய தருணம் பலருக்கும் வருகின்றது. ஒருமுறை எல்லை மீறிவிட்டால், பிறகு வக்கிரம் இயல்பாக மாறிவிடுகின்றது. கடுகளவு குற்ற உணர்வுகூட இல்லாமல் அடக்கப்பட்ட காமத்தை இவர்கள் வெறியுடன் தீர்த்துக் கொள்கிறார்கள். இவர்களுக்குப் பிரச்சினையில்லாத தொல்லையில்லாத இலக்கு குழந்தைகள். வயது வந்த பெண்ணை வல்லுறவுக்கு ஆளாக்குவதும், ஒரு சிறுமியை வல்லுறவு செய்வதும் ஒன்றல்ல. பிந்தையதைச் செய்வதற்கு மிகுந்த வன்மம் வேண்டும்.

பெண்களே வல்லுறவைத் தடுக்க முடியாமல் பலியாகிவிடும் நிலையில், குழந்தைகளோ அதைப்பற்றிய சுவடு கூடத் தெரியாமல், என்ன ஏது என்று அறியாமல் பலியாகிறார்கள். விபச்சாரமும், கள்ள உறவும் வாய்க்காத தருணங்களில் அண்டை வீடுகளில் இருக்கும் பெண் குழந்தையே ஒரு காமுகனுக்கு வெறியூட்டப் போதுமானதாக இருக்கின்றது. பொதுப்பால் என்று போற்றப்படும் ஒரு குழந்தையை இத்தகைய கயவர்கள் வளர்ந்த பெண்ணாக உருவகித்துக் கொள்கின்றார்கள். ஒரு இனிப்பு வாங்கிக் கொடுத்து விட்டு மறைவிடத்தில் வக்கிரத்தைத் தீர்த்துக் கொள்கின்றார்கள். சற்றே அறியும் பருவமென்றால் மிரட்டிப் பணிய வைக்கிறார்கள்.

பள்ளிகளில் ஆதிக்கம் செய்யும் ஆசிரியர்கள் இப்படித்தான் மாணவிகளை வேட்டையாடுகின்றனர். பெயிலாக்கி விடுவேன், கொன்று விடுவேன் என்று அந்த மாணவி மிரளும் வண்ணம் மான் வேட்டை நடைபெறுகின்றது. கற்பின் புனிதம் குறித்த கருத்து ஆதிக்கம் செய்யும் சமூகத்தில் ஒரு மாணவி தனக்கு நேர்ந்ததை வெளியிலோ வீட்டிலோ அவ்வளவு எளிதாகச் சொல்லுவதில்லை. விதிவிலக்காய் வெளியே தெரியும் சம்பவங்களிலிருந்துதான் இந்த வக்கிரத்தை அறிய வருகின்றோம். முனைவர் படிப்புக்காக கைடு உதவியுடன் ஆய்வு செய்யும் கல்லூரிப் பெண்கள் கூட இந்தக் கயவர்களின் மிரட்டலுக்கு அடிபணிய நேரிடுகின்றது.

சிறுவர்களும், சிறுமிகளும் வயது வந்த எதிர்பாலினத்தவருடன் உறவு கொள்ளும் நீலப்படங்கள்தான் இன்றைய சிறப்பாம். இதைப் பார்த்துத்தான் பணக்காரத் தம்பதியினர் கிளர்ச்சி அடைகிறார்களாம். சிறார்களை வல்லுறவுக்கு ஆட்படுத்தும் போக்கு உழைக்கும் மக்களிடத்தில் இருப்பதை விட மேல்தட்டு நடுத்தர வர்க்கத்திடம்தான் அதிகம் நிலவுகிறதென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவர்களிடம் குடும்ப உறவு பண உறவாகவும், பண்ட உறவாகவும் போலித்தனம் நிரம்பிய தாகவும் இருப்பதால் இத்தகைய சீரழிவுகள் அதிகம் நடக்கின்றன.





படிப்பகம்

www.padippakam.com

குழந்தைகளை வல்லுறவு கொள்ளும் மனிதர்கள் எவரும் சமூகத்தால் ஒதுக்கப்பட்ட கேடிகளல்ல. அந்தக் குழந்தையின் உறவினராகவோ, அண்டை வீட்டாராகவோ பொதுவாக நன்னடத்தையுடன் வாழ்பவர்கள்தான். இவர்கள்தான் இன்னொருபுறம் தமது கைகளுக்கு அருகாமையில் இருக்கும் பச்சிளம் குழந்தைகளை அவை அறியா வண்ணம் குதறுகின்றவர்களாகவும் இருக்கிறார்கள். தனது நன்னடத்தையைக் காப்பாற்றிவரும் அதே வேளையில் காம வக்கிரத்தைத் தீர்ப்பதற்கு இரகசியமான கருவிகளாகக் குழந்தைகளைப் பயன்படுத்துகின்றார்கள்.

**ஒரு குழந்தையின் குழந்தைத் தன்மையை இரக்கமின்றி நசுக்கும் இந்தக் கயவர்கள் எவரும் மனநோயாளிகள் அல்ல. பிடிபடாத வரை இந்த வக்கிரத்தைத் தொடரலாம் என்று திட்டமிட்டுத்தான் இந்தக் காரியத்தில் இறங்குகின்றார்கள். குழந்தைகளை வல்லுறவு செய்தல் ஒரு விபத்து போலவும் நடப்பதில்லை. அனைத்தும் திட்டமிட்டுதான் நடக்கின்றன.**

ஒரு குழந்தையின் குழந்தைத் தன்மையை இரக்கமின்றி நசுக்கும் இந்தக் கயவர்கள் எவரும் மனநோயாளிகள் அல்ல. பிடிபடாத வரை இந்த வக்கிரத்தைத் தொடரலாம் என்று திட்டமிட்டுத்தான் இந்தக் காரியத்தில் இறங்குகின்றார்கள். குழந்தைகளை வல்லுறவு செய்தல் ஒரு விபத்து போலவும் நடப்பதில்லை. அனைத்தும் திட்டமிட்டுதான் நடக்கின்றன.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு குழந்தை முழுமையான வல்லுறவுக்கு ஆட்படுத்தப்பட வேண்டும் என்பதில்லை. பாலியல் வெறியுடன் ஒரு குழந்தையின் மீது கைகள் படரும் ஒவ்வொரு நிகழ்வும் வல்லுறவுதான். அந்த வகையில் பெரும்பான்மையான குழந்தைகள் இந்த அபாயத்தை சந்திக்கும் நிலையில்தான் இருக்கின்றார்கள். பருவம் வராத குழந்தைகளின் உணர்ச்சியைத் தூண்டி விடுதல், நீலப்படங்களைக் காண்பித்து உணர்வூட்டுதல் போன்றவற்றையும் இந்தக் கயவர்கள் செய்கின்றார்கள். உடலும், வயதும் முதிர்ந்த பின்னர் அறிய வேண்டிய பாலுறவை முன்பே அறிந்து கொண்டு அதற்கு பலியாகின்றார்கள் இந்தக் குழந்தைகள்.

விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படும் சிறார்களுக்கு இது வன்முறையாக நடக்கின்றது. பெற்றோர் அக்கறையோ கண்காணிப்போ இல்லாமல் இணையத்தில் மூழ்கும் மாணவர்களோ பிஞ்சிலே வெம்பி விடுகின்றார்கள். தொலைக்காட்சியின் அத்தனை நிகழ்ச்சிகளும், விளம்பரங்களும் சிறுவர்களைப் பாலியலுக்கு அறிமுகம் செய்கின்றன.

பள்ளி ஆண்டுவிழாவில் குத்தாட்டங்களுக்கு நடனம் ஆடும் சிறுமி, தான் தொலைக்காட்சியில் பார்த்த ஒரு வயதான பெண்ணின் விரகதாபத்தை அபிநயம் பிடித்துக் காட்டுகின்றாள்; அகமகிழ்கின்றார்கள் பெற்றோர்கள். அபிநயத்தில் ஆரம்பித்து அது அடுத்த கட்டத்திற்கு போவது இயல்பாக நடக்கின்றது.

பாலியல் கொடுமைகளுக்குள்ளாக்கப்படும் குழந்தைகள் அதைப் புரிந்து கொள்ளும் அறிவு வளர்ச்சியைப் பெறும்போது பெரும் மனவியல் சித்திரவதைகளுக்கு ஆளாகின்றார்கள். தனக்கு மிகப்பெரிய கொடுமை நடந்து விட்டதாகவும், தனது புனிதம் கெட்டுப் போனதாகவும், தான் கோழையென்றும், இன்னும் பலவிதமாகவும் அவர்கள் கருதிக் கொள்வதால், இத்தகைய குழந்தைகளை சிகிச்சை அளித்து மீளப்பெறுவது என்பது மிகவும் சிரமமானதாகி விடுகின்றது.

ஆசிரியர்கள் இழைக்கும் கொடுமைகளால் மாணவிகள் அடையும் மனச்சிதைவுக்கு எல்லையில்லை. எதிர்கால வாழ்வை விருப்பத்துடனும், நம்பிக்கையுடனும் எதிர்கொள்ளும் மனத் துணிவை இவர்கள் இழக்கிறார்கள். விசயம் வெளியே தெரியக் கூடாது என்று மறைக்கப்படுவதால் அது உள்ளுக்குள்ளேயே மனதை ரணமாக்குகின்றது.

**பா**லியல் வன்கொடுமைகளில் இருந்து தப்பிப்பதற்கு பல ஆலோசனைகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் முன்வைக்கப் படுகின்றன. குழந்தைகளின் மறைவுறுப்புக்களை யாரும் தொட அனுமதியாத வண்ணம் கற்றுக் கொடுப்பது, குழந்தைகளுடன் தேவையானவற்றை வெளிப்படையாகப் பேசுவது, அவர்களையும் அப்படிப் பேசவைப்பது, விடலைப் பருவத்தினருக்கு செக்ஸ் கல்வி, விளையாடும் குழந்தைகளை ஆசிரியர்களும் குடும்பத்தினரும் கண்காணிப்பது, மாணவிகள் படிக்கும் பள்ளிகளுக்கு பெண்களை மட்டும் ஆசிரியர்களாக நியமித்தல் என்று பல ஆலோசனைகள் பேசப்படுகின்றன.

இவற்றையெல்லாம் செய்யலாம்தான். இவை தடுப்பு மருந்து மட்டுமே. நோயின் மூலத்தை அறிந்து அழிக்கும் சக்தி இந்த மருந்திடம் இல்லை. ஆம், குழந்தைகளை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கும் கயவர்களைத் திருத்துவதற்கு எந்த மருந்தும் அரசிடமும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமும் இல்லை. சொல்லப் போனால் இந்த நோயை முற்றச் செய்யும் வேலையைத்தான் உலகமயமாக்கத்தின் பண்பாடு செய்து வருகின்றது. இயற்கையான காமம் செயற்கையாக உப்பவைக்கப்படும் இன்றைய சூழலில் இவை ஒவ்வொன்றையும் எதிர்த்துப் போராடுவது மிகவும் கடினமான காரியம்.

முக்கியமாக இந்த மனவிகாரம் உள்ளவர்கள் என எல்லோரையும் சொல்ல முடியாதுதான். அதே சமயம் இந்தக் கொடுமையைச் செய்யப் போகிறவர்கள் யார் என்பதையும் கண்டு பிடிக்க முடியாது. அது அந்தக் குழந்தையின் மாமாவாகவோ, சித்தப்பாவாகவோ, ஆசிரியனாகவோ, அண்டை வீட்டு இளைஞனாகவோ இருக்கலாம்.

நான்கு சுவர்களுக்குள் நமது குடும்பத்தின் நலனை மட்டும் பேணிக் கொள்ளலாம் என்றுதான் பலரும் கருதிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், தெருவில் இறங்காமலா இருந்துவிட முடியும்? ஒழுக்கக் கேட்டையும் வக்கிரத்தையும் தோற்றுவிக்கும் சமூகச் சூழலுக்கு எதிராகப் போராடுவதன் மூலம் மட்டும்தான் அவற்றை எதிர்த்து நிற்க முடியும். அந்தக் கிருமிகளிடமிருந்து நம்மையே தற்காத்துக் கொள்ளவும் முடியும்.

● இளநம்பி


படிப்பகம்

www.padippakam.com

# கடவுள் பிடிபட்டார்!

நமக்கு வெளியே கடவுள் என்றொருவர் இருப்பதாகவும், ஆக்கல் - காத்தல் - அழித்தல் என்ற முத்தொழில்களையும் ஏதோ ஒரு நோக்கத்தில் அவர் தொடர்ந்து செய்து வருவதாகவும் கூறுகின்றார்கள் மதவாதிகள். கடவுளை 'வெளியே தேடாதே உன்னுள்ளே தேடு' என்றார்கள் சித்தர்கள். இறை நம்பிக்கையாளர்களின் இந்தத் தேடல் பல நூற்றாண்டு காலமாக நடந்துவருகிறதெனினும், 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்பதுதான் இதில் கிடைத்திருக்கும் கடைசி ரிசல்ட்.

இந்தப் பூவுலகில் கடவுள் மிகவும் பத்திரமாகப் பதுங்கியிருந்த ஒவ்வொரு மூடநம்பிக்கைக் குகையிலிருந்தும் புகை போட்டு அவரை வெளியேற்றி வருகின்றது அறிவியல். எனினும், இரண்டு இடங்களிலிருந்து மட்டும் அறிவியலால் 'கடவுளை' அப்புறப்படுத்த முடியவில்லை.

எல்லா வாதங்களிலும் தோற்ற பிறகு ஒரு பக்தன் முன்வைக்கும் கடைசி இரண்டு வாதங்கள் இந்த இடங்களை அடையாளம் காட்டுகின்றன. ''நீங்க நம்பினா நம்புங்க நம் பாட்டி போங்க, அந்த கோயிலுக்குப் போனா எனக்குள்ள ஒரு ஃபீலிங் வருது பாருங்க, அதாங்க கடவுள்!'' ''என்ன வேணா சொல்லுங்க, நமக்கு மேல ஏதோ ஒரு பவர் இல்லாம இந்த உலகம் உருவாகியிருக்க முடியுமா?'' - ஒன்று உள்ளே, இன்னொன்று வெளியே.

புறவய உலகத்தின் 'தோற்றம்' குறித்த புதிரையும், அகவயமாக மனித மூளையில் தோன்றும் 'உணர்வு' குறித்த புதிரையும் விடுவிக்கும் முயற்சியில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது அறிவியல். மதவாதிகளின் மொழியில் சொல்வதென்றால் பிரம்ம ரகசியத்தையும் ஆன்ம ரகசியத்தையும் 'கண்டு', பிறகு அதனை 'விண்டு' உலகத்திற்குச் சொல்லவும் முனைந்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

•••

முதலில் 'படைப்பு ரகசியம்' பற்றிப் பார்ப்போம். கடந்த செப் 10 ம் தேதியன்று பிரான்சு நாட்டின் எல்லையில் பூமியின் 300 அடி ஆழத்தில், 17 கிலோ மீட்டர் நீளம் கொண்ட குறுக்கு நெடுக்கான குழாய்ப்பாதையினுள் (Large Hydron Collider) அணுத்துகள்களை மோதவிட்டு பிரம்மாண்டமான ஆராய்ச்சி ஒன்றைத் துவக்கியிருக்கின்றார்கள் உலக விஞ்ஞானிகள்.

''இந்த ஆராய்ச்சி தொடங்கினால் அந்தக் கணமே உலகம் அழிந்துவிடும்'' என்று ஐரோப்பாவில் உள்ள அல்லேலுயா கூட்டத்தினர் முதல் ஒரிசாவில் உள்ள இந்துக்கள் வரை பலரும் தத்தம் தெய்வங்களைச் சரணடைந்தனர். இதனைப் பரபரப்புச் செய்தியாக்கிய ஊடகங்கள், ''உலகம் அழியுமா, அழியாதா?'' என்று அப்துல் கலாமிடம் விளக்கம் கேட்க, நவீன இந்தியாவின் அழித்தல் கடவுளான அப்துல் கலாம் 'அழியாது' என்று அருள்வாக்கு கொடுத்தார். அதன் பின்னர்தான் கோயிலை விட்டு வெளியே வந்தார்களாம் சிவபக்தர்கள். நாம் விசயத்துக்கு வருவோம்.

நாம் வாழும் இந்தப் பிரபஞ்சம் சுமார் 1300 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பெருவெடிப்பினூடாக (Big bang) நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது இயற்பியல் விஞ்ஞானிகளின் கருத்து. இந்தக் கோட்பாட்டு முடிவை, அதாவது பெருவெடிப்பை, சிறிய அளவில் ஒரு சோதனைச் சாலையில் நடைமுறையில் நிகழ்த்திப் பார்ப்பதுதான் இந்த ஆய்வின் நோக்கம்.

கிறிஸ்துவுக்கு முந்தையவரும் அணுக்கோட்பாட்டின் தந்தையுமான கிரேக்க தத்துவஞானி டெமாக்ரைடஸின் காலம் முதல் இன்று வரை இயற்பியல் ஆய்வு வெகு தூரம் வளர்ந்து விட்டது. மூலக்கூறுகள் அணுக்களால் ஆனவை; அணுக்கள் புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான் போன்ற துகள்களால் ஆனவை. புரோட்டான்களும் நியூட்ரான்களும் குவார்க், குளுவான்களால் ஆனவை என்கிறது இயற்பியல். குவார்க்குகள்தான் அடிப்படைத் துகள்களா, அல்லது அவை அதனினும் நுண்ணிய வேறொன்றினால் ஆனவையா? இந்தத் துகள்களுக்குப் பொருண்மையையும், கனத்தையும் (mass and weight) வழங்கியது எது? என்ற கேள்விகளுக்கும் விஞ்ஞானிகள் விடை தேடி வருகின்றார்கள்.

புரோட்டான் உள்ளிட்ட துகள்களுக்கு வேறொரு துகள்தான் பொருண்மையை அளித்திருக்க வேண்டும் என்பது இங்கிலாந்தைச் சேர்ந்த இயற்பியல் விஞ்ஞானி பீட்டர் ஹிக்ஸ் என்பவர் 40 ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட கணிப்பு. இனிமேல்தான் கண்டுபிடிக்கப்பட வேண்டிய அந்தத் துகள் அவருடைய பெயரால் 'ஹிக்ஸ் துகள்' என்று அழைக்கப்படுகிறது. நாம் காணும் இந்த உலகத்திற்கு இந்த ஹிக்ஸ் துகள் பொருண்மையை (mass) வழங்கியிருக்

> புறவய உலகத்தின் 'தோற்றம்' குறித்த புதிரையும், அகவயமாக மனித மூளையில் தோன்றும் 'உணர்வு' குறித்த புதிரையும் விடுவிக்கும் முயற்சியில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது அறிவியல். மதவாதிகளின் மொழியில் சொல்வதென்றால் பிரம்ம ரகசியத்தையும் ஆன்ம ரகசியத்தையும் 'கண்டு', பிறகு அதனை 'விண்டு' உலகத்திற்குச் சொல்லவும் முனைந்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.


படிப்பகம்


கக்கூடும் என்பதால் அதனை 'கடவுள் துகள்' (God particle) என்றும் வேடிக்கையாக அழைக்கிறார்கள் விஞ்ஞானிகள். தற்போது நடைபெற்றுவரும் ஆய்வு அந்த கடவுள் துகளைக் கண்டறிய விழைகிறது.

**களிமண்ணை உருட்டினால் கடவுள்! கடவுளை உருட்டுகிறார்கள் விஞ்ஞானிகள்!**

'ஆற்றலும் பருப்பொருளும் ஒன்றின் இரு வடிவங்களே' என்ற ஐன்ஸ்டினின் கோட்பாட்டின் அடிப்படையில் இந்தச் சோதனை நடைபெறுகிறது. புரோட்டான் துகள்கள் இந்த 20 கி.மீ நீளக் குழாய்க்குள் கிட்டத்தட்ட ஒளியின் வேகத்தில் மோதவிடப்படுகின்றன. இவ்வாறு மோதும்போது உருவாகக் கூடிய வரம்பற்ற ஆற்றலும், வெப்பமும் குளிரும், பிரபஞ்சம் தோன்றிய அந்தத் தருணத்திற்குப் பின் நாம் எப்போதும் காணாதவை. நம் பிரபஞ்சத்தின் விதிகளை எழுதிய துகள்களும் இந்த மோதுகையின் விளைவாக (collision) வெளிப்படக் கூடும். அத்துகள்களில் பல நாம் இதுவரை கண்டறியாதவையாக இருக்கக் கூடும். பல கோடி முறை நிகழவிருக்கும் இந்த மோதுகைகளில் ஏதேனும் ஒன்று அந்தக் 'கடவுள் துகளை'த் தோற்றுவிக்கவும் கூடும். ஆயின், ''இந்த உலகம் என்பது என்ன, நாம் ஏன் இங்கு வந்தோம்?'' என்று தத்துவஞானிகள் பலர் எழுப்பிய கேள்விக்கான விடையை, அதாவது 'பிரம்ம ரகசியத்தை'க் கண்டறிந்து விடமுடியும்.

ஒருவேளை தோற்றுவிட்டால்? ''40 ஆண்டுகளுக்கு முன் ஊகிக்கப்பட்ட ஒரு துகளைக் கண்டறிவதைக் காட்டிலும் எங்களைப் போன்ற விஞ்ஞானிகளுக்கு தோல்விதான் சுவையானதாக இருக்கும். எறும்புக் கூட்டத்திலிருந்து மனிதர்களாகிய நம்மைப் பிரிப்பது எது? அறிவுத் தேட்டம்தானே!'' என்கிறார்கள் இந்த ஆய்வில் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகள்.


''எறும்பையும் மனிதனையும் கடவுள்தான் படைத்தான்'' என்று கூறும் மதவாதிகளோ, கொஞ்சம் கூடக் கூச்சமே இல்லாமல், 'அவிசுவாசிகள்' உருவாக்கிய கணினியின் வழியே, 'தேவனாகப்பட்டவன் களிமண்ணை உருட்டி ஆதாமைப் படைத்த செய்தி'யையும், இத்தகைய சோதனைகளால் தேவன் படைத்த உலகம் அழிந்து



விஞ்ஞானி
மைக்கேல் பெர்சிங்கர்




மனித மூளையில்
கடவுளுக்கான இடம்



பெர்சிங்கர் வடிவமைத்த
கடவுள் ஹெல்மெட்



சந்தையில் விற்கப்படும்
'சக்தி' ஹெல்மெட்

போகக்கூடிய அபாயத்தையும் இணையத்தில் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

**சித்தத்தினுள்ளே சதாசிவம் எங்கே?**

வெளி மண்டலத்திலிருந்து கடவுளை விரட்டும் முயற்சியில் விஞ்ஞானிகள் வெற்றி பெற்று விட்டாலும், மனிதனின் நரம்பு மண்டலத்திலிருந்து கடவுள் தானாக வெளியேறிவிடப் போவதில்லை. பக்தர்களின் மூளையில் எந்த இடத்தில் கடவுள் குடியிருக்கிறார்? மூளையின் எந்தப் பகுதி நரம்புகள் தூண்டப்படும்போது அவர்களின் கண் முன்னே கடவுள் 'காட்சி' தருகிறார் அல்லது இயேசு அவர்களுக்குள் 'இறங்குகிறார்' ? இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டு வருகின்றது நரம்பியல் மருத்துவம்.

''மனிதனின் பேசும் திறன், கேட்கும் திறன், மற்றும் நினைவாற்றலைக் கட்டுப்படுத்துகின்ற மூளையின் 'டெம்பரல் லோப்' என்ற பகுதி, காதுகளின் அருகே அமைந்திருக்கிறது. மூளையின் இந்தப் பகுதி வலிப்பு நோயால் பாதிக்கப்படும் போதோ அல்லது ஏறுக்கு மாறாக செயல்படும்போதோ சம்பந்தப்பட்ட நோயாளிகளுக்கு விசித்திரமான 'ஆன்மீக அனுபவங்கள்' ஏற்படுகின்றன'' என்கிறார் கனடா நாட்டின் நரம்பியல் விஞ்ஞானி டாக்டர் பெர்சிங்கர்.

இந்த வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருந்த ருடி அபால்டர் என்ற நாத்திகர், 'உயிரோடு இருக்கும்போதே தான் இறந்துவிட்டது போன்ற நினைப்புக்கு ஆளானார். இன்னொரு நோயாளியான வென் திகே என்ற கிறித்தவப் பெண்ணோ, 'தான் ஏசுவைப் பெற்றெடுத்திருப்பதாக'க் கூறினாள். மோசஸ், புனித பால் முதலானோர் 'கண்ட' காட்சிகளாக விவிலியத்தில் கூறப்படுபவை, வென் திகேயின் 'அனுபவத்தை' ஒத்திருப்பதால், இறைத்தூதர்கள் - தீர்க்கதரிசிகள் என்று கூறப்படுவோர் இந்த மூளை வலிப்பினால் பாதிக்கப் பட்டவர்களாக இருக்கக் கூடும் என்கிறார் பெர்சிங்கர்.

''செவன்த் டே அட்வன்டிஸ்ட் பிரிவைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரான எல்லன் ஒயிட் என்ற பெண்ணுக்கு (1836 இல்) 9 வது வயதில் மண்டையில் அடிபட்டு, மூளையில் காயம் ஏற்பட்டது. இதற்கு ஆதாரமும் உள்ளது. இதன் பிறகுதான் 'ஏசு அவர் முன் 'தோன்றத்' தொடங்கினார்'' என்கிறார் நரம்பியல் விஞ்ஞானி கிரகரி



படிப்பகம்

www.padippakam.com

> மதம் என்பது ஒரு நம்பிக்கை. அந்த நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் சிந்தனைக்கான காரணத்தையும் அதற்கான சமூக அடிப்படைகளையும் நரம்பியல் ஆராயவில்லை; ஆராயவும் முடியாது. மாறாக, அந்த நம்பிக்கை தோற்றுவிக்கும் உணர்வை, நமது நரம்பு மண்டலம் உயிர் வேதியல் மொழியில் எவ்வாறு மொழிபெயர்த்துள்ளது என்பதை, அதாவது மத உணர்வின் பொருள் வடிவத்தைக் கண்டறியவே நரம்பியல் முயல்கின்றது.

ஹோம்ஸ். மண்டையில் குறிப்பிட்ட இடத்தில் தாக்கப்படுபவர்களுக்கு மட்டும்தான் இத்தகைய 'இறையருள்' கிட்டும் என்பதில்லை. தொடர்ந்து ஆன்மீக சிந்தனையால் தாக்கப்படுபவர்களுக்கும் இத்தகைய 'உள்காய்ம்' ஏற்படக்கூடும்.

''இந்த வலிப்பு தோற்றுவிக்கும் மின் அதிர்வுகள் 'டெம்பரல் லோப்' என்ற பகுதிக்கும், உணர்ச்சியையும் உணர்ச்சி சார் நினைவுகளையும் ஆளுகின்ற மூளையின் பகுதிகளுக்கும் உள்ள இணைப்புகளை வலுப்படுத்துவதால், மத உணர்வுகள் பொங்குகின்றன'' என்கிறார் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நரம்பியல் விஞ்ஞானி, விலயனூர் ராமச்சந்திரன்.

''ஒருவேளை மூளையில் கடவுள் 'குடியிருக்கும்' இந்தப் பகுதியை (God spot) அறுத்து அகற்றுவோமாகில், அந்த அறுவை சிகிச்சைக்கு என்ன பெயரிடலாம்? அதனை காடோக்டமி (வாசக்டமி போல) என்று அழைக்கலாமா?'' என இரு மாதங்களுக்கு முன் சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் வேடிக்கையாக அவர் குறிப்பிட்டார். இதையெல்லாம் சகித்துக்கொண்டு சும்மாயிருப்பார்களா மதவாதிகள்? இப்படிப்பட்ட ஆய்வுகள் தங்களது மத உணர்வைப் புண்படுத்துவதாக இங்கிலாந்தைச் சேர்ந்த கிறித்தவ அமைப்புகள் கூக்குரல் எழுப்பின. ''கடவுளை விரைவாகத் தொடர்பு கொள்வதற்கான ஆன்டனாவாக எங்களுடைய கண்டுபிடிப்புகளை நீங்கள் ஏன் கருதக்கூடாது?'' என்று அவர்களை 'சமாதானப்படுத்தினார்' ராமச்சந்திரன். அப்படியொரு 'ஆன்மீக ஆன்டனா'வை டாக்டர் பெர்சிங்கர் தயாரித்தும் விட்டார்.

### கோவில் கனெக்சன் இல்லாமலேயே கடவுளை ஒளிபரப்பும் ஆன்டனா!

காட் ஹெல்மெட் - கடவுள் தலைக்கவசம்! இதுதான் அவரது தயாரிப்பின் பெயர். மின்சாரத்தில் இயங்கும் இந்தக் கவசம், இதனை அணிந்திருப்பவரின் மூளையில் உள்ள டெம்பரல் லோப் பகுதியைக் குறி வைத்து காந்தப்புலங்களை உருவாக்க வல்லது. எவ்வித நரம்பியல் நோயும் இல்லாத நூற்றுக்கணக்கான மனிதர்கள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் ஒரு தனியறையில் இந்தக் 'கவச' சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். பல்வேறு நாடுகளையும் மதங்களையும் சார்ந்த அந்த நபர்கள் இந்த மூன்று நிமிடச் சோதனையின்போது தத்தம் கலாச்சாரத்துக்கு ஏற்ப, தாங்கள் ஏசுவையோ புத்தனையோ கண்டதாகக் கூறினர்.

டேவிட்சன் என்ற விஞ்ஞானி, கிறித்தவ ஜெபக்கூட்டங்களில், ஜெபித்துக் கொண்டிருக்கும்போதே, திடீரென்று உளறத் தொடங்கும் பெண்களின் மூளைகளை ஸ்கேன் (MRI scan) செய்தார். அத்தருணத்தில் அவர்களது மூளையுடைய முன்பகுதி ஏறத்தாழ செயலிழந்திருப்பதைக் கண்டார். தன் மீதான சுயகட்டுப்பாட்டை மனிதனுக்கு வழங்கும் மூளையின் முன்பகுதி செயலிழப்பதால், மொழி பிறழ்ந்து வரும் இந்த உளறலைத்தான், 'அந்நிய பாஷை' என்று கிறித்தவர்கள் கூறுகின்றனர்.

தியானத்தில் ஈடுபடும்போது, 'தான்' என்ற உணர்வு மறைந்து பிரபஞ்சத்துடன் இரண்டறக் கலந்து விடுவதாகக் கூறும் புத்த பிக்குகளும் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டனர். ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது சிந்தனையின் மீது மட்டுமே மூளை ஒன்று குவிக்கப்படும்போது, திசை மற்றும் வெளி குறித்த பிரக்ஞையை வழங்குகின்ற 'பாரிடல் லோப்' செயலிழப்பதையும், அதன் காரணமாகவே இவர்கள் இத்தகைய பிரமைக்கு ஆளாவதையும் விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டினர்.

இவையன்றி, பட்டினி கிடத்தல் (விரதம்), இரத்தச் சர்க்கரையின் அளவு அலைபாய்தல், திரும்பத் திரும்ப ஒரே சொல்லை உச்சரிக்கும் மந்திர உச்சாடனங்கள், ஒரே விதமான அசைவு கொண்ட நடனம் ஆகியவையும் 'அமானுஷ்யமானவை' என்று சொல்லப்படும் அனுபவத்தைத் தரவல்லவை. மிக உயர்ந்த சிகரங்களுக்கு (அமர்நாத்) செல்லும்போது மூளைக்கு பிராணவாயு செல்வது குறைவதும், கஞ்சாவும், வேகமாகப் பக்கவாட்டில் சுழலும் குடைராட்டினமும் கூட 'ஆன்மீக அனுபவங்களை'த் தூண்டக் கூடும் என்கிறது நரம்பியல் விஞ்ஞானம்.

மூளையின் உட்பகுதியில் உள்ள பீனியல் சுரப்பியிலிருந்து வெளியாகும் டைமெதில் டிரிப்டாமைன் என்ற வேதிப்பொருள்தான் இது போன்ற மாயத்தோற்றங்களை உருவாக்குகிறது என்று 'ஆன்மீக மூலக்கூறு' என்ற தனது நூலில் குறிப்பிடுகிறார் ரிக் ஸ்டிராஸ்மேன். மொத்தத்தில் பக்தர்கள் துரும்பில் தேடிய இறைவனை நரம்பில் கண்டுபிடித்ததுடன், 'இறை நரம்பியல்' (neuro theology) என்றொரு துறையையும் உருவாக்கிவிட்டது அறிவியல்.

எனினும், தூக்க மாத்திரை சாப்பிட்டுத் தூக்கத்தை வரவழைப்பது போல கடவுள் மாத்திரை சாப்பிட்டுக் கடவுளை வரவழைக்கலாம் என்றோ, பேதி மாத்திரை போன்றதொரு மாத்திரையால் மூளையிலிருந்து சுமுகமாகக் கடவுளை வெளியேற்றி விடலாம் என்றோ அறிவியல் கூறவில்லை. ''மனித மூளையின் உள்ளே தோன்றும் **மாயத்தோற்றங்களோ,** விவரிக்கமுடியாத 'பரவச உணர்வுகளோ', வெளியே கடவுள் என்பவர் **இருப்பதற்கான** ஆதாரமாக முடியாது'' என்பதையே இந்த ஆய்வுகள் நிறுவுகின்றன.

### ஏசு இறங்கினாரா? எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்கும் தேவ சாட்சியம்!

மதம் என்பது ஒரு நம்பிக்கை. அந்த நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் சிந்தனைக்கான காரணத்தையும் அதற்கான சமூக அடிப்படைகளையும் நரம்பியல் ஆராயவில்லை; ஆராயவும் முடியாது. மாறாக, அந்த நம்பிக்கை தோற்றுவிக்கும் உணர்வை, நமது நரம்பு மண்டலம் உயிர் வேதியல் மொழியில் எவ்வாறு மொழிபெயர்த்துள்ளது என்பதை, அதாவது மத உணர்வின் பொருள் வடிவத்தைக் கண்டறியவே நரம்பியல் முயல்கின்றது.

பெர்சிங்கரின் ஹெல்மெட்டால் நாத்திகரின் மூளையில் கடவுள் நம்



படிப்பகம்

www.padippakam.com

பிக்கையை வரவழைக்க முடியாது; ஆத்திகரின் மூளையிலிருந்து நம்பிக்கையை அகற்றவும் முடியாது. அவருடைய ஹெல்மெட் சோதனையில் பங்கேற்ற ஒரு கன்னியாஸ்திரீ, ''ஏசு எனக்குள் இறங்கினாரா டாக்டர்? ஸ்கேன் ரிப்போர்ட்டைப் பார்த்து கொஞ்சம் சொல்லுங்களேன்'' என்று சோதனை முடிந்தபின் பெர்சிங்கரிடம் கேட்டாராம். இறை நம்பிக்கையை ஒழிக்கும் என்று நாம் எண்ணிக்கொண்டிருக்கும் ஒரு அறிவியல் கண்டுபிடிப்பு, அதற்கு நேரெதிரான விளைவை அந்த கன்னியாஸ்திரீயிடம் ஏற்படுத்தியிருக்கின்றது.

**பொருளும் சிந்தனையும்: புரட்சி எனும் ஹைட்ரஜன் கொலைடர்!**

இயற்பியல் கடவுள் துகளைக் கண்டறிந்தாலும், மத உணர்வின் உயிர் வேதியல் சங்கேதங்களை நரம்பியல் கண்டுபிடித்தாலும் இவற்றின் விளைவாகவெல்லாம் மத நம்பிக்கை தானே ஒழிந்து விடாது. மதம் என்ற அபினை மனித மூளைக்குள் உற்பத்தி செய்யும் அடித்தளம் சமூகத்தில் இருப்பதால், ஒரு சமூகப் புரட்சியின் மூலம் மட்டுமே மனித மூளையிலிருந்து 'கடவுளை' அகற்ற முடியும் என்றார் மாமேதை மார்க்ஸ். அத்தகையதொரு புரட்சியை சாதிக்கும் பொருட்டு, மனித சமூகம் எனும் சோதனைச்சாலையில் நடத்த வேண்டியிருக்கும் ஆய்வும், மனிதர்களின் சிந்தனையை மாற்றியமைக்கும் இந்தச் 'சோதனையும்' ஒப்பீட்டளவில் கடினமானவை.

உலக முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு மென்மேலும் ஆட்படுத்தப்படும் மக்கள், அந்தத் துயரத்திலிருந்து விடுபடவும் முடியாமல், காரணமும் விளங்காமல், கடவுளிடமும் மதத்திடமும் சரணடைகிறார்கள். இந்தச் சுரண்டலால் ஆதாயமடையும் ஆளும் வர்க்கமோ மக்களை இந்த மடமைப் படுகுழியில் ஆழ அமிழ்த்துகிறது.

எந்த மேலை நாடுகளில் நடைபெறும் அறிவியல் ஆய்வுகள் கடவுளைத் துரத்துகின்றனவோ, அதே அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் கடவுள் அரியணையில் ஏற்றப்படுகின்றார். அமெரிக்காவின் 5 மாநிலங்களில் பள்ளி மாணவர்களுக்கு விவிலியம் கற்பிக்கப்படுகிறது. மதச்சார்பற்ற நாட்டில் பள்ளிகளில் மதக்கல்வி அளிக்க சட்டரீதியான தடை இருப்பதால், 'கல்விச் சுதந்திரம்' என்ற பெயரில் அறிவியல் வகுப்புக்குள் விவிலியம் நுழைக்கப்பட்டு விட்டது.


'டார்வினின் பரிணாமக் கோட்பாட்டுடன் விவிலியத்தின் படைப்புக் கோட்பாட்டையும் கற்பிக்க வேண்டும்' என்பதை ஒரு இயக்கமாகவே நடத்திவர், புஷ் கட்சியின் சார்பில் தற்போது குடியரசுத் துணைத்தலைவர் பதவிக்குப் போட்டியிடும் சாரா பாலின். அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் கிறித்தவ தீவிரவாதக் குழுக்கள், கோடிக்கணக்கில் டாலரை இறைத்து ஐரோப்பிய நாடுகளின் பள்ளிகளிலும் ஏசுவை இறக்கி வருகின்றன.

பரிணாமக் கோட்பாட்டை உருவாக்கிய சார்லஸ் டார்வின் பணியாற்றிய இடமும், உலகின் புகழ் பெற்ற அறிவியல் மையமுமான, பிரிட்டிஷ் ராயல் சொசைட்டி என்ற நிறுவனமே பள்ளிகளின் அறிவியல் வகுப்புகளில் பைபிளின் படைப்புக் கோட்பாட்டைச் சேர்ப்பதற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றது (தி இந்து, செப், 18).

விவிலியக் கோட்பாடே அறிவியல் பூர்வமானது என்று சித்தரித்து, டார்வினைக் கேவலப்படுத்தும் குறுந்தகடுகளை இலட்சக்கணக்கில் இங்கிலாந்தின் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கின்றன அமெரிக்க இவான்ஜெலிகல் குழுக்கள். ''குரங்குக்கும் மனிதனுக்கும் மூதாதை ஒன்று என்றால் மிச்சமுள்ள குரங்கெல்லாம் இன்னும் ஏன் மனிதனாகவில்லை?'' என்று 1860 ஆம் ஆண்டில் டார்வினுக்கு எதிராக மூடப்பாதிரிகள் எழுப்பிய அதே நைந்துபோன கேள்வியை மீண்டும் எழுப்புகின்றன இந்தக் குறுந்தகடுகள். ஒவ்வொரு பள்ளியாகச் சென்று பைபிளுக்குப் பலியான மாணவர்கள் மத்தியில் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாக விளக்கமளித்துக் கொண்டிருக்கிறார் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும், பிரிட்டனின் புகழ் பெற்ற பகுத்தறிவாளருமான ரிச்சர்டு டாகின்ஸ்.

''அடுத்தது என்ன, உயிரியல் வகுப்பில் ஆதாமின் விலா எலும்பை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமா?'' என்று குமுறியிருக்கிறார் ஒரு அறிவியலாளர். இல்லை, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விலா எலும்பை முறிக்க வேண்டும். அதுதான் டார்வினுக்கு நாம் செலுத்தும் அஞ்சலி. அறிவியல் பார்வை வளர்வதற்கும் கூட அதுதான் வழி.

● சூரியன்





படிப்பகம்

www.padippakam.com



# சுப்ரமணியபுரம்: ரசிக்கத்தக்க ரவுடித்தனம்?

சுப்பிரமணியபுரம் ஏன் வெற்றி பெற்றது என்பதைப் பற்றி இந்நேரம் கோடம்பாக்கத்து முதலாளிகள் நிச்சயமாக 'ரூம் போட்டு' யோசித்துக் கொண்டிருப்பார்கள். வழக்கம் போல இப்படத்தின் நகல்கள் பல டிஸ்கஷனில் இருக்கவும் வாய்ப்புண்டு. எனினும் ரசிகர்கள் இப்படத்தை மனம் ஒன்றிப் பார்க்கிறார்கள் என்பதை மறுக்கவியலாது. பருத்தி வீரன் ரகத்தில், அதனைக் காட்டிலும் ரசிகர்களின் மனதுக்கு நெருக்கமாக இருப்பதை உத்திரவாதப்படுத்தும் வகையில் திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டிருக்கும் படம் இது.

இந்தப் படத்தில் பார்வையாளர்களைக் கட்டிப்போடும் உணர்ச்சி எது? ஒரு நண்பர் குழாமின் உயிர்த்துடிப்பான உற்சாகமும் நட்பின் அடிப்படையில் அவர்களிடையே நிலவும் விசுவாசமும்தான் அந்த உணர்ச்சி. அழகர், பரமன், காசி, டுமுக்கான், மற்றொருவன் என ஐவரடங்கிய அந்தக் குழாமின் சேட்டைகள், காதல், பிரச்சினைகள், பிரிவு, மறைவு, அனைத்தையும் பார்வையாளர்கள் அவற்றில் தோய்ந்து ரசிக்கின்றார்கள். எல்லோரிடமும் மலரும் நினைவுகளாய்ப் புதைந்திருக்கும் நண்பர் குழாமின் நினைவுகளை இந்தப் படம் மீட்டுத் தருகின்றது.

ஒவ்வொரு நண்பர் குழாமிலும் அப்பாவுக்குத் தெரிந்தே தம் அடிக்கும் வீரர்கள், அப்பாவுக்கு பயந்து ஒளியும் கோழைகள், காதலிக்கும் அதிர்ஷ்டம் வாய்க்கப் பெற்றவர்கள், அதற்காக அலைபவர்கள், காசை ஒளித்து செலவு செய்யும் காரியவாதிகள், மறைக்காமல் செலவு செய்யும் வள்ளல்கள், தோற்றப்பொலிவு இல்லாததைத் தனது நகைச்சுவை மூலம் ஈடு செய்யும் குழுவின் ஜோக்கர்கள் எனப் பலரகம் உண்டு. பாசம், காதல் மட்டுமல்ல, நண்பர் குழாம் சென்டிமென்டைக் கிளறினாலும் காசு எடுக்கலாம் என்பதை இப்படம் நிரூபித்திருக்கின்றது.

பெற்றோர், உறவினர், ஆசிரியர், தெருக்காரர்கள் ஆகியோரிடம் சில்லறை விவகாரங்களுக்காக முரண்பட்டு, அது தொடர்பாக வருகின்ற தகராறுகளில் தங்களுடைய 'வீரத்தை நிலைநாட்டுவது' நண்பர் குழாம்களுடைய 'ஆளுமை'யின் முக்கியக் கூறு. இதனைப் படத்தின் முதல் பாதியில் இயக்குநர் அன்போடு சொறிந்து விடுகின்றார். அந்த இன்பத்தில் ரசிகர்களும் வாட்டமாக முதுகைக் காட்டுகிறார்கள்.

விழிகளால் காதல் பேசும் துளசியை காதலிக்கும் பெருமையில் தனது அசட்டுத்தனத்தை மறந்துவிடும் அழகர், தனது வெறுமையை சிகரெட் பிடித்தும், நண்பர்களின் மேல் கைவைக்கும் நபர்களை ரோசத்துடன் எதிர்த்து சண்டைபோட்டும் போக்கிக் கொள்ளும் பரமன், பெரிய மனிதர்களின் கள்ள உறவை நகைச்சுவையுடன் அம்பலமாக்கும் காசி, கால் முடமாகி 'ஐயோ பாவம்' மாதிரி தெரிந்தாலும் நண்பர் குழாமின் அத்தனை நடவடிக்கைகளிலும் பங்கேற்கும் டுமுக்கான், நண்பர் குழாம் சங்கமிக்கும் அலுவலகமான சித்தன் சவுண்ட் சர்வீஸ்.. என இந்த நட்புக் குழுவின் அன்றாட வாழ்க்கையில் பார்வையாளர்கள் மெல்ல பங்கேற்பாளர்களாகி விடுகின்றார்கள்.

விவசாயம் விளங்காமல், தொழில் வளர்ச்சியும் இல்லாமல் கண்டிப்பாகச் சிறிதுகாலமாவது வேலை வெட்டியில்லாமல் சுற்றுமாறு விதிக்கப்பட்ட சிறுநகரத்து இளைஞர் குழாம்களின் அன்றாட நடவடிக்கைகள் அநேகமாக இப்படித்தான் இருக்கின்றன.

மதகுக் கட்டைகளிலும், சலூன்களிலும், தேநீர்க் கடைகளிலும், மதுக்கடைகளிலும் நேரத்தைக் கழிக்கும் இத்தகைய நண்பர் வட்டங்களில் பங்கு பெறாதவர் யாரும் இருக்க முடியாது. பேசுவதற்கு விசயமே இன்றி அக்கப்போர்களையும், அரட்டைகளையும், பாலியல் ஜோக்குகளையும் பகிர்ந்து கொள்ளும் இதுபோன்ற குழுவைத் தாண்டித்தான் நம்மில் பலரும் வந்திருக்கின்றோம்.

ஊரின் நல்லது கெட்டது அத்தனையிலும் இத்தகைய நண்பர்கள்தான் நாயகர்களாக முன் நிற்கிறார்கள். நெருப்பிலும் இறங்கத் துணியும் இளமைப்பருவம் எந்த நோக்கமுமின்றி தெருச்சண்டையிலும், திரையரங்கச் சண்டையிலும், புதுப்பட ரிலீசின் கொண்டாட்டத்திலும், ரசிகர்மன்றச் சண்டையிலும் அழிகின்றது.



சில்லறைத் தகராறுகளில் சிக்கி மீளவழியில்லாத போது, சாதாரண போலீசு கேசிலிருந்து விடுபடுவதற்கு உள்ளூர் அரசியல் தலைவர்களையோ, ரவுடிகளையோ தஞ்சமடைகின்றது. பிறகு அவர்களுக்கு விசுவாசமாக நடக்கத் தொடங்கி, அவர்களுடைய அதிகாரநிழல் அளிக்கும் போதையில் கொஞ்சம் கொஞ்சமாக ஊழல் படத் தொடங்குகின்றது. இதன் ஊடாகத் தற்செயலாக நடக்கும் சில சம்பவங்கள் அவர்களது


படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கையின் போக்கையே தீர்மானித்து விடுகின்றன. இவ்வாறு சிக்கிச் சீரழியாமல் தப்புபவர்கள் வேலை - தொழில் என்று ஒவ்வொருவராகப் பிரிகிறார்கள். நண்பர் குழாமும் கலைகின்றது.

உழைக்கும் வர்க்கமா - நடுத்தர வர்க்கமா, நகரமா - மாநகரமா என்பதற்கேற்ப அவர்களது சூழலிலும் செயல்பாடுகளிலும் சில வேறுபாடுகள் வேண்டுமானால் இருக்கலாம். இருந்தாலும் இவற்றை இணைக்கும் பொதுஇழை ஒன்று உண்டு. அதுதான் நண்பர்களுக்கிடையே நிலவும் நட்பு. அதில் ஒருவருக்கொருவர் அவர்கள் கொண்டிருக்கும் விசுவாசம். கனவுக்கு ஏற்ற வேலை கிடைக்காமல், பெற்றோரால் தண்டச்சோறு என்று இகழப்படும் நேரத்தில் இவர்களை ஆசுவாசப்படுத்தும் உறவே இந்த நட்புதான்.

சுப்பிரமணியபுரம் நண்பர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், துன்பங்கள், மகிழ்ச்சிகள் அத்தனையிலும் ரசிகர்கள் தாங்களும் ஒருவராகக் கலந்து விடுகின்றார்கள்.

மற்றவர்களுக்கு பெரிய தீங்கிழைக்காத, ரவுடித்தனம் என்று சொல்லிவிட முடியாத விடலைப்பருவச் சேட்டைகளை விவரிக்கின்றது படத்தின் முதல்பாதி. 'கபடமற்றவர்கள் - நல்லவர்கள்' என்ற மதிப்பீட்டுடன் படத்தின் நாயகர்கள் பக்கம் ரசிகர்களை இழுத்து நிறுத்தியும் விடுகின்றது. பின்பாதியில் நண்பர்கள் கொலை செய்யும் ரவுடிகளாக மாறுகிறார்கள். அதற்கு அந்த அப்பாவிகள் பொறுப்பல்ல, சூழ்நிலைதான் அவர்களை அப்படி மாற்றி விடுகின்றது என்று காட்டுகிறார் இயக்குநர்.

அரசியல்வாதியான அண்ணனை மாவட்டத் தலைவராக உயர்த்த நினைக்கும் கனகு, தங்களுக்குச் செய்திருக்கும் உதவிக்கு செய்நன்றியாக முதல் கொலையைச் செய்கிறார்கள் நண்பர்கள். பிறகு சிறையிலிருந்து தங்களைப் பிணையில் எடுக்க உதவியவனுக்கு செய்நன்றியாக இன்னொரு கொலை. பிறகு, தங்களைக் கொல்ல கனகு அனுப்பும் ரவுடிகளை 'வேறு வழியின்றி' தேடிக் கொலை செய்கிறார்கள். இறுதியில் அழகரின் காதலியே தனது சித்தப்பன் கனகுவிடம் அழகரைக் காட்டிக் கொடுக்கிறாள். அழகர் கொலை செய்யப்படுகின்றான்.

காதல் துரோகமிழைத்த போதும் நட்பு தனது விசுவாசத்தை வெறித்தன

> **மதக்குக் கட்டைகளிலும், சலூன்களிலும், தேநீர்க் கடைகளிலும், மதுக்கடைகளிலும் நேரத்தைக் கழிக்கும் இத்தகைய நண்பர் வட்டங்களில் பங்கு பெறாதவர் யாரும் இருக்க முடியாது. பேசுவதற்கு விசயமே இன்றி அக்கப்போர்களையும், அரட்டைகளையும், பாலியல் ஜோக்குகளையும் பகிர்ந்து கொள்ளும் இதுபோன்ற குழுவைத் தாண்டித்தான் நம்மில் பலரும் வந்திருக்கின்றோம்.**

மாகக் காட்டுகின்றது. கனகுவைத் தேடிப்பிடித்து ஆட்டோவில் தூக்கிப் போட்டு வன்மத்துடன் அவனது கழுத்தை அறுத்துக் கொல்கிறான் பரமன். ரத்தம் தெறிக்கத் தெறிக்க ரசிகர்களின் கையொலி வலுக்கின்றது. பணத்துக்காக நண்பன் பரமனையே காட்டிக் கொடுக்கிறான் காசி. 28 ஆண்டுகள் கழிந்த பின்னரும் இந்தத் துரோகத்தைப் பழிவாங்குகிறது நட்பின் விசுவாசம். 'நொண்டி'யாய் இருந்தபோதும் டுமுக்கான் காசியைத் தேடிவந்து கொலை செய்கிறான். நட்பின் மேன்மை காப்பாற்றப்படும் உணர்ச்சி மேலோங்கிடப் பார்வையாளர்கள் அரங்கை விட்டு அகலுகின்றார்கள்.

இந்தப் பின்பாதிக் கதையில் ரவுடிகளைப் போற்றித் துதிக்கும் வழக்கமான தமிழ் சினிமா மரபிற்கு திரைப்படம் மாறிவிடுகின்றது. சில்லறைச் சேட்டைகள் செய்து கொண்டிருக்கும் நண்பர்கள் விசுவாசம் என்ற ஒரே காரணத்துக்காக (அழகரைப் பொருத்தவரை காதலிக்காகவும்), தமக்கு சம்பந்தமே இல்லாத ஒரு தலைவரைக் கொலைசெய்கின்றார்கள். கொலை செய்வது என முடிவெடுத்த பின் நண்பர்களிடையே தயக்கம், பயம், விவாதம், சண்டை எதுவும் இல்லை - பரமனின் பார்வையில் தெரியும் சிறிய ஆட்சேபத்தைத் தவிர.

அரசியல் தலைவர்கள்.. சதிகாரர்கள் - தொண்டர்கள்.. ஏமாளிகள் என்ற சித்தரிப்பும் உண்மைக்கு மாறானது. அழகிரிக்காக தினகரன் அலுவலகத்தை அட்டாக் பாண்டி கோஷ்டி தாக்கியது வெறுமென உணர்ச்சிவசப்பட்டு நடக்கவில்லை. அடிக்கச் சொன்னவருக்கு மட்டுமல்ல, அடித்தவருக்கும் பொருளாதார நலன்கள் இருப்பதால்தான் இவை நடக்கின்றன. எலும்புத் துண்டைப் போடாமல் எந்தத் தலைவரும் தொண்டர்களைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது. துண்டு கிடைக்காத இடங்களில் தொண்டர்களும் தமது விசுவாசத்தைக் காட்டுவதில்லை. மக்களுக்குக் கொடுக்கப்படும் வாக்குறுதிகளைத்தான் அரசியல்வாதிகள் காற்றில் பறக்கவிட முடியும். மற்றபடி தனிப்பட்ட விசுவாசத்துக்காக ஊழியம் செய்வதெல்லாம் நடப்பில் இல்லை. கதை நடைபெறும் 80 களிலும் இல்லை.

சின்னச் சின்ன அடிதடிகள் என்பதைத் தாண்டி, ஒரு கொலை என்ற அளவிற்குச் செல்லும்போது, அது நீதியா, நியாயமா என்பதற்காக விவாதம் நடக்கவில்லையென்றாலும், அந்தக் குழுவிலுள்ள ஒவ்வொருவனும் தனது சொந்த எதிர்காலத்தை நினைத்தாவது அது குறித்து விவாதிப்பது என்பது நடந்தே தீரும். அத்தகைய விவாதம் நண்பர் குழுவின் ஒற்றுமையைக் குலைத்து விடும் என்பதால் அதனைத் தவிர்த்திருக்கின்றார் இயக்குநர். 'நண்பர்கள் கேள்விக்கிடமற்ற முறையில் கனகுவின் மீது வைத்திருந்த அப்பாவித்தனமான விசுவாசம்' என்ற சென்டிமென்ட் மூலதனத்தையும் அது காலியாக்கிவிடும் என்பதால் நண்பர் குழுவை ஊமையாக்கி விட்டார் இயக்குநர்

அடுத்தடுத்து கொலைகள் தொடர்கின்றன. நண்பர்களுக்கு கொலை பழகி விட்டது. கொலைக்கு பணமும் வாங்கிப் பழகிவிட்டார்கள். இதுதான் சீரழிவு தீவிரப்படும் தருணம். ஆத்திரத்தில் ஒரு கொலை செய்துவிட்டு ஆயுள்தண்டனை அனுபவிக்கும் கைதிகளுக்கும் இவர்களுக்கும் பாரிய வேறுபாடு உள்ளது. 'சூழ்நிலைகளால் உருவாக்கப்படும்' இத்தகைய ரவுடிகள், முதல் கொலையில் வேண்டுமானால் சூழ்நிலையின் கைதியாக இருந்திருக்கலாம். அதன்பின் அவர்கள் அதுகாறும் தாங்கள் கொண்டிருந்த விழுமியங்களை ஒவ்வொன்றாக இழக்கத் தொடங்குகிறார்கள். தமது தற்காப்பு, தமது நலன், தமது ஆதிக்கம் இவற்றை நிலைநாட்ட எதையும் செய்யும் பக்குவத்துக்கு வந்து சேருகின்றார்கள். இத்தகைய சூழலில் சிறை பழகி விடும், போலீசும் பழகி விடும், குற்றமும் பழகி விடும்.


படிப்பகம்

www.padippakam.com

ஒரு செயல் நேர்மையானதா, சரியானதா என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கும் அளவுகோல்கள் மாறிவிடும். இரக்கமின்மையும், குடியும், கூத்தும், கட்டைப் பஞ்சாயத்தும், அதனால் வரும் பணமும், உழைக்காமல் தின்னும் ஊதாரி வாழ்க்கையும் பழகி விடும். பிறகு இந்தச் சொகுசு வாழ்க்கைதான் அவர்களது விழுமியங்களையும், அவர்கள் பேசும் நீதிகளையும் தீர்மானிக்கும்.



இது எப்படி நடக்கிறது, ஏன் நடக்கிறது? கதையின் முன்பாதியில் இனிய இளைஞர்களாக இருந்தவர்கள் எப்படி இதுபோல உருமாறினார்கள்? இவற்றைச் சித்தரிக்க முயன்றிருந்தால், அந்த அப்பாவிகளுக்கு உள்ளே இருந்த காரியவாதிகள், அந்த காமெடியன்களுக்கு உள்ளே இருந்த குரூர மனோபாவங்கள், அவர்களுடைய விசுவாசத்துக்கு உள்ளே ஒளிந்திருந்த காரியவாதம் போன்றவை வெளிவந்திருக்கும். வெளித்தோற்றத்துக்கு ஜாலியானதாகத் தெரியும் இத்தகைய நண்பர் குழுக்களின் வாழ்க்கை, உண்மையில் எத்தகைய விபரீதங்களை தனக்குள்ளே வைத்திருக்கின்றது என்பதும் விளங்கியிருக்கும்.

ஆனால் இவை எதுவும் இயக்குநரின் நோக்கமில்லையே. நண்பர் குழாமின் விசுவாசம் என்ற சென்டிமென்டை மட்டுமே மையப்படுத்தி, அதன் சிதைவை ஒரு அவலச்சுவையாக சித்தரிப்பதே இயக்குநரின் இலக்கு. இந்த இலக்குதான் பார்வையாளர்களின் அறிவை மழுங்கடித்து உணர்ச்சிப்பூர்வமாக அவர்களைப் படத்துடன் ஒன்றச்செய்திருக்கின்றது.

இது வழக்கமான வணிகச்சினிமா உத்திதான் எனினும், எதார்த்தம் என்ற தோற்றத்துக்குள் இது புதைந்திருப்பதால் இதனை அடையாளம் காண்பது பலருக்கு இயலாமல் போகின்றது.

மதுரை மண்ணின் வாழ்க்கையும், மற்ற வட்டார வழக்குகளைக் காட்டிலும் மதுரை மொழியில் வீசும் மண் வாசனையும், எதார்த்தமான காட்சி சித்தரிப்புகள் ஏற்படுத்தும் சொந்த ஊர் குறித்த ஏக்கமும் ரசிகர்கள் இந்தப் படத்தோடு நெருக்கமாவதற்கு இன்னுமொரு காரணமாக இருக்கின்றது.

தமிழ் சினிமாவின் வெற்றி அல்லது தோல்வி மதுரை ரசிகர்களின் எதிர்வினையைப் பொறுத்துதான் என்பார்கள். விசேசம், சாவு, அரசியல் அத்தனைக்கும் விதவிதமான சுவரோட்டிகள் மதுரையில்தான் அதிகம். வெற்றுப் பந்தாவை ஆபாசமாகப் பிரகடனம் செய்யும் கட்அவுட்டுகளும், பிளக்ஸ் பேனர்களும் அங்குதான் அதிகம். எல்லா ரசிகர் மன்றங்களும் தீவிரமாகச் செயல்படும் புண்ணியத்தலமும், தமிழ் சினிமாவுக்கு 'மண்வாசனை' கமழும் இயக்குநர்களைத் தொடர்ந்து அளிக்கும் களஞ்சியமும் மதுரைதான்.

இளைஞர்களின் முடி, உடை, நடை, பாவனை ஆகியவற்றின் புதிய போக்குகளும், நக்மா வளையல், குஷ்பு சேலை, த்ரிஷா ஜிமிக்கி, அசின் மாலை ஆகிய அனைத்துமே மதுரையில்தான் ரிலீஸ். கோவில் திருவிழா, பிரம்மாண்டமான சீரியல் செட், வாணவேடிக்கைகள், நாட்டுப்புறக் கலைகள், ரிக்கார்டு டான்சு, நாடகங்கள் அத்தனைக்கும் செறிவான மையம் மதுரைதான். மஞ்சுவிரட்டிலிருந்து, மாமன் மகளைக் கட்டித்தரவில்லை என்பதற்காகக் கொலை செய்யும் வீரத்திற்கும் மதுரைதான் தலைநகரம். குடும்பத் தகராறுக்கு கொலை செய்து ஆயுள் தண்டனையில் சிறையிலிருப்பவர்களும் இங்குதான் அதிகம்.

> சுப்பிரமணியபுரத்தின் நாயகர்களான நண்பர்களின் 'வெகுளித்தனமான, வேடிக்கையான, வண்ணமயமான, உயிர்த்துடிப்பான வாழ்க்கை', தோற்றத்திலும் உள்ளடக்கத்திலும் மதுரையையே ஒத்திருக்கின்றது. இத்தகைய அஞ்சாநெஞ்சர்களுடைய வீரத்தையும், அவர்களுடைய விசுவாசிகளின் அலப்பறைகளையும் சுப்பிரமணியபுரம் மக்கள் இன்றும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

உதிரிப் பாட்டாளிகளிடமிருந்து தமிழகத்திற்கு தேவையான ரவுடிகளை அளிக்கும் அமுதசுரபியும் மதுரைதான். ஆதிக்கசாதி வெறியின், தேவர்சாதி வெறியின் சிங்காரத் தலைநகரமும் மதுரைதான். கந்து வட்டியிலிருந்து, மீட்டர் வட்டி வரை எல்லா வட்டிகளையும் கண்டுபிடித்து தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியதும் மதுரைதான். வேலை வெட்டி இல்லாமல் பெண்டாட்டி உழைத்து சம்பாதித்த காசை அடித்துப் பிடுங்கி குடித்துவிட்டு ஆடும் 'வீர'த்திலும் மதுரைக்கே முதலிடம்.

சாதிய, நிலவுடைமைச் சமூகத்தின் எல்லா பிற்போக்குகளையும் பொத்திப் போற்றி வளர்க்கும் இந்த மதுரையின் படிமங்கள் அனைத்தும் அழுகிவரும் நிலப்பிரபுத்துவ சமூகத்தின் எச்சங்களே.

சுப்பிரமணியபுரத்தின் நாயகர்களான நண்பர்களின் 'வெகுளித்தனமான, வேடிக்கையான, வண்ணமயமான, உயிர்த்துடிப்பான வாழ்க்கை', தோற்றத்திலும் உள்ளடக்கத்திலும் மதுரையையே ஒத்திருக்கின்றது. இத்தகைய அஞ்சாநெஞ்சர்களுடைய வீரத்தையும், அவர்களுடைய விசுவாசிகளின் அலப்பறைகளையும் சுப்பிரமணியபுரம் மக்கள் இன்றும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். சுப்பிரமணியபுரத்தின் நாயகர்கள் ஒருவேளை கொல்லப்படாமல் உயிரோடு இருந்திருந்தால் அவர்களும் மதுரையில் ஒரு ஏரியாவை மடக்கி ஆண்டு கொண்டிருப்பார்கள். அழகிரியின் மகன் துரை தயாநிதியின் தளபதிகளாகவும் வளர்ந்திருக்கக் கூடும்.

● வேல்ராசன்


படிப்பகம்

www.padippakam.com


ஒரு முசுலீமின் வீட்டுக்கதவை போலீசோ அல்லது ஆர்.எஸ்.எஸ் குண்டர்களோ தட்டிக் கொண்டே இருக்கிறார்கள். குண்டு வெடிப்புகளுக்காக அப்பாவி முசுலீம்களை போலீசு கைது செய்கின்றது. இந்துத்துவா திட்டத்திற்காக அப்பாவி முசுலீம்களை ஆர்.எஸ்.எஸ் கொல்கின்றது. மத்தளத்திற்கு இரு பக்கமும் அடி போல ஆகிவிட்டது இசுலாமிய மக்களின் நிலைமை. வீடு, வேலை, கல்வி அனைத்திலும் முசுலீம் என்பதற்காகவே வாய்ப்புகள் மறுக்கப்படும் அளவுக்கு அவர்கள் தனிமைப் படுத்தப்பட்டிருக்கின்றார்கள். அவ்வளவு ஏன் சென்னையில் இரண்டாம் காட்சி சினிமாவைப் பார்ப்பதற்குக்கூட ஒரு முசுலீமுக்கு சுதந்திரம் இல்லை.




ஒவ்வொரு குண்டு வெடிப்பின் போதும் ஓராயிரம் முசுலீம் மக்களின் நிம்மதி குலைக்கப்படுகின்றது. குண்டு வைத்த தீவிரவாதிகளை உடனே கைது செய்து ரிசல்ட் காட்ட வேண்டுமென்ற இயல்பான பொது நிர்ப்பந்தம் காரணமாக எண்ணிறந்த முசுலீம் மக்கள் எந்தக் குற்றமுமிழைக்காமல் ஆண்டுக் கணக்கில் சிறையில் வாடுகின்றார்கள். இது அப்படிப்பட்டவர்களின் கதை. தெகல்கா ஏடு இந்தியாவெங்கும் புலனாய்வு செய்து இந்த உண்மைகளை வெளியிட்டிருக்கின்றது. தொந்தரவில்லாமல் நிம்மதியாக வாழும் இந்து மனத்தை இந்த கண்ணீர்க்கதைகள் சற்று நேரமாவது குறுக்கீடு செய்யட்டும்.

•••

அகமதாபாத் பள்ளி வாசல் ஒன்றில் ஜூமா நமாஸில் நிதானமாக அமைதியாக ஜூலை 25, 2008, வெள்ளியன்று தொழுகை நடத்தி ''இந்துக்களோடு பரஸ்பரம் நேசமான வாழ்க்கை வாழவேண்டும்; அடுத்தவன் பசியோடு இருக்க நாம் மட்டும் வயிறு முட்டச் சாப்படுவது அநீதி'' என்று போதித்த ஒலியான இசுலாமியக் கல்விமான் அப்துல் அலீம் — அடுத்தநாள் ஜூலை 26 அகமதாபாத் குண்டு வெடிப்புக்குப் பிறகு சில நிமிசங்களுக்குள்ளாகவே போலீசால் கைது செய்யப்பட்டார். வீட்டில், தெருவில் எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்து நிற்க, தடதடவென வீட்டுக்குள்ளிருந்து அலீம் இழுத்துச் செல்லப்பட்டார்.



ஞாயிறு - ஜூலை 27 அன்று டி.வி., செய்தித்தாள்களில் அப்துல் அலீம் புழுதிவாரித் தூற்றப்படுகின்றார். ரகசிய சதிவேலை செய்த தீவிரவாதி என்று வர்ணிக்கப்பட்ட அலீம் நெரிசல்மிக்க சந்தடிமிகுந்த முசுலீம் பகுதிகளில் மக்களால் மதிக்கப்பட்டவர்தான். இரண்டு மாதங்களுக்கு முன்புகூட உள்ளூர் இன்ஸ்பெக்டர் அலீமின் அமைப்பான 'அஹ்பே ஹதீஸ்' இசுலாமியப் பிரிவின் டிரஸ்டுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்; அவரது உறுப்பினர்கள் பட்டியல் தனக்கு உடனே வேண்டும் எனக் கோரியிருந்தார். அப்போதுகூட, போலீசாரின் தகவலின்படி, அலீம் ஒரு முகவரியில் டிரஸ்டு நடத்துபவர்தான்; தவிர, அலீம் சட்ட விரோத மானவரோ, ரகசிய நபரோ அல்ல.

2006 இல் அலீமின் அமைப்பு புது டெல்லியில் நடத்திய தேசியக் கருத்தரங்கத்திற்குத் தலைமை விருந்தினராக வந்தவர் உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் என்பது குறிப்பிடப்பட வேண்டிய சிறப்புச்செய்தி. குஜராத் இனப்படுகொலைக்குப் பிறகு, அலீம் ஏராளமான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார். அப்போது, நிராதரவாக விடப்பட்ட 34 முசுலீம் குழந்தைகளுக்கு குவைத்தில் வசிக்கும் ஒரு பணக்காரரிடம் உதவி கோரினார். ஆனால் திட்டம் நிறைவேறவில்லை, கைவிடப்பட்டது. குழந்தைகளும் அந்தப் பணக்காரரிடம் அனுப்பப்படவில்லை. இதையெல்லாம் காரணம் காட்டி அலீமின் மீது தீவிரவாதக் குற்றச்சாட்டு தொடுக்கப்பட்டது. தீவிரவாதப்பயிற்சி எடுப்பதற்காக அகமதாபாத்திலிருந்து இளைஞர்களை உ.பி.க்கு அனுப்பினார்; 2002-லிருந்து தலைமறைவாகி விட்டார்'' என்றெல்லாம் ஜோடித்து, அவரைப் பயங்கரவாதிகளுக்கு பயிற்சி கொடுத்ததாகச் சித்தரித்து குற்றவாளியாக்கினார்கள்.

சட்டத்துக்கு உட்பட்ட குடிமகனாய் வலம் வந்த ஒரு இசுலாமிய மத நம்பிக்கையாளரான அலீமை சட்டவிரோதமாகத் தீவிரவாதியாய்க் காட்டி இப்போது 2008 இல் கைதுசெய்து உள்ளே தள்ளிவிட்டது போலீசு. நமக்கு எழும் கேள்வி: முன்பு அலீமின் டெல்லி



படிப்பகம்

www.padippakam.com

கருத்தரங்கில் கலந்து கொண்ட சிவராஜ் பாட்டிலை விசாரித்து விட்டார்களா?

நம்முள் எழும் வேதனை: அலீம் சிறையில் வாடுகின்றார்; அலீமின் குடும்பமோ அடுத்தவேளைச் சோற்றுக்கே பரிதவிக்கின்றது. அலீம் இருந்த வரை கடைச்சிறுவன் உதவியோடு பழைய இரும்புக் கடை ஒன்றை நடத்தி வந்தார்; இப்போது சிறுவன் மட்டுமே கடையைக் கவனிக்கின்றான்; அதிக வருவாயில்லை. ஒவ்வொரு மாதமும் வீட்டுவாடகைக்கு அலீமின் மனைவி ரூ. 2500 தேற்ற வேண்டும்; 5 குழந்தைகளுக்குச் சோறு போட்டுக் காப்பாற்ற வேண்டும்.




•••

ஐதராபாத்தில் மவுலானா மொகம்மது நசீருதீன் மற்றும் அவரது இரு மகன்களான யாசிர், நசீர் - ஆகிய மூவரையும் 'தீவிரவாதிகளின் குடும்பம்' என்று போலீஸ் அழைத்தது. நசீருதீன் முப்பதாண்டுகளுக்கு முன்னால் தெருவோரக் கடைகளில் தான் கற்ற மோட்டார்பைக் ரிப்பேர், வேலைத் திறன், நண்பர்களிடம் வாங்கிய கடன் இவற்றை வைத்து என்ஜினீயரிங் ஒர்க்ஷாப் வைத்திருந்தார்.

நசீருதீன் இசுலாமியக் கல்விமான். பாபர் மசூதி இடிப்பு, குஜராத் 2002 முசுலீம் படுகொலைகள் இரண்டிலும் அரசை வெட்டவெளிச்சமாக விமரிசித்தவர்; ''குஜராத்தில் கலவரம் செய்தார்; 2003 மார்ச்சில் குஜராத் உள்துறை அமைச்சர் ஹரேன் பாண்டியாவைக் கொலை செய்த சதியில் ஈடுபட்டார்'' என்ற சொல்லி 4 ஆண்டுகள் சிறையில் தள்ளப்பட்டார்.

செப் 2001ல் 'சிமி' தடை செய்யப்பட்ட சமயத்தில் யாசிர் இதில் உறுப்பினர். பிறகு பல பொய்வழக்குகளில் அவர் சேர்க்கப்பட்டபோதும் 'சிமி' உறுப்பினர் என்பதிலிருந்து தொடங்கியே வழக்கு சோடித்தது போலீசு. முதலில் 2001-இல் 'சிமி' தடைசெய்யப்பட்டபோது கைது; கைதான மறுநாளே பிணை கிடைத்தது; ஆனால் 'அரசை எதிர்த்துப் பேசினார்' என்று அடுத்தநாளே மறுபடியும் கைது, 29 நாள் சிறை. இப்போது ஏழாண்டுகளாகி விட்டன. ஆனாலும் எந்த வழக்குமே நடக்கவில்லை.

அண்மையில் ஜூலை 15, 2008 இல் மறுபடி கைது - பெங்களூருவைக் குலுக்கிய குண்டு வெடிப்புக்கள் ஜூலை 25-இல் நடந்தபோது, குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட தீவிரவாதிகளைக் கர்நாடகாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தவர் என்று பின்னால் வந்த வழக்குடன் பிணைக்கப்பட்டார். ஆதாரம் விசாரணையில் யாசிரே கொடுத்த வாக்குமூலம் என்றார் கமிஷனர் பிரசன்னராவ். போலீசு சொன்னது பொய் என்று தனது தாய் உதாய் பாத்திமா மூலம் வெளி உலகுக்குத் தெரிவித்தார் யாசிர். தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு அடித்துச் சித்திரவதை செய்து கையெழுத்து வாங்கி விட்டார்கள் என்று அதனது குரூரத்தை அம்பலமாக்கினார் பாத்திமா.

யாசிரின் தம்பி நசீர் இருபதே வயது நிரம்பியவர். ஜனவரி 11, 2008 இல் கர்நாடகாவில் நண்பர் ஒருவருடன் பைக்கில் சென்று கொண்டிருந்தபோது மறித்து நிறுத்திக் கைதுசெய்யப்பட்டார். மோட்டார் சைக்கிளைத் திருடி ஓட்டுவதாகவும், இருவரும் கைவசம் சிறுகத்தி வைத்திருப்பதாகவும், 'அரசுக்கெதிராகப் போர்செய்ய இருப்பதாகவும்', தாங்கள் 'சிமி' உறுப்பினர்கள் என வாக்குமூலம் கொடுத்ததாகவும் போலீசு கூறியது. ஆனால் 90 நாட்களுக்குப் பிறகும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படாததால், நசீரின் வழக்குரைஞர் பிணை பெற்றார். ஆனால் உடனே அவர் மீது சதிவழக்கொன்றைப் போட்டு சிறையிலிருந்து வெளியே வராதவாறு போலீசு செய்து விட்டது.

அக், 2004 இல் மவுலானா நசீருதீன் கைது செய்யப்பட்டபோது அதை எதிர்த்து மக்கள் காவல்நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது ஐதராபாத் வந்திருந்த குஜராத் போலீசு அதிகாரி நரேந்திர அமீன் தனது துப்பாக்கியால் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டார். இறந்தவர் உடலை வைத்துக்கொண்டு, அமீன் மீது வழக்குப் போட்டால்தான் நகருவோம் என்று மக்கள் உறுதியாக அங்கேயே மறியல் செய்தனர். போலீசு மக்கள் மீது ஒரு வழக்கும் அமீன் மீது ஒரு வழக்குமாகப் பதிவுசெய்தது. அமீன் கைது செய்யப்படவில்லை. பிறகு அமீன் மீதான வழக்கு ஓர் அங்குலம் கூட நகரவில்லை. அன்று மவுலா

**ஜூமா நமாஸில் நிதானமாக அமைதியாக ஜூலை 25, 2008, வெள்ளியன்று தொழுகை நடத்தி ''இந்துக்களோடு பரஸ்பரம் நேசமான வாழ்க்கை வாழவேண்டும்; அடுத்தவன் பசியோடு இருக்க நாம் மட்டும் வயிறுமுட்டச் சாப்பிடுவது அநீதி'' என்று போதித்த ஒல்லியான இசுலாமியக் கல்விமான் அப்துல் அலீம் – அடுத்தநாள் ஜூலை 26 அகமதாபாத் குண்டு வெடிப்புக்குப் பிறகு சில நிமிசங்களுக்குள்ளாகவே போலீசால் கைது செய்யப்பட்டார்.**


படிப்பகம்

www.padippakam.com

நாவுடன் அமீன் அகமதா பாத்துக்குப் பறந்தான்; அவனுடைய உடையில் சிறு கசங்கல் கூட இல்லை. அவனுக்கு எதிரான வழக்கு எப்போதோ செத்துப்போய் விட்டது.

மவுலானா நசீருதீன் மற்றும் இரு மகன்களும் கொடுஞ்சிறையில். அந்த மகன்களைப்பெற்ற தாய் கதறுகின்றாள்: ''எங்கள் குடும்பத்திலிருந்து மூன்று பேர் மீது பொய்வழக்கு. என்னையும் சேர்த்துச் சிறையில் தள்ளட்டும். பிறகு, எங்களை ஒன்றாகவே சேர்த்து சுட்டுக் கொன்று விடட்டும், வசதியாக இருக்கும்.''




●●●

அப்துல் முபீன், உத்திரப் பிரதேச மாநிலம் பக்வா கிராமம். இவர் மீது ஒன்றன் பின் ஒன்றாகப் பொய்யாக 4 கிரிமினல் தீவிரவாத வழக்குகள். முதல் வழக்கு செப் 2000 இல் போடப் பட்டது. பிறகு அடுத்தடுத்து வழக்குகள். ஒவ்வொரு வழக்கையும் அது பொய் என்று நிரூபிக்க இரண்டு, மூன்று ஆண்டுகள் எடுத்தன. நான்காவது வழக்கு மட்டுமே எட்டு நீண்ட ஆண்டுகளாக நடந்தது. முதல் இரு வழக்குகளிலுமே அவர் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டது. ஆகஸ்டு 6, 2008 இல்தான் முபீன் விடுதலை ஆனார்.

மேலே சொன்ன நான்கு வழக்குகளிலுமே 'இவர் சிமி உறுப்பினர்' என்று பொய் சொல்லப்பட்டது - எப்படியாவது 'சிமி' யைத் தடைசெய்ய வேண்டும் என்பதற்காக. சாட்சி: அப்துல் முபீன் போலீசில் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட வாக்குமூலம்.

முதல் வழக்கில் முபீன் சிறை சென்றபோது அவரது கடைசிக் குழந்தையான மகள் ஜைனாவுக்கு வயது ஆறேமாதம். இப்போது 2008 இல் முபீன் விடுதலையாகி வந்து பார்க்கும்போது அவளுக்கு அப்பாவைப் பார்க்க ஒரே வெட்கம். இந்த முபீன் விடுதலையான நான்காம் நாள், 'இந்துஸ்தான் டைம்ஸ்' நாளேடு ஆகஸ்டு 10, 2008 அன்று சிமியைப் பற்றி முழுப்பக்கக் கட்டுரை ஒன்றை வெளியிட்டது. முபீன் சிமியின் முதல் தீவிரவாதி என்று எழுதியது; குற்றம் நிரூபிக்கப்படாத போதும் அவர்தான் முதல் தீவிரவாதி என்று எழுத இந்துஸ்தான் டைம்ஸ் வெட்கப்படவில்லை. முபீனுக்கும் 'சிமி'க்கும் ஜனநாயக மறுப்பு, சித்திரவதைகள், பலப்பல பொய் வழக்குகள்; 'இந்துஸ்தான் டைம்ஸ்'க்கோ பொய்களை இரைத்துக் கதைகள் விற்க வானளாவிய உரிமை.

●●●

அபுல் பஷார் குவாஸ்மி உ.பி.யைச் சேர்ந்த இசுலாமியக் கல்விமான். 23 வயதே நிரம்பிய இளைஞர். ஓராண்டுக்கு முன் தனது திருமணத்தை முடித்திருந்த குவாஸ்மி தம்பிக்கும் திருமணம் செய்து வைக்க அங்கங்கே சொல்லி வைத்திருந்தார். இதை மோப்பம் பிடித்த போலீசு தரப்பு கடந்த ஆகஸ்டில் பெண்வீட்டார் என்று சொல்லிக் கொண்டு குவாஸ்மியின் வீட்டுக்குள்ளே நுழைந்தது. வெளியே அவர்கள் மாருதி வேனை நிறுத்தியிருந்தார்கள். உள்ளே தடதடவென நுழைந்த இரண்டு போலீசோ குவாஸ்மியைத் தரதரவென்று இழுத்துச் சென்று மாருதி வேனில் திணித்துக் கொண்டு பறந்து போனார்கள்.

இரண்டு நாள் கழித்து, குஜராத் போலீசு அதிகாரி பி.சி. பாண்டே அகமதாபாத் குண்டு வெடிப்பைத் திட்டமிட்டவன் குவாஸ்மிதான் என்று அறிவித்தான். 'பாண்டே' கேள்விப்பட்ட பெயராகத் தெரிகின்றதா? ஆமாம், குஜராத்தில் 2000 அப்பாவி முசுலீம்களின் படுகொலைகளில் ஆர்.எஸ்.எஸ், வி.எச்.பி, பஜ்ரங் தள் மூன்றோடும் தீவிரமாக இறங்கி நரவேட்டையாடியவன்தான் பாண்டே. இதற்காக அவன் பதவி உயர்வும் வாங்கிக் கொண்டான்.

ஆனால் குவாஸ்மி ஒரு அப்பாவி; கிழக்கு உ.பி.யிலுள்ள அசாம்கர் நகரத்தின் அருகே ஒரு சிறு கிராமத்தைச் சேர்ந்த கூச்ச சுபாவமுள்ள அப்பாவி. போலீசோ அவனைச் 'சிமி'யின் தலைவன், குஜராத் படுகொலைகளுக்குப் பழி வாங்கத் துடித்த 'புனிதப் போராளி' (ஜிகாதி) என்று விவரித்தது. ஊடகங்கள் தங்களது பங்குக்கு குவாஸ்மி இந்தியாமுழுக்கப் பயணம்செய்து தீவிரவாத வலைப்பின்னலை உருவாக்கியவன் என்றும், கேரளத்தில் செயல் வீரர்களை வடிவமைத்தவன் என்றும் கலர்கலராகச் செய்திகளை விற்றன.

ஆகஸ்டு 14-இல் குவாஸ்மியை இழுத்துச் சென்ற போலீசு இரண்டுநாள் கழித்து மறுபடியும் அவரது வீட்டுக்கு வந்தது. அவரது தந்தை, தம்பி, தங்கைகளை வெளியே பிடித்துத் தள்ளி விட்டு வீட்டைச் சல்லடை போட்டுச் சலித்து சோதனை போட்டது. வீட்டிலிருந்த மூட்டைப் பூச்சி மருந்து மற்றும் ஒரு மெட்டல்கிளீனிங் பிரஷ்ஷைக் கவனமாகப் பொட்டலம் கட்டி எடுத்துச் சென்றது. அபு பக்கீர் பயத்தோடு கேட்டார்: ''இவற்றை என் பையன் குண்டு தயாரிக்கத்தான் பயன்படுத்தினான் என்று போலீசு சொல்லி விடுவார்களோ?''

குவாஸ்மி 'சிமி' உறுப்பினர் அல்ல; இசுலாமிய இறையியல் முடித்துள்ள, வழக்குகள் ஏதுமில்லாத எளிய இளைஞர். இவரைப் போலீசு கடத்திச் சென்றது என்று உள்ளூர் மக்கள் போலீசிடமே முறையிட்டார்கள். அக்குடும்பத்துக்கே இப்போது ஊரார்தான் சோறு போடுகின்றார்கள்.

தந்தை அபுபக்கீர் சொல்கிறார்: ''நாங்கள் செய்த ஒரே தவறு முசுலீம்களாக இருப்பதுதான்.''

● குப்பண்ணன்


படிப்பகம்

www.padippakam.com

# சோல்சனிட்சின்: 'அவலத்தில்' பிறந்த இலக்கிய

## அதிவானி

சோல்சனிட்சின் இறந்துவிட்டார். ஸ்டாலின் எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பு பனிப்போர் காலத்திய ரசிய வல்லரசு எதிர்ப்பு என்ற நோக்கங்களுக்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் உலகம் முழுவதும் கடை விரிக்கப்பட்ட சோல்சனிட்சின் தனது 89 வது வயதில் ரசியாவில் மரணமடைந்தார். அமெரிக்கா மற்றும் மேற்குலக ஏகாதிபத்தியங்களைப் பொருத்தவரை அவர்களுக்கு சோல்சனிட்சினின் உடனடிப் பயன்பாடு 80-களின் இறுதியிலேயே முடிவுக்கு வரத் தொடங்கிவிட்டது.

'கம்யூனிசத்தின் முடிவு' கைக்கு எட்டியபின், 'அறம்' 'ஆன்மீகம்' போன்ற மாயக்கவர்ச்சி கொண்ட சொற்களின் மூலம் கம்யூனிச எதிர்ப்புக்கு உணர்ச்சி வேகமூட்டிய சோல்சனிட்சின், உலக முதலாளி வர்க்கத்துக்குத் தேவைப்படவில்லை. அறமின்மையை நியாயப்படுத்தும் 'சித்தாந்தங்களின் முடிவு' தான் இப்போது அவர்களுக்குத் தேவையாக இருந்தது. இந்தத் தேவையை நிறைவு செய்ய பின்நவீனத்துவம் அரங்கிற்கு வந்து விட்டது. இவ்வகையிலும் சோல்சனிட்சின் ஒப்பீட்டளவில் அவர்களுக்குக் காலாவதியாகி விட்டார்.

'சோசலிசம் என்பது கம்யூனிஸ்டு கட்சி அதிகாரவர்க்கத்தின் ஆட்சியே' என்று முத்திரை குத்தி, கம்யூனிசத்தை அவதூறு செய்வதற்கு முதலாளித்துவத்திற்குப் பயன்பட்ட சோல்சனிட்சின் என்ற அந்த ஆயுதம், இன்று அதே அதிகார வர்க்க உளவுநிறுவனத்தின் முன்னாள் அதிகாரியான புடினின் திருக்கரத்தால் ஞானஸ்நானம் செய்து கொண்டு, புதிய ரசியாவின் புனிதச்சின்னமாகப் புத்துயிர்ப்பும் பெற்றிருக்கின்றது.

இவையெதுவும் சோல்சனிட்சின் ரசிகர்களான அறிவாளிகளையும் எழுத்தாளர்களையும் கடுகளவேனும் பாதித்ததாகத் தெரியவில்லை. ''நாஜிகளின் அடிமை முகாம்களுக்கு எந்த விதத்திலும் குறையாத முகாம்களை சோவியத் அரசு நடத்தியிருக்கின்றது. சோல்சனிட்சினின் கூற்றுப்படி இவற்றில் 6 கோடி முகாம்வாசிகள் வாட்டி வதைக்கப் பட்டிருக்கிறார்கள்'' என்று தனது அஞ்சலிக் கட்டுரையில் (காலச்சுவடு, செப்-2008) அசோகமித்திரன் குறிப்பிடுவது இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. சோல்சனிட்சின் பற்றிய இவர்களது கட்டுரைகள் அனைத்துமே அவரை 'ஸ்டாலின் காலக் கொடுங்கோன்மையின் தேவசாட்சியமாகவே' நினைவு கூர்கின்றன.

### அமெரிக்க அவதூறுகள் – அறிவாளிகளின் ராமர் பாலம்!

'ஸ்டாலின் ஆட்சியின் படுகொலைகள், வதை முகாம்கள் மற்றும் பட்டினிச்சாவுகள் குறித்த கட்டுரைகள் கம்யூனிசத்துக்கு எதிராக அமெரிக்காவும் மேற்குலகமும் நடத்திய ஆபாசமான பிரச்சாரப் போரின் அங்கமே' என்பது ஏற்கெனவே ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. மேற்கூறிய இந்தப் பிரச்சார யுத்தத்தை முன்நின்று நடத்திய ரடால்ஃப் ஹெர்ஸ்ட், 24 செய்தி ஏடுகளையும், 12 வானொலி நிலையங்களையும் கையில் வைத்திருந்த அமெரிக்க ஏகபோக முதலாளி. இவன் நாஜிகளின் நண்பன் என்பதுடன், 1934 இல் ஜெர்மனிக்கு சென்று இட்லரை சந்தித்துவிட்டு வந்த பின்னர், ரசியாவுக்கு எதிராக இட்லர் நடத்திய உளவியல் யுத்தத்தின் அங்கமாகவே இந்தப் பொய்ப்பிரச்சாரம் அவனால் நடத்தப்பட்டது என்பதையும் கனடா நாட்டுப் பத்திரிகையாளர் டக்ளஸ் டோட்டில் ஆதாரங்களுடன் மெய்ப்பித்தார். பின்னர், 'தி நேஷன்' எனும் அமெரிக்கப் பத்திரிக்கையும் இதனை உறுதி செய்தது.

இரண்டாம் உலகப்போரில் நாஜிகள் வீழ்த்தப்பட்ட பின், கம்யூனிச எதிர்ப்புப் புனிதப்போரை சி.ஐ.ஏ வும் பிரிட்டிஷ் உளவு நிறுவனமும் தொடர்ந்தன. 'மாபெரும் பயங்கரம்', 'சோகத்தின் அறுவடை' என்ற நூல்களை எழுதிய ராபர்ட் கான்குவெஸ்ட் என்ற அமெரிக்க பேராசிரியன், பிரிட்டனின் கம்யூனிச எதிர்ப்பு உளவுப்பிரிவின் அதிகாரியாக இருந்தவன். பின்னாளில் ரீகனின் தேர்தல் பிரச்சாரகனாக அதிகாரபூர்வமாகவும் நியமிக்கப்பட்டவன். இத்தகைய 'எழுத்தாளர்கள்' போட்டுக்காட்டிய கணக்கின்படி, ஸ்டாலின் கால ரசியாவில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் சிறைப்பட்டவர்களின் எண்ணிக்கை அந்நாட்டின் மக்கள் தொகையில் சரிபாதியை எட்டியது. இந்தக் கேலிக்கூத்துகள் எல்லாம் 1980 களில் ஆதாரப்பூர்வமாக அம்பலமாக்கப் பட்டன.

பிறகு, ரசிய கம்யூனிஸ்டு கட்சியின் ஆவணக்காப்பகத்தை கோர்ப்பசேவ் திறந்து விட்டார். படுகொலைகள் குறித்த புள்ளிவிவரங்கள் அனைத்தும் ஊதிப்பெருக்கப்பட்ட பொய்கள் என தரவுகள் நிரூபித்தன. எனினும், இந்த உண்மைகள் எதனையும் அறிந்துகொள்ள சோல்சனிட்சின் ரசிகர்களான அறிவாளிகள் விரும்பவில்லை.

சென்ற நூற்றாண்டில் பிரபல அறிவாளிகளாகக் கொண்டாடப்பட்ட ஜார்ஜ் ஆர்வெல், ஸ்டீபென் ஸ்பென்டர், ஆர்தர் கீஸ்லர், ரஸ்ஸல் முதலானோர் கம்யூனிச எதிர்ப்பு நூல்களை எழுதுவதற்காகவும், கம்யூனிச ஆதரவாளர்களைப் போலீசுக்குக் காட்டிக் கொடுப்பதற்காகவும் பிரிட்டிஷ் உளவுத்துறையிடம் சம்பளம் வாங்கினர் என்ற உண்மையும் 90 களின் இறுதியில் பிரிட்டிஷ் உளவுத்துறை ஆவணங்களின் வாயிலாகவே வெளிச்சத்துக்கு வந்தது. இதனைக் கேட்ட பிறகும் மேற்படி அறிவாளிகள் அவமானத்தால் கூனிக் குறுகவில்லை. குறைந்தபட்சம் தாங்கள் வழிமொழிந்த ஸ்டாலின் காலப் படுகொலை புள்ளிவிவரங்களில், ''கொஞ்சம்

> **அரை உண்மைகளையும் முழுப்பொய்களையும் பிசைந்து வனையப்பட்ட இலக்கியங்களால் உண்மைகள் தோற்கடிக்கப்படுவதொன்றும் வியப்புக்குரிய நிகழ்வு அல்லவே! புவியியல், வரலாற்று ஆய்வு முடிவுகளையெல்லாம் புறங்கையால் ஒதுக்கிவிட்டு, அமெரிக்காவில் குடியேறிய சனாதனியின் மனதை ஆக்கிரமித்திருக்கும் 'இராமன் பாலம்' போலவே, அறிவாளிகளின் மனதை ஆட்கொண்டிருக்கின்றது 'கம்யூனிசக் கொடுங்கோன்மை' எனும் புனைவு.**


படிப்பகம்

www.padippakam.com

உணர்ச்சிவசப்பட்டு மூன்று நான்கு சைபர்களை அதிகமாகப் போட்டு விட்டோமா?'' என்ற அளவிற்குக் கூட தங்களது கூற்றுக்களை இவர்கள் மீளாய்வுக்கு உட்படுத்தவில்லை. மாறாக கீஸ்லர், ஸ்பென்டர் முதலானோரையே பக்திப் பரவசத்துடன் இன்றும் தமது எழுத்துக்களில் மேற்கோள் காட்டுகின்றார்கள்.

அரை உண்மைகளையும் முழுப்பொய்களையும் பிசைந்து வனையப்பட்ட இலக்கியங்களால் உண்மைகள் தோற்கடிக்கப் படுவதொன்றும் வியப்புக்குரிய நிகழ்வு அல்லவே! புவியியல், வரலாற்று ஆய்வு முடிவுகளையெல்லாம் புறங்கையால் ஒதுக்கிவிட்டு, அமெரிக்காவில் குடியேறிய சனாதனியின் மனதை ஆக்கிரமித்திருக்கும் 'இராமன் பாலம்' போலவே, அறிவாளிகளின் மனதை ஆட்கொண்டிருக்கின்றது 'கம்யூனிசக் கொடுங்கோன்மை' எனும் புனைவு. அந்த வகையில் பார்த்தால் சோல்சனிட்சின் இன்னும் சாகவில்லை. இந்த பக்தர்களின் இதயத்திற்குள் உறங்கிக் கொண்டிருக்கின்றார்.

**சோல்சனிட்சின்:**
**சோசலிச எதிர்ப்பு ஆயுதத்தின் 'சோக'க் கதை!**


இரண்டாம் **உலகப்போரில்** ஒரு ரசியப் படைப்பிரிவின் கமாண்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்த சோல்சனிட்சின், தனது நண்பனுக்கு எழுதிய கடிதத்தில், ஸ்டாலினைப் பற்றியும் சோவியத் அரசு போரை வழிநடத்தும் முறையைப் பற்றியும் விமரிசித்து எழுதியதற்காகவும் அவரது நாஜி ஆதரவுப்போக்குக்காகவும் 'சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரம் மற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்' என்று குற்றம் சாட்டப்பட்டு, 7 ஆண்டு சிறைத்தண்டனையும், 3 ஆண்டுகள் உள்நாட்டிலேயே நாடுகடத்தலும் விதிக்கப்பட்டு 1945 இல் உழைப்புமுகாமுக்கு அனுப்பப்பட்டார். உடலுழைப்புப் பணிகளில் சிறிது காலம் ஈடுபடுத்தப்பட்ட பின், பாதுகாப்புத் துறையால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூடத்துக்கு மாற்றப்பட்டார். உழைப்புமுகாமில் தண்டனைக்காலம் முடிந்தபின், அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டது. தாஷ்கண்ட் மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப் பட்டு அவரது புற்றுநோய் கட்டுப்படுத்தப்பட்டது.

மேற்கூறிய பத்தாண்டு காலத்தில் அவர் 'இவான் டெனிசோவிச்சின் வாழ்வில் ஒரு நாள்', 'முதல் வட்டம்', 'கான்சர் வார்டு' என்ற மூன்று நாவல்களை எழுதினார். 1962 இல் குருச்சேவின் நேரடி ஆணையின் பேரில் 'இவான் டெனிசோவிச்சின் வாழ்வில் ஒரு நாள்' என்ற நாவல் வெளியிடப் பட்டது. 'முதலாளித்துவ மீட்பு, ஸ்டாலின் மீதான அவதூறு' என்ற தனது அரசியல் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்காக குருச்சேவ் மேற்கொண்ட இந்த நடவடிக்கை, அமெரிக்கா நடத்தி வந்த ஸ்டாலின் எதிர்ப்பு - கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்திற்கு வலுச்சேர்த்தன.

ஸ்டாலின் எதிர்ப்பு என்ற வரம்பைத் தாண்டி சோவியத் கொடுங்கோன்மை எந்திரத்தை வடிவமைத்தவர் லெனின்தான் என்றும், கம்யூனிசம் எனும் கொள்கையே கொடுங்கோன்மைதான் என்றும் சோல்சனிட்சினுடைய எழுத்துக்கள் விரியத் தொடங்கின. எனவே, குருச்சேவைத் தொடர்ந்து வந்த போலிக்கம்யூனிஸ்டுத் தலைமையால் அவரது எழுத்துகளை வெளியிட இயலவில்லை. எனவே, மற்ற இரு நாவல்களும், அவற்றைத் தொடர்ந்து ரசியாவில் இருந்தபடியே சோல்சனிட்சின் எழுதிய 'குலக் தீவுக்கூட்டம்' என்ற நாவலும் 60 களில் மேற்குலகில்தான் வெளியிடப் பட்டன.

மென்மேலும் தீவிரமடைந்து கொண்டிருந்த அமெரிக்க - ரசிய முரண்பாடுகளின் பின்புலத்தில் 1970 இல் 'குலக் தீவுக் கூட்டம்' நாவலுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1971 இல் மேற்குலகில் பிரசுரிக்கப் பட்ட 'ஆகஸ்டு 1914' என்ற அவரது வரலாற்று நாவலிலும் கட்டுரைகளிலும், புரட்சிக்கு முந்தைய ஜார் ஆட்சிக் காலத்தை பொற்காலமாகச் சித்தரித்ததுடன், ரசிய கிறித்தவ திருச்சபைமரபையும் புகழ்ந்து எழுதினார்.

1974-இல் ரசியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட சோல்சனிட்சின் 1994 இல் யெல்ட்சினின் வெற்றிக்குப் பின் ரசியா திரும்பினார். 1974 முதல் 2008 இல் அவர் இறக்கும் வரை அவர் 'பூரணமான சுதந்திர மனிதனாக'த்தான் இருந்தார். ஐரோப்பாவிலும் பின்னர் அமெரிக்காவிலும் இறுதியாக 'சுதந்திர' ரசியாவிலும் அவர் வெளியிட்ட கருத்துக்கள், அவரது சித்தாந்தக் கண்ணோட்டத்தையும், ஆளுமையையும் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுவதோடு, 1974-க்கு முந்தைய அவரது படைப்புகள் மீதும் புதிய ஒளியைப் பாய்ச்



சுகின்றன; அல்லது அவற்றை ஒரு முறையேனும் 'மறுவாசிப்பு' செய்யுமாறு அறிவாளிகளைக் கோருகின்றன. செய்வார்களா என்ன? 'தீ சுடும்' என்ற அறிவியல் உண்மை வறட்டுத்தனமென்றும், 'தீக்குள் விரலை வைத்து இன்பத்தைத் தீண்டும்' அழகியல் உண்மையே அறுதியானது என்றும் சாதிப்பவர்களன்றோ இலக்கியவாதிகள்!

**அவலத்திலிருந்து பிறந்த இலக்கிய அத்வானி!**

உயிர்மை, செப், 2008 இதழில் சுகுமாரன் எழுதுகிறார்: ''இவான் டெனிசோவிச்சின் வாழ்வில் ஒரு நாள்' என்ற குறுநாவலுடன் இலக்கிய உலகுக்குள் நுழைந்தார் சோல்செனித்சின். டெனிசோவிச் என்ற பாத்திரம் கட்டாய உழைப்பு முகாமில் அனுபவிக்கும் ஒரு நாள் வாழ்க்கையின் வாயிலாகத் தனது எட்டாண்டு காலத் துயர ஜீவிதத்தைச் சித்தரித்துக் காட்டினார். சோசலிச நிர்மாணம் என்ற இரும்புத் திரைக்குப் பின்னால் மனிதர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நாவல்


படிப்பகம்

www.padippakam.com

அம்பலப்படுத்தியது. நாவல் உருவாக்கக் காலத்தில் மார்க்சியம் மீதான நம்பிக்கையைத் துறந்தார். அவரது பின்னாள் வாழ்க்கையின் ஆதாரங்களாக மாறிய தத்துவத் தேடலும் கிறித்தவ விசுவாசங்களும் வலுவடைந்தன...''

இதன் பொருள் என்ன? அவர் தன்னுடைய 'துயரத்திலிருந்து' சமூகத்தின் துயரை உணர்ந்திருக்கிறார். தன்னுடைய அனுபவத்திலிருந்து, தான் கொண்டிருந்த கொள்கையையும் துறந்திருக்கின்றார்! சோல்சனிட்சினுக்கு வழங்கப்படும் இந்தக் கோட்பாட்டு நியாயத்தை நாம் அத்வானி அண்டு கம்பெனிக்கும் வழங்கலாமே! பிரிவினைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட 'சிந்து மாகாணத்து இந்து' என்ற முறையில் அவரது இந்துத்துவ விசுவாசம் வலுவடைந்தது கூட நியாயம்தானே!

சமூக நிலைமைகளை ஆராய்ந்து அதன் அடிப்படையில் வகுக்கப்படும் கொள்கை, தனது தனிப்பட்ட நலனுக்கோ அனுபவத்துக்கோ எதிராக இருந்தபோதிலும் அந்தக் கொள்கையைப் பற்றி நிற்பவர்களே மனித சமூகத்தின் முன்மாதிரிகள் ஆக முடியும். ஒரு படைப்பாளி சமூகத்தின் துயரில் தன் துயரைக் காண வேண்டும். மாறாக, தன் சொந்தத் துயரத்தின் முன் உலகை மண்டியிடச் சொல்லும் சோல்சனிட்சினின் இந்த மனோபாவம் ஒரு அற்பவாதம். அரசியல் அரங்கில் இதன் அவதாரத்திற்குப் பெயர்தான் துரோகம்.

**சமூக நிலைமைகளை ஆராய்ந்து அதன் அடிப்படையில் வகுக்கப்படும் கொள்கை, தனது தனிப்பட்ட நலனுக்கோ அனுபவத்துக்கோ எதிராக இருந்தபோதிலும் அந்தக் கொள்கையைப் பற்றி நிற்பவர்களே மனித சமூகத்தின் முன்மாதிரிகள் ஆக முடியும். ஒரு படைப்பாளி சமூகத்தின் துயரில் தன் துயரைக் காண வேண்டும். மாறாக, தன் சொந்தத் துயரத்தின் முன் உலகை மண்டியிடச் சொல்லும் சோல்சனிட்சினின் இந்த மனோபாவம் ஒரு அற்பவாதம்.**

சோல்சனிட்சின் உருவான ரசியா - உலகின் முதல் பாட்டாளிவர்க்கப் புரட்சியைச் சாதித்த தேசம். 1917 முதல் பகைவர்களால் சூழப்பட்டு தன்னந்தனியாகப் போரிட்டு உயிர் பிழைத்த தேசம்; தன்னுடைய ஆயிரமாண்டு பின்தங்கிய நிலையைப் பத்தே ஆண்டுகளுக்குள் துடைத்தெறிந்து விட்டு தொழில்மயமாக வேண்டும் அல்லது அழிந்துபட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்ட தேசம்; உடைமையை இழந்த வர்க்கங்கள் உவப்போடு இட்லருக்கு உதவக் காத்திருந்ததால் நண்பன் யார் பகைவன் யார் என்று இனம் காண முடியாமல் தவித்த தேசம்; முதல் சோசலிசநாட்டின் குரல்வளையை நெறிப்பதற்கு இட்லருக்கு ஆன உதவிகளையெல்லாம் செய்த நேசநாடுகளைச் சகித்துக் கொண்டு தன்னந்தனியாகப் போராடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட தேசம்; இத்தனைக்கும் இடையில் உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வில் இதுவரை காணாத உயர்வைக் கொண்டு வந்த தேசம்..! இந்தச் சூழலில், இந்தத் தேசத்தில்தான் சோல்சனிட்சினின் இலக்கியம் பறக்கின்றது. அவரது நுண்ணோக்கி கண்டுபிடித்த மனித அவலத்தின் பின்புலம் இதுதான்.

**உண்மை விளம்பியின் உள்மன அழுக்கு!**

கம்யூனிச எதிர்ப்பாளர்கள் சோல்சனிட்சினைக் கொண்டாடும்போது, தமது கம்யூனிச வெறுப்பையும் இயல்பாக வெளிக்காட்டி விடுவதால் அவர்களது நடுநிலை தானே அம்பலமாகி விடுகின்றது. ஆனால் சோல்சனிட்சினை 'மார்க்சிய நோக்கில்' எடைபோட்டு நியாயப்படுத்துகின்றார் எஸ்.வி. ராஜதுரை. (பார்க்க: 'ரசியப் புரட்சி: இலக்கியச் சாட்சியம்', 'சொல்லில் நனையும் காலம்' என்ற அவரது இரு நூல்கள்).

''சோல்சனிட்சின் சரியான கம்யூனிஸ்டோ இல்லையோ, அவரது கூற்றுகள் பல உண்மையானவை. படப்பிடிப்புகள் பல சரியானவை. தேவையானவையும் கூட. கம்யூனிஸ்டுகளாகத் தங்களைத் தம்பட்டமடித்துக் கொள்பவர்களை விட இவரது எழுத்தில் அதிகமான சமுதாய உண்மை அடங்கியிருக்கிறது'' என்கிறார்.

சமுதாய உண்மை கிடக்கட்டும். முதலில் வெறும் உண்மை இருக்கின்றதா என்று பார்ப்போம். 'லெனின் கிராடு முற்றுகையில் பல இலட்சம் மக்கள் நாஜிகளால் கொல்லப்பட்டதற்கு, இட்லர் மட்டுமல்லாமல் ஸ்டாலினும்தான் காரணம்' என்று சோல்சனிட்சின் குற்றம் சாட்டுவதை ராஜதுரையாலேயே சகிக்க முடியவில்லை. ''இது அன்றைய வரலாற்று நிலைமைகளையும் பாசிச எதிர்ப்புப் போரில் ஸ்டாலினின் சிறப்பான பாத்திரத்தையும் மறப்பதாகும்'' என்று குறிப்பிடுகின்றார்.

இது 'மறப்பது' குறித்த பிரச்சினையா, 'மறுப்பது' குறித்த பிரச்சினையா? ஆக்கிரமிப்பு வெறிபிடித்த ஒரு பாசிஸ்டையும், அந்த ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடிய தலைவனையும் சமமாக்கிக் குற்றம் சாட்டுவது 'மறதி'யில் சேரக்கூடிய விசயம் போலும்! சோல்சனிட்சினை இவ்வாறு எழுதத் தூண்டியவை இரண்டு காரணிகளாகத்தான் இருக்க முடியும். ஒன்று, 'தானும் தன்னை ஒத்தவர்களும் அநியாயமாகச் சிறைப்படுத்தப் பட்டதால்' ஏற்பட்ட வன்ம உணர்ச்சி.

அல்லது கம்யூனிசத்தால் தான் எந்த வகையிலும் நேரடித் துன்பத்தை அனுபவிக்காத போதிலும், அதன்மீது காங்குவெஸ்ட் போன்றோர் கொண்டிருந்த 'இயல்பான' சித்தாந்தத் துவேசம்.

சோல்சனிட்சினின் மூளையில் இரண்டு காரணிகளுமே செயல்பட்டிருக்கின்றன. இந்த மூளைதான், சித்தாந்தக் கறைபடியாத தூய இலக்கியப் பெருவெளியில் மிதந்தபடி சமுதாய உண்மையை உமிழ்கின்றதாம்.

**'அறம்' அருவாளெடுத்த கதை!**

சிறைப்பட்டிருந்த காலத்தில் 'அன்பு, அறம், அவலம்' என்பன போன்ற சூக்குமமான சொற்களின் வழியே அறிஞர் பெருமக்களின் மனதை உருக்கிய சோல்சனிட்சின், விடுதலை செய்யப்பட்ட பின், அதாவது 'உணர்ச்சித்தளை'யிலிருந்து விடுபட்டு, அவரது அறிவு 'சுதந்திரமாக' இயங்கும் சூழல் வாய்க்கப்பெற்ற பின், 'குண்டு, ரத்தம், கொலை' என்று பருண்மையான சொற்களில் நெருப்பைக் கக்குகின்றார். சோல்சனிட்சினைப் பற்றிப் புரிந்துகொள்ள வியத்நாம் போர் குறித்த அவரது கருத்தே போதுமானது.

வியத்நாம் மீது அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்பை, உலகப்போரில் வீசப்பட்ட குண்டுகளைக் காட்டிலும் அதிகமான குண்டுகளை வீசியும், ரசாயன ஆயுதங்களை அம்மக்கள் மீது பரிசோதித்தும் மனிதகுலம் அதுவரை கண்டறியாத கொடிய யுத்தமொன்றை அமெரிக்கா நடத்தியது. கம்யூனிஸ்டுகள் தலைமையில் அந்நாட்டு மக்கள் நடத்திய தேசவிடுதலைப் போரை உலகமே ஒருமித்த குரலில் ஆதரித்தது. போருக்கு எதிராக அமெரிக்க மக்களின் கலகமும் வெடித்தது.



படிப்பகம்

www.padippakam.com

வெறிகொண்ட அமெரிக்க பாசிஸ்டுகள் சிலரைத் தவிர வேறுயாரும் இந்த ஆக்கிரமிப்புப் போரை ஆதரிக்கவில்லை. சோல்சனிட்சினோ ''அமெரிக்கா ஆண்மையை இழந்து விட்டது'' என்று கூறி வியத்நாமிலிருந்து பின்வாங்கியதற்காக அமெரிக்காவைக் கண்டித்தார். வியத்நாமில் சிக்கிய அமெரிக்கப் போர்க்கைதிகளுக்கு 'கம்யூனிஸ்டுகள் இழைக்கும் கொடுமை'யை அமெரிக்கர்களுக்கே விளக்கி, 'ராம்போ சினிமா'க்களுக்கான திரைக்கதையை வழங்கினார்.

அமெரிக்க - ரசிய பனிப்போர் காலத்தில் போருக்கு எதிராகச் சமாதானத்தைப் பிரச்சாரம் செய்த அறிவுஜீவிகளைத் 'துரோகிகள்' என்று சாடுகின்றார் சோல்சனிட்சின். ரசியாவைக் காட்டி அச்சுறுத்தி அமெரிக்கா அணுஆயுதங்களை அதிகரிக்க வேண்டுமென வெறியூட்டுகின்றார். இந்தோனேசியாவில் கம்யூனிஸ்டுகள் படுகொலை செய்யப்பட்டதையும், கிரீஸின் பாசிச ஆட்சியையும் ஆதரிக்கின்றார். சோல்செனிட்சினின் பிற்போக்கு வெறியைப் பட்டியலிட்டு மாளாது.

**முன்னர் சோசலிசத்தின் கதை!**
**பின்னர் சூழ்நிலையின் கைதி!!**

இவற்றையெல்லாம் தனது நூலில் பட்டியலிட்டுக் கூறி விட்டு, ''சோல்சனிட்சினின் உலகக் கண்ணோட்டம் குழம்பிப்போன ஒன்று. ஆனால் அது அவரது கசப்பான அனுபவங்களின் விளைவாகப் பிறந்த ஒரு கண்ணோட்டம்'' என்று இதற்கெல்லாம் நியாயம் சொல்கின்றார் ராஜதுரை. ஒரு படைப்பாளியைக் 'கசப்பான' அனுபவத்துக்கு ஆளாக்கினால் உலகத்துக்கு என்ன நேரிடும் என்பதை இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டும் போலும்!

''ஜார் ஆட்சியில் தணிக்கை இல்லை, உளவுத் துறைக் கொடுமை அவ்வளவாக இல்லை, நாடு கடத்தல் இல்லை, உழைப்பு முகாம் இல்லை, ரசிய தேசிய இனம் பிற இனங்களை ஒடுக்கவில்லை; 1905, 1917 புரட்சிகளின் முன்னணியாளர்களில் யூத இனத்தவர் அளவுக்கு அதிகமாக இருந்தனர்'' என்பன போன்ற சோல்சனிட்சின் பொய்களை முதலாளித்துவ ஆய்வாளர்களே சங்கடத்துடன் பட்டியலிட்டுள்ளனர். ரசிய தேசவெறியும், யூத எதிர்ப்பு நாஜிஆதரவுக் கண்ணோட்டமும் அவரிடம் நிலவியதையும் பலர் ஒப்புக் கொள்கின்றனர். இவையும் கூட அவரது கசப்பான அனுபவங்கள் தோற்றுவித்த கண்ணோட்டங்களோ?

ரசிய உளவுத்துறையை எதிர்த்து இலக்கியத்தில் சண்டமாருதம் செய்துவிட்டு 2007-இல் புடின் கையால் தேசியவிருது வாங்கிய சோல்சனிட்சினிடம், ''ஒரு முன்னாள் கே.ஜி.பி அதிகாரியான புடின்,'' ரசிய அதிபர் ஆகியிருப்பது பற்றிக் கருத்துக் கேட்டார்கள் பத்திரிக்கையாளர்கள். ''புடின் கே.ஜி.பி.யில் உளவு பார்க்கும் அதிகாரியாகத்தான் இருந்தாரே தவிர, விசாரணை அதிகாரியாக இல்லை. முன்னாள் சி.ஐ.ஏ தலைவர் சீனியர் புஷ் அமெரிக்க ஜனாதிபதி ஆகவில்லையா?'' என்று கொஞ்சம் கூடக் கூச்சமில்லாமல் நியாயப்படுத்தினார் சோல்சனிட்சின்.

'சோசலிசக் கொடுங்கோன்மையை எதிர்த்து நின்ற சுதந்திரத்தின் ஒளிவிளக்கு', சுதந்திரம் கிடைத்தவுடன் ஏன் பாசிசத் தீவட்டியாக உருமாறியது? ஏனெனில், இது உருமாற்றமல்ல; தீவட்டிதான் ஒளிவிளக்காகச் சித்தரிக்கப் பட்டிருக்கின்றது என்பதே உண்மை.

**கொலைக்கண்ணாடியும் நிலைக்கண்ணாடியும்!**

எனினும் இலக்கியவாதிகள் இதனை ஒப்பமாட்டார்கள். ஒரு படைப்பாளியின் ஆளுமையை அவரது படைப்பின் வழியாகத்தான் மதிப்பீடு செய்ய வேண்டுமேயன்றி அவர் கொண்டிருக்கும் அரசியல் கண்ணோட்டத்திலிருந்து அல்ல என்பது அவர்களது கருத்து. ஒரு படைப்பாளியின் சமூக ஆளுமையும் படைப்பு ஆளுமையும் இருவேறு காற்றுப் புகாத பெட்டிகள் போலும்!

ஒரு கலைஞன் தன்னுடைய சித்தாந்தத் தற்சாய்வுகளுக்கு அப்பாற்பட்டு, கலையில் தோய்ந்து நிலைக்கண்ணாடி போல சமூக உண்மையைப் பிரதிபலிக்க முடியும் என்பதற்கு, டால்ஸ்டாயை உதாரணம் காட்டுகின்றார்கள் இலக்கியவாதிகள். நிலப்பிரபுத்துவக் கொடுங்கோன்மையின் கீழும் முதலாளித்துவச் சுரண்டலின் கீழும் மூச்சுத்திணறிக் கொண்டிருந்த ரசிய சமூகத்தையும், அதன் விவசாய வர்க்கத்தின் வாழ்க்கையையும் மனநிலையையும் பிரதிபலித்தார் டால்ஸ்டாய். கிறித்தவ சோசலிசம் எனும் சித்தாந்தம் டால்ஸ்டாயின் படைப்பூக்கத்திற்கு உந்துவிசையாக இருக்கவில்லை.

சோல்சனிட்சின் அத்தகையதொரு நிலைக்கண்ணாடி என்று ராஜதுரையாலேயே சொல்ல இயலவில்லை. ''அவர்



முன்னாள் கே.ஜி.பி. விளாதிமிர் புடின் கையால் விருது வாங்கும் சோல்சனிட்சின்

நிலைக்கண்ணாடி அல்ல, முப்பட்டைக் கண்ணாடி. அதில் ஊடுருவிச் சிதையும் ஒளிக்கற்றைகளைக் கொண்டு அவ்வொளியின் (அதாவது ஸ்டாலின் கால ரசியாவின்) தன்மையை அறிய முயல்கிறோம்'' என்கிறார் ராஜதுரை. ஆயின், கண்ணாடியின் பரிமாணத்தை எடை போடாமல், ஒளியின் தன்மையை எப்படி மதிப்பிட முடியும்? தனது சித்தாந்தக் கன பரிமாணம் பற்றி அந்த முப்பட்டைக் கண்ணாடியே வாக்கு மூலம் கொடுத்தாலும் அதனைப் புறக்கணிக்க வேண்டும் என்று கூறுவதன் நோக்கம் என்ன?

'ஆத்திரத்தில் அவன் தன்னை மீறிச் சென்றுவிட்டான்' என்று சோல்சனிட்சினின் கதாபாத்திரம் பேசும் ஒரு வசனத்தை மேற்கோள் காட்டி, அது சோல்சனிட்சினுக்கும் பொருந்தும் என்கிறார் ராஜதுரை. இவ்வாறு சோல்சனிட்சின் தன் வாயால் எப்போதுமே ஒப்புக் கொண்டதில்லை என்பது மிகவும் முக்கியமானது. 'தன்னை மீறிச் செல்லுதல்'! அடே


படிப்பகம்

www.padippakam.com

யப்பா, அறம் வழுவித் தப்புவதற்குத் தோதான பொந்துகளை வார்த்தைகளால் உருவாக்கும் வல்லமையில் வழக்குரைஞர்களை விஞ்சுகிறார்களே இலக்கியவாதிகள்!

என்ன செய்வது! கோபமும் துயரமும் கொப்பளிக்கும் தருணங்கள்தான் ஒரு மனிதனின் தணிக்கை செய்யப்படாத ஆளுமையை அறியத்தருகின்றன என்று நாம் கருதிக் கொண்டிருக்கின்றோம்.

தூக்குத் தண்டனையைத் தவிர்ப்பதற்காக வைஸ்ராய்க்கு கருணை மனு எழுதிய தந்தையைக் கண்டித்த பகத்சிங்கின் நடவடிக்கையும், பகத்சிங்கை தூக்கிலிடுவதற்கு வைஸ்ராயிடம் தந்திரமாக ஒப்புதல் அளித்த காந்தியின் நடவடிக்கையும், அவர்கள் 'தன்னை மீறிச் சென்ற' நடவடிக்கைகளா, அல்லது அவர்களது ஆளுமையின் செறிவான வெளிப்பாடுகளா?

அவ்வாறு மீறிச் செல்லாத 'தான்' (சோல்சனிட்சினின் அகம்) யார் என்பதை எதை வைத்துக் கண்டுபிடிப்பது? ஒரு மனிதன் தன்னைப்பற்றித் தானே கூறிக்கொள்ளும் கருத்துக்களிலிருந்து அல்லாமல், அவனுடைய செயல்களிலிருந்தும், சமூகம் அவனைப் பற்றிக் கூறும் கருத்துக்களிலிருந்தும் அவனை மதிப்பிடுவதா, அல்லது சம்பந்தப்பட்ட மனிதர்கள் தம்மைப் பற்றி எழுதி வைத்திருக்கும் தன்வரலாற்று நூலிலிருந்தோ, தன்னையும் பாத்திரமாக்கி அவர்கள் உருவாக்கும் புனைவுகளிலிருந்தோ அவர்களின் ஆளுமையை மதிப்பிடுவதா? காந்தியை மதிப்பிட வேண்டுமானால், அவருடைய செயல்பாடுகளையும், அவரைப்பற்றி அம்பேத்கரும், பகத்சிங்கும், இன்ன பிறரும் கூறிய கருத்துக்களைத் தூர வீசிவிட்டு 'சத்திய சோதனை'யில் மூழ்க வேண்டும் போலும்!

ஆயின், சோல்சனிட்சின் யார்? அவரது சொல்லும் செயலும் ரசியாவில் பிறக்க நேர்ந்த ஆர்.எஸ்.எஸ் காரர் என்பதையே காட்டுகின்றன. அவரது ரசிய தேசவெறி, பழமை குறித்த ஏக்கம், அழிந்து விட்ட ஜாராட்சி குறித்த அனுதாபம், நாஜி ஆதரவு, கம்யூனிச எதிர்ப்பு வெறி, ஏகாதிபத்தியக் கைக்கூலித்தனம், கிறித்தவப் பிற்போக்கும் போலி அறவுணர்வும் கலந்த ஒழுக்கவாத ஆன்மீகம் அனைத்தும் அவரை அந்தமானில் சிறை வைக்கப்பட்ட சாவர்க்கராகவே அடையாளம் காட்டுகின்றன.

இருப்பினும் உண்மையைத் தவிர வேறொன்றையும் பேசத் தெரியாத அரிச்சந்திரர்கள் (அல்லது சோல்சனிட்சின்கள்) கூட, தம்முடைய சொந்த முகத்தை நிலைக்கண்ணாடி மூலம் 'அறிய' விரும்பும்போது, லேசாகப் பவுடர் பூசி, தலையைச் சீவிக்கொள்வதில்லையா? இந்த அழகியல் 'உண்மை'யையாவது இலக்கியவாதிகள் ஒப்புக் கொள்வார்களா?

### இராமாயணத்தைப் புறக்கணித்துவிட்டு ராமர் பாலத்தை ஆய்வு செய்தது ஏன்?

சோல்சனிட்சின் குறித்த இந்தக் கட்டுரையில் ஸ்டாலினின் தவறுகள் பற்றிப் பரிசீலிக்கப்படவில்லை என்பதாலும் சோல்சனிட்சினை அவரது நாவல்கள் வழியாக மதிப்பீடு செய்யவில்லை என்பதாலும், 'நிச்சயமாக இது நடுநிலை தவறிய ஆய்வுதான்' என்று சோல்சனிட்சின் அபிமானிகள் அமைதி கொள்ளலாம். சோல்சனிட்சினை மதிப்பீடு செய்வது போன்ற பாவனையில் ஸ்டாலினையும் கம்யூனிசத்தையும் மதிப்பீடு (அவதூறு) செய்வது என்ற அழுகுணி ஆட்ட விதியை வேண்டுமென்றேதான் நிராகரித்திருக்கின்றோம்.

தோழர் ஸ்டாலினின் தவறுகள் எனப்படுபவை, 'சோசலிசத்தில் வர்க்கப் போராட்டம்' என்கின்ற, மனிதகுலம் இதுவரை கண்டிராத புதியதொரு வரலாற்றுச் சூழலில் நிகழ்ந்த தவறுகள். அவற்றை மீளாய்வு செய்வதும் மதிப்பீடு செய்வதும் பாட்டாளி வர்க்கத்தின் கடமை. அது முற்றிலும் வேறொரு தளத்தில் நடத்தப்பட வேண்டிய ஆய்வு. சமூக மாற்றத்துக்காக மக்களைத் திரட்டும் பணியில் யார் ஈடுபட்டிருக்கின்றார்களோ, அவர்களால் மட்டுமே அகச்சாய்வுகள் இன்றி இந்த ஆய்வில் ஈடுபட முடியும்.

கட்டின வீட்டுக்குப் பழுது சொல்லும் 'உரிமை' கொத்தனாருக்கு மட்டுமே உரித்தானது என்று நாம் கூறவில்லை. சீர் செய்யும் நோக்கில் பழுதை ஆய்வு செய்யும் 'அறிவு' பழுது சொல்லும் எல்லோருக்கும் இருப்பதில்லை என்பதையே சுட்டிக் காட்டுகின்றோம். இது அறிவுக்கும் நடைமுறைக்கும் இடையிலான மார்க்சிய உறவு.

'கம்யூனிஸ்டு கட்சி ஜனநாயகமில்லாத சிறை, அதன் தலைவர்கள் அதிகார போதை கொண்ட மூடர்கள், உறுப்பினர்கள் சொரணையற்ற மந்தைகள்' என்பதே அநேகமாக அறிவாளிகள் மற்றும் இலக்கியவாதிகள் கொண்டிருக்கும் கருத்து. சோசலிசத்தை ஒரு உன்னதமான அறம் என்று இவர்கள் கொண்டாடினாலும், அறம் வழுவாத ஒரு கட்சியை அவர்களே உருவாக்கிக் கொள்ளலாமென்றாலும், தங்களது ஜனநாயக உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, அவர்கள் தன்னடக்கத்துடன் அந்தப் பொறுப்பை நிராகரித்து விடுகிறார்கள். தங்களது மன உணர்வை வீரியப்படுத்தி தங்களுக்கே வழங்கிய காரணத்தால் அவர்கள் சோல்சனிட்சினை மோகிக்கிறார்கள். அவ்வளவுதான்.

ஆயின், சோல்சனிட்சின் யார்? அவரது சொல்லும் செயலும் ரசியாவில் பிறக்க நேர்ந்த ஆர்.எஸ்.எஸ் காரர் என்பதையே காட்டுகின்றன. அவரது ரசிய தேசவெறி, பழமை குறித்த ஏக்கம், அழிந்து விட்ட ஜாராட்சி குறித்த அனுதாபம், நாஜி ஆதரவு, கம்யூனிச எதிர்ப்பு வெறி, ஏகாதிபத்தியக் கைக்கூலித்தனம், கிறித்தவப் பிற்போக்கும் போலி அறவுணர்வும் கலந்த ஒழுக்கவாத ஆன்மீகம் அனைத்தும் அவரை அந்தமானில் சிறை வைக்கப்பட்ட சாவர்க்கராகவே அடையாளம் காட்டுகின்றன. ஆர்.எஸ்.எஸ் இதயங்களுக்கு அவலமே நேராது, அதிலிருந்து இலக்கியமும் பிறக்காது என்று நாம் கருதவில்லை.

•••

*குறிப்பு: 21 ம் நூற்றாண்டிலும் இவான் டெனிசோவிச் ஜீவித்திருந்தார். எனினும் அபுகிரைப், குவான்டனமோ சிறைகளில் அவர் அடைக்கப்படாததால், 21 ம் நூற்றாண்டின் மானுடச் சிக்கல் குறித்து தனது குரலைப் பதிவு செய்யும் வாய்ப்பு அவருக்கு மறுக்கப்பட்டு விட்டது. ஆகவே, அவரைப் பின்தொடர்ந்து எதிரொலித்திருக்கக் கூடிய குரல்களும் நெறிக்கப்பட்டுவிட்டன.*

**● மருத்துவன்**



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

இருக்குன்னு யோசிக்கறதுக்குப் பதில், இல்லாததைப் பத்திப் பேசுறதே தப்புங்குறீங்களே! இது வயலன்ஸ் இல்லையா? உங்க கருத்துப்படி சயின்ஸ் முன்னேறிய இந்த நாட்டில் வறுமை காரணமாகப் பெத்த பிள்ளைகளைக் கிணற்றில் போட்டு, தானும் தற்கொலை செய்ய முயற்சிக்கின்றாள் ஒரு தாய். நீங்க சொன்னபடி டெக்னாலஜி முன்னேறிய இந்த நாட்டில் இன்னும் மனித மலத்தைக் கையால் அள்ளும்படி வேலை வாங்கப்படறாங்க தாழ்த்தப்பட்ட தொழிலாளிங்க.. இப்படி ஒரு பகுதி உண்மை நிலவரத்தை மறச்சிட்டு நாடு பொதுவா முன்னேறி எங்கோ போயிட்டிருக்குன்னு நீங்க பேசறதுதான், அடுத்தவங்க மேல கருத்தைத் திணிக்கறது, அதுவும் தப்புத் தப்பா!''

''பாத்தீங்களா! நான் சொன்ன மாதிரி இதுபோல பத்திரிக்கைகளைப் படிச்சுப் படிச்சு நீங்களும் அதுவாவே மாறிட்டீங்க! இதெல்லாம் சீரியஸா படிச்சா.. அவ்ளோதான்.. சும்மா சொசைட்டியுல இப்படியும் ஒண்ணு இருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டு விட்டடணும் பாஸ்! தொடர்ந்து அதுலேயே நாலெட்ஜெ கொண்டு போனோம்னு வச்சுக்குங்க.. அப்புறம் எதைப் பாத்தாலும் எதிர்க்கச் சொல்லும்.. யாரைப் பார்த்தாலும் இதுதான் சரின்னு பேசச் சொல்லும்! சும்மா சித்தாந்தம் பேசிக்கிட்டு இருந்தா லைஃப்பே போரடிக்கும்.. ஜஸ்ட் வாட்ச் அண்ட லீவ் இட்..!''

''இப்ப நீங்க பேசறது ஒரு சித்தாந்தம் இல்லையா? உன்னை வரைக்கும் பாருங்குறதுதான் முதாலாளித்துவ சித்தாந்தம்.. என்னை சொன்னீங்க.. இப்ப நீங்க அதுவாவே மாறி என் மேல ஏன் உங்க சித்தாந்தத்தைத் திணிக்குறீங்க..? நீங்க திணிச்சா ஜஸ்ட் பேச்சு.. நாங்க பேசுனா திணிப்பு.. என்னங்க உங்க ஜனநாயகம்?''

''ஹலோ நீங்க ஆயிரம் சொல்லுங்க.. உங்கள மாதிரி பேசிக்கிட்டு இருக்குறவங்க ஊருக்கு ஒரு பத்துப் பேரு இருப்பீங்களா? எங்கள மாதிரி உள்ளவங்கதான் மெஜாரிட்டி.. இதுதான் பாஸ் யதார்த்தம்.. சும்மா ஏதாவது கற்பனையாப் பேசாதீங்க.. ஹா.. ஹா..''

''நாட்ல மெஜாரிட்டி நோயாளிங்க; எய்ட்ஸ் பிரபலமா இருக்கு. அதுக்காக அதை ஆதரிக்க முடியுமா? நேர்மையா, கருத்து சரியா தப்பான்னு பேசுங்க. அத வுட்டுட்டு மெஜாரிட்டி, மைனாரிட்டி எதுக்கு?''

''கருத்துன்னு கேட்டா.. நீங்க ஏத்துக்க மாட்டீங்க.. பட் பல இடத்துக்கும் போறதால ஐ நோ த ட்ரூத் வெரிவெல், பாஸ்! இந்த புரட்சி அது இதெல்லாம் எடுபடாது.. ஜனங்க ஏத்துக்க மாட்டாங்க.. நீங்க பேசிக்கிட்டே இருக்க வேண்டியதுதான்.''

''பாத்தீங்களா! ஜம்ப் ஆகுறீங்களே .. ஜனங்க இருக்கட்டும். நீங்க ஏத்துக்குறீங்களா.. இல்லையா..? அதச் சொல்லுங்க முதல்ல?''

''நோ.. நோ.. எனக்கு இந்த கம்யூனிசம்னாலே அலர்ஜி.. நீங்க சொல்றது சரியாவே இருந்தாலும் நான் ஏத்துக்க மாட்டேன். ஒருநாளும் கம்யூனிஸ்டா மாறவும் மாட்டேன்..''

''ஏன் மாறுனா என்னாகும்?''

''நான் ஏன் கம்யூனிஸ்டா மாறணும் .. எனக்குதான் எல்லா வசதியும் இருக்கே! ஐ ஆம் ஆல்ரெடி செட்டில்ட். ஸோ ஐ டோண்ட் வான்ட் எனி ரிஸ்க்!''

''இப்பதாங்க உள்ளபடியே உங்கள சரியாக அறிமுகப்படுத்திட்டு உண்மையைப் பேசுறீங்க.. உங்க வர்க்கத்துக்கு கம்யூனிசம், புரட்சி தேவையில்லைங்குறதுக்காக.. அதை மத்தவங்களுக்கும் தேவை இல்லைன்னு பேச்சுவாக்குல பிரச்சாரம் பண்றீங்க பாருங்க.. இதுதான் பிரைன்வாஷ்.. அடுத்தவங்க மேல கருத்தத் திணிக்கறது.. இப்ப புரியுதா!''

''பாஸ்! என்ன டென்சனாயிட்டீங்க போல. விட மாட்டேங்குறீங்க.. வரட்டா!.. டார்கெட் பிசினஸ் பாஸ்! டார்கெட் பிசினஸ்.. லேட்டாகுது.. வரட்டா!''

''புரியுது.. புரியுது.. டார்கெட்டோடுதான் இருக்கீங்க ..''

''ஓ! ஐ ஆம் அண்டர்ஸ்டேண்ட்.. பட் ஐ டோண்ட் கேர். ஹா.. ஹா.. ஹா..''

வறட்டுச் சிரிப்புடன் நகர ஆரம்பித்தார்.. வைரஸை நுண்ணோக்கி மூலம்தான் பார்க்க முடியும் என்று அறிவியல் சொல்கின்றது. என் கண்ணிற்கு முன்னால் ஐந்து அடி, இரண்டு சென்டி. மீட்டரில் ஒரு வைரஸ் அலட்டிக் கொள்ளாமல் நழுவிச் செல்வதைப் பார்த்து வியந்து நின்றேன்.

● சுடர்விழி




ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN / CCN / 84 / '06-'08

# மூன்றாவது வழிபாட்டுப் பாடல்

எனது சொற்கள்
மண்ணாய் மணத்த நாளில்
கோதுமைத் தாள்களின்
நண்பனாயிருந்தேன்.

எனது சொற்கள்
கொதித்துச் சீறிய நாளில்
இரும்புத் தளைகளின்
நண்பனாயிருந்தேன்.

எனது சொற்கள்
கற்களாய் உறைந்த நாளில்
தழுவிச் செல்லும் ஓடையின்
நண்பனாயிருந்தேன்.

எனது சொற்கள்
கலகமாய்க் கிளர்ந்த நாளில்
நடுங்கும் நிலத்தின்
நண்பனாயிருந்தேன்.

எனது சொற்கள்
புளித்த ஆப்பிளாய் சுருங்கிய நாளில்
நம்பிக்கை தளரா உள்ளங்களின்
நண்பனாயிருந்தேன்.

ஆனால்
சொற்கள் தேனாய்ச் சுரந்த தருணத்தில்....
ஈக்கள் மொய்த்தன
என் உதடுகளில்!

— மஹ்மூத் தார்வீஷ்

(ஆங்கிலம் வழி தமிழில் : புதூர் இராசவேல்)





மஹ்மூத் தார்வீஷ் பாலஸ்தீனப் போராளி. இழந்த தாய்நாட்டை மீட்கப் போராடி வரும் எல்லா பாலஸ்தீன மக்களும் நேசித்த கவிஞரும் கூட. 1948ல் இசுரேல் அரசு தார்வீஷின் கிராமத்தைச் சூறையாடி முற்றிலுமாக அழித்தபோது, அவரது குடும்பம் லெபனானுக்குச் சென்றது. விடுதலைத் தாகம் கொண்ட இளம் போராளியாக தனது இருபதாம் வயதுகளிலேயே இசுரேல் கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்து பணியாற்றினார். 1970ல் ரசியா சென்று படித்தார்; பிறகு பெய்ரூட்டிலும், பாரீசிலுமாக சுமார் 26 ஆண்டுகள் புலம்பெயர்ந்து வாழ்ந்தார். 1996ல் இசுரேல் திரும்பி, கொந்தளிப்பான 'மேற்குக் கரையில்' உள்ள ரமல்லாவில் தங்கினார்.

கவிதை, உரைநடைப் படைப்புக்களில் 30 தொகுதிகளை வெளியிட்டுள்ள அவர், கலை மக்களுக்கானது என்பதில் தெளிவான பார்வை கொண்டவர். தார்வீஷ் பாலஸ்தீன மக்களின் உயிர்மூச்சு; தாயகம் பிடுங்கப்பட்டவர், நீக்கப்பட்டவர், தாயகத்திற்கு ஏக்கம் கொண்டவர்களின் கம்பீரமான போராட்ட சாட்சி.

கடந்த ஆகஸ்டு 9, 2008 அன்று அவரது 66 வது வயதில் இதயநோய்ச் சிகிச்சையின் போது இறந்து போனார்.
பாலஸ்தீனத் தாயகத்தின் போராளியாகவும்,
புலம் பெயர்ந்தோரின் உரிமைக் குரலாகவும்,
கம்யூனிச உணர்வுமிக்க சர்வதேசியவாதியாகவும்
வாழ்ந்த கவிஞர் மஹ்மூத் தார்வீஷ்.

படிப்பகம்